REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 நவம்பர் 10 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 267 | Friday 10, November, 2023 | 28பக்கங்கள் | 50/-



**பணிக்கு சமுகமளிக்குமாறு ஊழியர்களுக்கு அழைப்பு**

## நுவரெலியா நகரிலுள்ள தபாலகத்தில் பாதிப்பின்றி முதலீட்டு நடவடிக்கைகள்



நுவரெலியா தபால் நிலையத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

இதன்பிரகாரம் இன்று முதல் அனைத்து தபால் ஊழியர்களையும் பணிக்கு சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

ஊடக அமைச்சில் நேற்று (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இக்கட்டடம் 1894 இல் கட்டப்பட்டது என்பதை நாம் அறிவோம். மேலும், 2007இல் தொல்லியல் திணைக்களம் தொல்லியல் மதிப்பு கொண்ட கட்டடம் என இதற்கு பெயரிட்டுள்ளது. எனவே, இக்கட்டடத்தை அவ்வாறே வைத்து முதலீடு செய்யுமாறு தபால் ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கத்தினர் 06

## பொதுப் போக்குவரத்துக்கான வாகன இறக்குமதிக்கு இனி அனுமதி இல்லை

**வழங்கப்பட்ட ஒருமாத கால அனுமதி நிறைவு**



பொதுப் போக்குவரத்துக்கான வாகனங்களை இறக்குமதிக்கு வழங்கப்பட்டிருந்த ஒரு மாதகால அனுமதி நிறைவடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அனுமதி வழங்கப்பட்ட மாதத்துக்குள் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை விடுவிக்க சந்தர்ப்பம் வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதன்படி பொது போக்குவரத்துக்கான எந்த வாகனத்தையும் இறக்குமதி செய்ய இனி அனுமதி இல்லை.

வாகனங்களின் தேவை, இடவசதி, எரிபொருள் செலவு, வாகன இறக்குமதிக்கான பரிவர்த்தனை தொகை போன்றவற்றில் விசேட கவனம் செலுத்தப்படுமென இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாட்டில் உணவுப் பணவீக்கம் 2024 இல் மேலும் குறைவடையும்



உணவுப் பணவீக்கம் அடுத்த ஆண்டில் மேலும் குறைவடையும் என வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நலின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டில் உணவுப் பொருட்களின் விலையை எந்தளவுக்கு கட்டுப்படுத்த முடியும் என்பதை புரிந்து கொள்வதற்காக, உணவு உற்பத்தி தொடர்பான அறிக்கைகள் கோரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (09) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் நலின் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் நலின் பெர்னாண்டோ,

நாம், கடந்த சில நாட்களாக நாட்டின் உணவு விலை மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பில் அவதானம் செலுத்தினோம். அதேபோன்று நமது நாட்டின் பொருளாதார 06

**எந்தவொரு தரப்பாரையும் ஆதரிக்கவில்லை**

# இலங்கை கிரிக்கெட்டை காப்பாற்றுவதே நோக்கம்

**ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு**



**பாராளுமன்றில் கிரிக்கெட் விவாதம் பொருத்தமானது**

இலங்கை கிரிக்கெட்டை காப்பாற்றுவதே தனது நோக்கமே தவிர, எந்தவொரு தரப்பாரையும் ஆதரிப்பதல்லதென ஜனாதிபதி நேற்று வலியுறுத்தியுள்ளார். தாம், எந்தத் தரப்புக்கும் ஆதரவளிக்கவில்லையெனவும், இலங்கை கிரிக்கெட்டை பாதுகாப்பதற்காக மட்டுமே முன்னிற்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். கிரிக்கெட் நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் விளையாட்டுத்துறை சட்டத்தை முற்றாக மாற்றியமைக்க வேண்டுமெனவும் 'சித்ரசிறி' அறிக்கையை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (09) பாராளுமன்ற கட்டடத் 06

**தற்காலிக தீர்வின்றி கிரிக்கெட்டுக்கு மிகவும் பொருத்தமான 'சித்ரசிறி' அறிக்கையை நடைமுறைப்–படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவிப்பு**

**இலங்கை கிரிக்கெட் அதிகாரிகள் நீக்கப்படவேண்டுமென்ற**

## ஆளும், எதிர்த்தரப்பின் ஒன்றிணைந்த பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றம்

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



ஆளும் தரப்பு மற்றும் எதிர்க் கட்சியினால் கொண்டுவரப்பட்ட இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின், தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பை உருவாக்கும் சட்டம் மூலத்தை அனுமதிக்கும் பிரேரணை, ஆளும் கட்சியின் வழிமொழிதலுடன் வாக்கெடுப்பின்றி சபையில் ஏக மனதாக நேற்று நிறைவேற்றப்பட்டது.

கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடிகளையடுத்து விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நியமித்த இடைக்கால குழுவுக்கு, மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்தது. இதையடுத்து,

இது தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க பாராளுமன்றத்தில் விசேட அறிவிப்பை விடுத்து கிரிக்கட் சபையின் பல ஊழல் , மோசடிகளை சபைக்கு வெளியிட்டார்.

இந்நிலையில் விளையாட்டுத்துறை அமைச்சரின் இடைக்கால குழுவுக்கு முழு ஆதரவு தெரிவித்த எதிர்க்கட்சிகள், இது தொடர்பில் விவாதம் ஒன்றைக் கோரின.

இதையடுத்து நடைபெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் மற்றும் ஆளும் தரப்பு முன்வைத்த பிரேரணையை விவாதத்துக்கு எடுப்பதற்கு ஆளும் கட்சியும் இணங்கியது.

இதன், பிரேரணை நேற்று முழு நாள் விவாதமாக நடைபெற்றது.

இந்த பிரேரணைக்கு எதிர்க்கட்சிகள் மட்டுமன்றி அரசு தரப்பிலும் 06

## நாட்டின் சனத்தொகையில் நீரிழிவு நோயாளர் 14.6 வீதமாக அதிகரிப்பு

**முறையற்ற உணவு முறை, மன உளைச்சலே காரணம்**



*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

நாட்டில் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சனத்தொகையில் நூற்றுக்கு 14.6 வீதமானோர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக 06

## சீனத் தூதுவர் நயினையில் வேட்டி அணிந்து வழிபாடு

*(யாழ். விசேட நிருபர்)*



யாழ். மாவட்டத்துக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த இலங்கைக்கான சீன தூதுவர் கி ஸென் ஹொங் தலைமையிலான குழுவினர், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதன்போது சீனத் தூதுவர் கி ஸென் ஹொங் இந்து சமய முறைப்படி வேட்டி அணிந்து ஆலய தரிசனங்களில் ஈடுபட்டார்..

நயினாதீவுக்கு விஜயம் செய்த சீன தூதுக்குழு, சீன அரசின் உலர் உணவுப் பொதிகளையும் மக்களுக்கு வழங்கினார். 06

**'யாழ். நதி' நீர்த் திட்டம் ஊடாக**

## வடமாகாண மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு



வட மாகாண மக்கள் அனுபவித்து வரும் பாரிய குடிநீர் பிரச்சினைக்கு வரைவில் தீர்வு காண்பது தொடர்பில், கலந்துரையாடப்பட்டு வருவதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதற்கு தீர்வு காணும் நோக்கில் 'யாழ்ப்பாண நதி' என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த பொறியியலாளர்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒட்டுமொத்தமாக, எமது பாரம்பரியத்துக்கு ஏற்ப தண்ணீர் 06

**பாராளுமன்றில் இடம்பெற்ற சம்பவம்**

## இராஜாங்க அமைச்சர் டயனாவின் விசாரணை அறிக்கை கையளிப்பு



இராஜாங்க அமைச்சர் டயனா கமகே மற்றும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே அண்மையில் இடம்பெற்ற குழப்பகரமான சம்பவம் தொடர்பில்

ஆராயவென நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை, எதிர்வரும் திங்கட்கிழமை (13) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவதர்னவிடம் கையளிக்கப்படவுள்ளது.

இவ்விவகாரம் தொடர்பாக ஆராய்ந்து பரிந்துரை வழங்க பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தலைமையிலான குழு நேற்று (09) மூன்றாவது முறையாக கூடி இறுதி 06

## அகவை 67 இல், அமைச்சர் டக்ளஸ் சர்வதேச இந்துமத பீடம் ஆசி



கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் 67ஆவது பிறந்த தினமான நாளில் (10) அவருக்கு எல்லாம் வல்ல இறைவன் நீண்ட ஆயுளையும் கீர்த்தியையும் வழங்க வேண்டுமென சர்வதேச இந்து மத பீடச் செயலாளர், கலாநிதி சிவ நெறிக் காவலர் சிவ ஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா வாழ்த்தியுள்ளார். 06

**உலகில் முதல் அதிர்ச்சித் தகவல்**

## தென் கொரியாவில் மனிதனை அடித்து கொலை செய்த Robo



தென் கொரியாவிலுள்ள தொழிற்சாலையொன்றில் கடமையாற்றும் இயந்திர மனிதனால் (ரோபோ) அங்கு தொழில் புரியும் நபர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

ரோபோ தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் நிறுவனத்தில் 06

**கிரிக்கெட்டை பாதுகாக்க**

## கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைவது அவசியம்

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



நாட்டின் கிரிக்கெட் விளையாட்டை பாதுகாப்பதற்கு ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற பேதமின்றி ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம் என, அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார். 06

## தலைமன்னார் கடலில் கைதான 38 இந்திய மீனவர்கள் விடுதலை

**படகு உரிமையாளர் டிச.16 இல் ஆஜராக உத்தரவு**

*(மன்னார் குறூப் நிருபர்)*

தலைமன்னார் கடற்பரப்பில் இரு வேறு சந்தர்ப்பங்களில், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 38 இந்திய மீனவர்களும் நேற்று வியாழக்கிழமை (09) மன்னார் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் 16இல், 02 படகுகளுடன் 15 இந்திய மீனவர்களும், கடந்த 29 இல்,மூன்று படகுகளுடன் 23 இந்திய மீனவர்களும் தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இம்மீனவர்கள் நேற்று வியாழக்கிழமை (09) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு மீண்டும் 38 இந்திய மீனவர்களும் நேற்று 06

## இலங்கை வந்தது ஜேர்மனியின் அதி சொகுசு Aida Bella கப்பல்



ஜேர்மனியின் Aida Bella சொகுசுக் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. Aida Bella சொகுசுக் கப்பல் நேற்று வியாழக்கிழமை (09) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இலங்கை வரும் கப்பலில் 1,900 பயணிகள் மற்றும் 730 பணியாளர் வருகை தந்துள்ளனர். 13 அடுக்கு மாடிகளைக் கொண்டுள்ள இக்கப்பலில் ஆயிரத்து 25 விருந்தினர் அறைகள், 06

**மின்சாரத் தடை முறைப்பாடுகள்**

## டிஜிட்டல் முறையில் அனுப்புமாறு CEB பொதுமக்களிடம் கோரிக்கை

நாட்டில் சீரற்ற காலநிலையால் ஏற்படும் மின் தடைகள் தொடர்பான முறைப்பாடுகளை CEB Care app அல்லது 1987 அவசர அழைப்பு நிலையத்தின் சுய சேவை மற்றும் IVR அமைப்பு போன்ற டிஜிட்டல் வழிமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ள வேண்டுமென, இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக மின் தடைகள் தொடர்பில் அழைப்பு நிலையங்களுக்கு கிடைக்கப் 06

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# ரோஹிணி கவிரத்ன எம்பி மீது தவறான சொற்பிரயோகங்கள்

## எதிர்க்கட்சியின் எதிர்ப்பால் சபை நடவடிக்கைகள் பாதிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி விஜேரத்னவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில், இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்த கூற்றுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் (08) சபையில் கடும் எதிர்ப்பை வெளியிட்டதால் சபை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

இராஜாங்க அமைச்சருக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் பிரதி சபாநாயகரை கோரியதால், சபையில் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

பாராளுமன்றம் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷவின் தலைமையில் கூடியது. வழமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து பிரதமரிடம் கேட்கப்படும் வினாக்கள் வேளையின் போது, ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி கவிரத்ன, ஓய்வூதியக்காரரர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கேள்விகளை எழுப்பினார்.

அந்த கேள்விக்கு உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த பதிலளித்தார். எனினும், இப்பதிலில் தாம், திருப்தியடைய முடியாதென ரோஹிணி குமாரி எம்.பி. தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் இதன் போது:கேள்விக்கான விடைகள் அமைச்சினால் எழுத்து மூலம் வழங்கப்படும். அந்த பதிலையே எம்மால் வழங்க முடியும். எனினும் ரோஹிணி குமாரி எம்.பியை எவ்வாறு மகிழ்ச்சிப்படுத்துவது என எனக்குத் தெரியாது. அவரை வேறு விதத்தில் மகிழ்ச்சிப்படுத்த யாராவது இருப்பார்களானால் அதனை மேற்கொள்ள முடியும் என்றார்.

இராஜாங்க அமைச்சரின் இந்த கூற்று ரோஹிணி எம்.பியின் கௌரவத்தை பாதிக்கிறது. பொருத்தமில்லாத இந்த வார்த்தையை ஹன்சாட்டிலிருந்து அகற்றுமாறும் அத்துடன் இராஜாங்க அமைச்சருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் ஆசனங்களிலிருந்து எழுந்து பிரதி சபாநாயகரை தொடர்ந்தும் வலியுறுத்தினர்.

இராஜாங்க அமைச்சரின் இந்த கூற்று அவதூறான வார்த்தை. அதற்காக அவர் மன்னிப்பு கோர வேண்டும் என எதிர்க்கட்சியின் பிரதமகொரடா லக்ஷ்மன் கிரியெல்ல, நளின் பண்டார, சமிந்த விஜேசிறி ஆகியோர் பெரிதாக குரலெழுப்பினர்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பெண்களை அகௌரவப்படுத்தும் இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்களை அனுமதிக்க முடியாது. உனடியாக இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# கெச்சிமலை தர்ஹாவில் புஹாரி மஜ்லிஸ் ஆரம்பம்



வரலாற்று பிரசித்திபெற்ற பேருவளை கெச்சிமலை தர்ஹாவில் நடைபெற்று வரும் வருடாந்த புனித ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹுல் முஸ்லிம் ஆகிய ஹதீஸ் கிரந்தங்களின் பாராயண மஜ்லிஸின் ஆரம்ப வைபவம் எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட் கிழமை அதிகாலை 4 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

சங்கைக்குரிய அஷ்ஷெய்ஹ் மௌலவி ஸக்கி அஹமத் (அஷ்ரபி) பின் அஷ்ஷெய்ஹ் முஹம்மத் காலிப் அலவி ஆலிம் அலவியதுல் காதிரி தலைமையில் ஆரம்பமாகும் இப்புனித மஜ்லிஸில் மார்க்க அறிஞர்கள், உலமாக்கள், முரீதீன்கள் பங்குபற்றுவர்.

வெள்ளிக்கிழமை தவிர ஏனைய நாட்களில் ஹதீஸ் பாராயணம் மற்றும் மார்க்கச்சொற்பொழிவு இடம்பெறுவதோடு டிசம்பர் 17 ஆம் திகதி (17.12.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் தமாம் நிகழ்வு இடம்பெறும்.

தமாம் வைபவத்தில் தரீக்காக்களின் இஹ்வான்கள், நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம் சகோதரர்கள் கலந்துகொள்வர்.

# களுத்துறை முஸ்லிம் ம. கல்லூரியில் வருடாந்த பரிசளிப்பு விழா






களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) வருடாந்த பரிசளிப்பு விழாவும் கல்லூரியின் 105ஆவது வருட பூர்த்தி விழாவும் நேற்று (09) கல்லூரியில் வெகு விமர்சையாக நடைபெற்றது. விழாவில் பிரதம அதிதியாக கல்லூரியின் பழைய மாணவரும் வெளிவிவகார அமைச்சருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.யூ.எம். அலிசப்ரி கலந்து சிறப்பித்தார்.

விசேட அதிதிகளாக 'சயீடா' அமைப்பின் இலங்கை இணைப்பாளரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான நௌஸர் பௌஸி மற்றும் சீன நாட்டு இலங்கைத்தூதுவர் சீ ஸென் ஹொங் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் களுத்துறை வலய கல்விப்பணிப்பாளர்கள் உட்பட பழைய மாண வர்கள், பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.




දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
Inland Revenue Department

கீழ்வரும் வருமான விபரத்திரட்டுகளை கோப்பிடுவதற்கு "இ–சேவைகள்" ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- வதிவுள்ள அல்லது வதிவற்ற கம்பனிகளுக்கு (CIT விபரத்திரட்டு)
- உருவகங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் (CIT விபரத்திரட்டு)
- பங்குடமைகள் (PIT விபரத்திரட்டு)
- தனியாட்கள் (IIT விபரத்திரட்டு)

வருமான விபரத்திரட்டானது 2023 நவம்பர் 30 அன்று அல்லது அதற்கு முன்னர் கோப்பிடப்படுதல் வேண்டும்

கீழ்வரும் வரிக் கொடுப்பனவுகளுக்கான கொடுப்பனவுத் திகதி 2023, நவம்பர் 15 அன்று அல்லது அதற்கு முன்னராகும்.

| வரி வகை | | வரி வகைக் குறியீடு | காலப் பகுதிக் குறியீடு |
|---|---|---|---|
| 2023/2024 ஆம் வரிமதிப்பீட்டாண்டிற்கான 2 ஆவது காலாண்டு தவணைக் கட்டணம் | கூட்டிணைக்கப்பட்ட வருமான வரி(CIT) | 02 | 23242 |
| | தனியாள் வருமான வரி (IIT) | 05 | 23242 |
| | பங்குடமை வருமான வரி (PIT) | 09 | 23242 |
| ஒக்டோபர் மாதத்தில் நிறுத்திவை-க்கப்பட்டவை | வட்டி மீதான முற்பண வருமான வரி (AIT)/ நிறுத்திவைத்தல் வரி (WHT) | 43 | 23100 |
| | கட்டணங்கள் மற்றும் ஏனையவற்றின் மீதான முற்பண வருமான வரி (AIT) / நிறுத்திவைத்தல் வரி | 44 | 23100 |
| | முற்பண தனிநபர் வருமான வரி (APIT) | 03 | 23100 |
| கொடுப்பனவு வகை | | S | |

விபரத்திரட்டினை நிரப்புவதற்கான வழிகாட்டல்கள் www.ird.gov.lk என்ற உள்நாட்டு இறைவரி திணைக்கள வலைதளத்தில் உள்ளது (பதிவிறக்கங்கள் > படிவங்கள் & விபரத்திரட்டு)

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

IRD 1944

வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக

வலைத்தளம் : www.ird.gov.lk https:www.facebook.com/irdcolsl

SELACINE

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 நவம்பர் 10 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினකරන්


தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | 04.41 |
| லுஹர் | 11.56 |
| அஸர் | 03.18 |
| மஃரிப் | 05.50 |
| இஷா | 07.02 |

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் ஐப்பசி 24

ராகுகாலம் : பகல் : 10.35 - 12.05 வரை
சுபநேரம் : காலை : 6.06 - 7.35 வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# அமெரிக்க பசிபிக் சிறப்பு கட்டளை தளபதி பாதுகாப்பு செயலருடன் சந்திப்பு

(ஸாதிக் ஷிஹான்)

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள அமெரிக்க பசிபிக் சிறப்பு நடவடிக்கைக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் ஜெரோமி பி வில்லியம்ஸ் நேற்று பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை மரியாதை நிமித்தம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஸ்ரீ ஜயவர்தனபுரயிலுள்ள பாதுகாப்பு அமைச்சில் நேற்று ( 09) இச்சந்திப்பு இடம்பெற்றது.

பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்த அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி தலைமையிலான உயர் அதிகாரிகளை வரவேற்ற பாதுகாப்பு செயலாளர், அவர்களுடன் சுமுக கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இக்கலந்துரையாடலில், இரு நாடுகளுக்கிடையிலுள்ள பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவது மற்றும் பயிற்சிகள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

ரியர் அட்மிரல் வில்லியம்ஸ் தளபதியாக பதவியேற்ற பின்னர், இலங்கையின் பாதுகாப்பு அமைச்சுக்கு மேற்கொள்ளும் முதலாவது உத்தியோகபூர்வ விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் தம்மிக்க வெலகெதர மற்றும் சிரேஷ்ட உதவி செயலாளர் சிந்தக்க அபேகோன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



# சுப்பர் வெல்த்' அதிர்ஷ்ட இலாப லொத்தர் பிரதமரிடம் கையளிப்பு



அபிவிருத்தி லொத்தர் சபை புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள ‘சுப்பர் வெல்த்’ அதிர்ஷ்ட இலாப லொத்தர் (09) பிரதமர் தினேஸ் குணவர்த்தனவுக்கு கையளிக்கப்பட்டது. பாராளுமன்றத்திலுள்ள பிரதமர் அலுவலகத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி அஜித் குணரத்ன நாரகல, பொது முகாமையாளர் அனுர ஜயரத்ன, பிரதி பொது முகாமையாளர்களான விஜித சோமரத்ன மற்றும் சானக தொடங்கொட ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வடகிழக்கு பாடசாலைகளுக்கு 13 இல் விசேட விடுமுறை வழங்க வேண்டும்

## வடக்கு கிழக்கு தமிழ் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

வடக்கு, கிழக்கு, தமிழ் பாடசாலைகளுக்கு எதிர்வரும் (13) திங்கட்கிழமை விசேட விடுமுறை வழங்குமாறு வடமாகாண தமிழ் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தீபாவளி பண்டிகை ஞாயிற்றுக்கிழமை நாளை மறுதினம் (12) கொண்டாடப்படுவதால், எதிர்வரும் (13) திங்கட்கிழமை விடுமுறை வழங்குமாறே கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னைய வருடங்களிலும், விடுமுறை நாட்களில் தீபாவளி தினம் வரும் வேளைகளில் திங்கட்கிழமை பாடசாலைகளுக்கு விடுமுறை

06

பாராளுமன்றின் தீர்மானங்களால்

# இலங்கை கிரிக்கெட்டை ICC தடை செய்தால் 225 பேருமே பொறுப்பு

## சபையில் அமைச்சர் கஞ்சன விஜேசேகர

லோரன்ஸ் செல்வநாயகம்



கிரிக்கெட் சபை தொடர்பில் பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானங்களின் அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் இலங்கை கிரிக்கெட் சபைக்கு எதிராக தடை விதித்தால், அதன் பொறுப்பை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏற்க நேரும் என அமைச்சர் கஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய சட்ட கட்டமைப்பை சட்டமூலம் ஊடாக அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை கிரிக்கெட் சபையின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நான்கு பேர் கொண்ட அமைச்சரவை உபகுழு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவை உபகுழுவின் நோக்கம் தேசிய அணியையோ அல்லது நிர்வாகத்தையோ தேர்ந்தெடுப்பதல்ல. கிரிக்கெட் சபைக்கு புதிய யாப்பை உருவாக்கி அதனை சிறந்த முறையில் முன்னெடுத்து செல்வதே அதன் செயற்பாடு.

இலங்கை கிரிக்கெட் சபை தொடர்பில் சபையில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

06

# IDM சர்வதேச பல்கலைக்கழகத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழா



இலங்கையிலுள்ள முன்னணி தனியார் கல்வி நிறுவனமான IDM Nations Campus International இன் வருடாந்த பட்டமளிப்பு விழா நாளை சனிக்கிழமை (11) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது 1,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்டமளிக்கப்பட்டு, சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

பிரிட்டனிலுள்ள IDM International இன் கிளை நிறுவனமாக செயற்பட்டு வரும் IDM Nations Campus International, இலங்கையில் கல்வியினூடாக தொழில் தரத்தை மேம்படுத்துவதற்காக IDM Nations Campus International உருவாக்கப்பட்டதுடன், தொழில் ரீதியான கல்வித் திட்டத்தில் கடந்த 40 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தையும் இந்தக் Campus கொண்டுள்ளமை சிறப்பம்சமாகும். அத்துடன், ISO தரச் சான்று வழங்கப்பட்ட கல்வி நிறுவனமாகவும் IDM Nations Campus International உள்ளது.

இலங்கையில் மாணவர்களுக்கு இளங்கலை, முதுகலை மற்றும் கலாநிதி பட்டப் படிப்புகளை வழங்குவதற்காக பிரிட்டனிலுள்ள Buckinghamshire New University மற்றும் மலேசியாவிலுள்ள Lincoln University College ஆகியவற்றுடன் IDM Nations Campus International இணைந்து செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.




தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 24ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் ஆகிர் பிறை 25

### குறள் தரும் சிந்தனை



இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி

வரும் துன்பத்தை எதிர் நின்று தாங்கக் கூடிய ஆற்றலுடையவர் இல்லாத குடியை அத்துன்பம், வென்று வீழ்த்திவிடும்.

## தனியார் துறையினருக்கு வழங்கப்படும் முன்னுரிமை

சுதந்திர இலங்கையின் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் எதிர்வரும் திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் என்ற வகையில் சமர்ப்பிக்கும் இரண்டாவது வரவு செலவுத்திட்டம் இது.

கடந்த வருடத்தின் ஆரம்பப்பகுதியில் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்த நாட்டை எவரும் பொறுப்பெடுக்க முன்வராத நிலையில், நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி, பொருளாதார ரீதியில் நாட்டை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்தார். அதன் விளைவாக பொருளாதார நெருக்கடி நிலவிய காலத்தில் நாடு முகம்கொடுத்த அசௌகரியங்களும் பாதிப்புக்களும் கட்டம் கட்டமாக நீங்கி நாடு மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்திருக்கிறது.

இவ்வாறான சூழலில்தான் நிதியமைச்சர் என்ற வகையில் இந்த வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் திங்களன்று சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

சுதந்திர இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் நான்கரை தசாப்தங்களுக்கும் மேற்பட்ட கால அனுபவத்தைக் கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்நாட்டில் ஏற்கனவே பல தடவை பிரதமர் பதவியை வகித்துள்ளார்.

இவ்வாறான பரந்த அனுபவப் பின்னணியில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை அவர் தயாரித்திருப்பதாகவே நிதியமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான நாட்டில் அவ்வாறான நெருக்கடி மீண்டும் ஒரு தடவை ஏற்பட்டு விடக்கூடாது என்பதே அனைத்துத் தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும். அதுவே ஜனாதிபதியின் விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும். அதற்கு ஏற்பவே பொருளாதார வேலைத்திட்டங்களை அவர் முன்னெடுத்து வருகின்றார். அதாவது நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதே அவரது இலக்காக உள்ளது.

அந்த வகையில் நாட்டின் சகல துறைகளிலும் கவனம் செலுத்தி பரந்த கண்ணோட்டத்துடன் இவ் வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அவற்றில் நாட்டின் தனியார்துறை குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நாட்டின் அரச துறையில் 14 இலட்சம் பேர் பணியாற்றுகின்றனர். ஆனால் தனியார் துறையிலோ 80 இலட்சம் பேர் கடமையாற்றுகின்றனர். அதனால் பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தனியார் துறையினரின் பங்களிப்பு இன்றியமையாததாகும். அந்தத் துறையினரின் பங்களிப்புக்களை ஒருபோதுமே குறைத்து மதிப்பிடவும் முடியாது. அத்துறை யினரின் பொருளாதார மேம்பாட்டுப் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

இந்தப் பின்புலத்தில் அடுத்தாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக தனியார் துறையினரின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் ஜனாதிபதி பெற்றுள்ளார். இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய விடயமாக நோக்கப்படுகிறது.

இந்நாட்டு பொருளாதாரத்தின் உண்மையான முதுகெலும்பாக கடந்த சில தசாப்தங்களாக தனியார் துறை விளங்கி வருகின்றது. இத்துறைக்கு கடந்த காலங்களில் உரிய இடம் அளிக்கப்படவில்லை. அரச துறைக்குத்தான் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

கடந்த வருடத்தின் ஆரம்பப்பகுதியில் நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுக்க இதுவும் முக்கிய பங்காற்றியுள்ளது. இதனை நாட்டின் பொருளாதார நிபுணர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்த வகையில் இவ்வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு தனியார்துறை நிறுவனங்களின் யோசனைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தனியார்துறையினருடன் கருத்துப் பரிமாறல்கள் நடத்தப்பட்டுள்ளன. இது பெரிதும் பாராட்டப்பட வேண்டிய நடவடிக்கையாகும்.

திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் இலங்கையைப் பொறுத்தவரையில் நாட்டைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு தனியார்துறையினரின் ஒத்துழைப்பும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அத்துறையினரின் பங்களிப்பு இன்றி நாட்டை முழுமையாகக் கட்டியெழுப்ப முடியாது.

இந்த நிலையில்தான் அரசாங்கத்தின் வருமானம் மற்றும் வினைத்திறனை அதிகரித்தல், முதலீடுகளை ஈர்த்தல், சுற்றுலாத்துறை மற்றும் ஆடைத் தொழில் துறை உள்ளிட்ட பல்வேறு தொழில்களுக்கு ஆதரவளிக்கும் வேலைத்திட்டங்கள் உட்பட பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தனியார் துறையினரை ஊக்குவிக்கவும் வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஆகவே 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தனியார் துறையினரின் பங்களிப்பை பெற்றுக் கொள்வதும் அத்துறையினரை ஊக்குவிப்பதும் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கும். அது மிகவும் அவசியமானது என உறுதிபடக் கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

## இனியநினைவுகளுடன் தாயகம் திரும்புகிறோம்





### தர்மப்பணி மேற்கொள்ள தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்த சாய் சமர்ப்பனா ஜெ. என். ஜெகத் ராம்ஜி கருத்து

இலங்கைவாழ் இந்திய வம்சாவளி மலையக மக்களின் அன்பான உபசரிப்பில் மகிழ்ந்து இனியநினைவுகளுடன் தாயகம் திரும்புகிறோம் என்று மாத்தளை, நாவலபிட்டி, நுவரெலியா, இரத்தினபுரி, பதுளை ஆகிய பகுதிகளின் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வஸ்திரதானம் வழங்குவதற்காக இலங்கை வந்திருந்த சாய் சமர்ப்பனாசாரி டபிள் ட்ரஸ்ட் நிர்வாக இயக்குனரும், தமிழ்நாடு தொழிலதிபருமான ஜெ. என். ஜெகத் ராம்ஜி தாயகம் திரும்புவதற்குமுன்னர் கருத்து தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு டி.எஸ்.டி அறக்கட்டளை கே. சசிகுமார் தலைமையில் மஞ்சள் பயணம் பவுண்டேசன் சி. சரவணகுமார், சாய் சமர்ப்பனாசாரி டபிள் ட்ரஸ்ட் ஜெ. என். ஜெகத் ராம்ஜி தம்பதிகள், நாமக்கல் தலைமை சேவாடிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் அக்னிராஜேஷ், சர்வதேச விளையாட்டு வீரரும் சமூகசிந்தனையாளரும், எழுத்தாளருமான முனைவர் மா. ரா. சௌந்தரராஜன், தொழிலதிபர் நாமக்கல் செல்வராஜ், திருச்சி ராஜ், சக்ரவர்த்தி மற்றும் டொக்டர் நடராஜா லால்பகதூர் உட்பட இருபதுக்கு மேற்பட்டோர் இந்நிகழ்விற்காக தமிழ் நாட்டிலிருந்து விஜயம் செய்திருந்தனர்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இந்த வஸ்திரதானம் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

முனைவர் மா. ரா. சௌந்தரராஜன் கருத்துத்தெரிவிக்கையில், "முதல் தடவையாக தர்மப்பணிகளை மேற்கொள்வதற்காக இலங்கைக்கு வந்திருந்த போது எமக்குப் பக்கபலமாக இருந்து, எமது பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவிய வெள்ளவத்தை மயூராபதி பத்திரகாளி ஆலய அறங்காவலர் பெரியசாமிசுந்தரலிங்கம், ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள், சிவாச்சாரியார்கள், ஆலய தொண்டர்கள் மற்றும் மாசித்தர்கள் அறக்கட்டளை, தமிழ்நாடு இலங்கை நம்பிக்கை பொறுப்பாளர் எச்.எச்.விக்கிரமசிங்க ஆகியோருக்கு எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இப்புனித நிகழ்வை ஆரம்பித்து வைத்த தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் அண்ணாமலை, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோருக்கும் நன்றியை தெரிவிகின்றோம்" என்றார்.

மஞ்சள் பயணம் பவுண்டேசன் சி. சரவணகுமார் கருத்துத் தெரிவிக்கையில், "குறுகிய காலத்தில் நாம் மேற்கொண்ட பணியை வெற்றிகரமாக நிறைவு செய்து தாயகம் திரும்புகின்றோம். எமக்கு விசா வழங்க உறுதுணை புரிந்த இந்துசமய கலாசார அலுவல்கள் பணிப்பாளர் வை. அனிருத்ரன், புத்தசாசன மற்றும் கலாசாரஅலுவல்கள் மேலதிக செயலாளர் எச்.என்.குமாரி மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார், மாமந்ரா அதிபர் லயன் எம்.மகேந்திரன் மற்றும் தினகரன், வீரகேசரி பத்திரிகைகளுக்கு நன்றிகள் கூற கடமைப்பட்டிருக்கின்றோம். இது எமதுஆரம்பம். மீண்டும் மீண்டும் இலங்கைக்கு விஜயம் செய்வோம். எமது உறவுகளோடு உறவாடவும் அவர்களுக்கு உதவ வேண்டும் என்பதுமே எமதுநோக்கமாகும்" என்றார். தலைமலை சேவா ட்ரஸ்ட் அக்னி ராஜேஷ் கருத்துத் தெரிவிக்கையில், "எமது அடுத்த பணியை தமிழ்_ சிங்களப் புத்தாண்டின் (2024) போதுஆரம்பிப்பதோடு, மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களையும் வழங்க இருக்கின்றோம். அரசு எமக்கு சுங்கத்தீர்வையை வழங்கினால் பெரும் உதவியாக இருக்கும்" என்றார்.

## கல்வியாளர், ஊடகவியலாளர் வி. ரி. சகாதேவராஜாவுக்கு கிழக்கின் உயரிய வித்தகர் விருது

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் உயரிய விருதான வித்தகர் விருதுக்காக காரைதீவைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கல்வித்துறையிலும் ஊடகத் துறையிலும் 35 வருட கால அனுபவம் பெற்ற தம்பிராஜா சகாதேவராஜா பல்துறை வித்தகராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் காரைதீவைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தம்பிராஜா (ஓய்வு நிலை தலைமைஆசிரியர்)_ கைலாயபிள்ளை தங்கநாயகம் தம்பதியினரின் மகனாவார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை இ.கி.ச. ஆண்கள் பாடசாலையிலும், உயர்கல்வியை மட்டக்களப்பு கல்லடி சிவானந்த வித்தியாலயத்திலும் பெற்றார். இவர் 1986 இல் டெலிக் ஆங்கில ஆசிரியராகவும், பின்னர் 1988 இல் விஞ்ஞான ஆசிரியராகவும் நியமனம் பெற்றார். இவர் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் விஞ்ஞானத் துறையில் பயிற்சி பெற்று அதே பாடசாலையில் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராக கடமை ஏற்றார். அதன் பின்பு 1999 இலிருந்து கடந்த 25 வருட காலமாக சம்மாந்துறை கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமை ஆற்றி வருகிறார்.

25 வருட காலமாக சமாதான நீதவானாகவும் சேவை ஆற்றி வருகிறார். பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் பட்டப் படிப்பை பூர்த்தி செய்த இவர் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டப்படிப்பையும் பூர்த்தி செய்தார். பின்னர் கல்வி முதுமாணிப் பட்டத்தையும் பெற்றார்.

1986 களிலிருந்து பல ஊடகங்களுக்கு இன்றுவரை எழுதி வருகின்றார். தேசியப் பத்திரிகைகளின் பிராந்திய செய்தியாளராகவும், கட்டுரை எழுத்தாளராகவும் பணியாற்றி வருகின்றார். சிறந்த ஆசிரியராக, தொழிற்சங்கவாதியாக, எழுத்தாளராக, பேச்சாளராக, அறிவிப்பாளராக, வர்ணனையாளராக, பல்வேறு அமைப்புகளின் தலைவராக, நிர்வாகியாக, சமூகசேவையாளராக, சமயப்பணியாளராகப் பணியாற்றி வருகிறார்.



இதுவரை ஆயிரக்கணக்கான காத்திரமான கட்டுரைகளை எழுதியுள்ளார். 'ஊழியில் ஆளி' என்ற சுனாமி நூலை 2005 இல் எழுதி வெளியிட்டார் .

1992 இல் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றத் தலைவராக பணியாற்றிய வேளை சுவாமி விபுலானந்தருக்கு நூற்றாண்டு விழா சிலை எழுப்பியதுடன், அங்கு வருடாந்தம் வெளியாகும் 'கலைச் செல்வி' சிறப்பு நூலுக்கு ஆசிரியராகவும் பணியாற்றினார் .

அம்பாறை மாவட்ட கலாசார சாகித்திய விழாவில் 2007_2008ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக இரு தடவை ஊடகத்துறை மற்றும் எழுத்து துறைகளில் ஆற்றிய பணிக்காக அம்பாறை மாவட்ட செயலகம் 'திகாமடுல்ல அபிமானி' என்ற விருதும் பாராட்டும் வழங்கியது.

இலங்கை அரசின் அதிஉயர் ஊடக விருதான ஜனாதிபதி ஊடக விருதுச் சான்றிதழ் இவருக்கு 2019 இல் வழங்கப்பட்டது. 'மக்கள் சேவை ஊடக விருது' 2007 இல் கொழும்பு கோல் பேஸ் ஹோட்டலில் வைத்து வழங்கப்பட்டது. 2008இல் அம்பாறை மாவட்ட சிறப்பு ஊடகவியலாளர் விருது இரத்தினபுரியில் வைத்து அன்றைய அமைச்சர் மஹிந்த சமரசங்கவினால் வழங்கப்பட்டது. அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் இத்தாலி மற்றும் பேங்கொக் நாடுகளில் அவர் விசேட பயிற்சி பெற்றுள்ளார்.

மேலும் சர்வசமயம், சமாதானம், கல்வி தொடர்பில் பங்களாதேஷ், மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் பயிற்சி பெற்றார். 2019 இல்இந்துசமய கலாசார அமைச்சு கலைச்சுடர் விருது வழங்கி கௌரவித்தது. காரைதீவு பிரதேச சபை 2007 இல் நடத்திய வித்ய சாகித்திய விழாவில் வித்யகலா ஸ்ரீ எனும் விருதையும் நிந்தவூர் பிரதேச சபை 2000 ஆண்டு நடத்திய விழாவில் விபுல ஸ்ரீ என்ற விருதும் வழங்கின. 2008இல் நாவிதன் வெளி பிரதேச செயலகம் நடத்திய சாஹித்திய விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது உட்பட பல விருதுகள் கிடைத்தன . 2009 இல் காரைதீவு பிரதேச செயலகம் நடத்திய சாஹித்ய விழாவில் விபுலமாமணி விருது வழங்கப்பட்டது.

2011 இல் அகில இனநல்லுறவு ஒன்றியம் சாம தேசமான்ய விருது வழங்கியது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவராகவும், அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராகவும், அம்பாறை மாவட்ட சர்வசமய சம்மேளனம் செயலாளராகவும், சமயங்களின் சமாதானத்திற்கான ஒன்றிய செயலாளராகவும், அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்க உபதலைவராகவும் சேவையாற்றினார்.

தற்போது காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம், விபுலானந்தா ஞாபகார்த்த மன்றம் மற்றும் காரைதீவு விளையாட்டுக் கழகம், மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம் போன்றவற்றின் ஆலோசகராகவும், மட். ஆசிரிய கலாசாலையின் 1991/92 புலன அணித் தலைவராகவும் பணியாற்றிவருகிறார்.

செல்லையா பேரின்பராசா...
(துறைநீலாவணை நிருபர்)

## உலகெங்கும் வாழும் நலிவுற்ற மக்களுக்கு 'மன்னர் சல்மான் சர்வதேச மத்திய நிலையம்' வழங்கும் மனிதாபிமான உதவிகள்

புனர்வாழ்வு மற்றும் மனிதநேய சேவைகளுக்கான மன்னர் சல்மான் சர்வதேச மத்திய நிலையத்தை தற்போதைய சவூதி அரேபிய மன்னர் மலிக் ஸலமான் 2015.05.12 அன்று ஹிஜ்ரி 1436 றஜப் 27 இல் உத்தியோகபூர்மாக ஆரம்பித்து வைத்தார். அவர் மன்னராக சத்தியப்பிரமாணம் செய்தவுடன் ஆரம்பித்த முதல் நலன்புரித் திட்டம் இதுவாகும்.

இந்நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டு பத்து வருடங்களும் கடந்திருக்காத நிலையில் தற்போது இந்நிறுவனம் உலகின் 50 இற்கும் மேற்பட்ட நாடுகளில் தனது கிளைகளை நிறுவி அதனூடாக அந்தந்த நாடுகளுக்கு இன,மத வேறுபாடுகளுக்கப்பால் மனிதநேயத்தின் பேரில் பல்வேறு தனிநபர், சமூகநலத் திட்டங்களையும், பாதிக்கப்பட்டோருக்கு புனர்வாழ்வளித்தல், மனிதாபிமான உதவிகளை வழங்குதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

உலகின் பல பகுதிகளிலும் பாதிக்கப்பட்டோருக்கான புனர்வாழ்வு மீள்கட்டமைப்பு வசதிகளை ஏற்பாடுசெய்தல், இலவச மருத்துவ முகாம்களை நடத்துதல், இருப்பிட வசதியற்றோருக்கு இலவசமாக வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்தல், கடன் சுமைகளால் சிறைவாசம் அனுபவிப்போரை அக்கடன்தொகையை அடைத்து விடுதலை செய்ய நடவடிக்கையெடுத்தல், பாடசாலைகளை நிர்மாணித்துக் கொடுத்தல், கல்விசார் உதவிகள், வறிய குடும்பங்களுக்கு மின்சாரம், குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பாதிக்கபட்ட குடும்பங்களுக்கு றமழான், பெருநாள்காலங்களில் உலர் உணவுப் பொதிகளை இலவசமாக வினியோகித்தல், மருத்துவமனைகளுக்குமருத்துவ சாதனங்கள் மற்றும் சுகாதார தேவைகளை வழங்குதல், சத்திரசிகிச்சைகளுக்காக வசதியற்றோருக்கு நிதியுதவி செய்தல், திடீர் அனர்த்தங்கள், மனிதப் பேரவலங்களின் போது உதவி செய்தல் போன்ற பணிகளில் இந்நிறுவம் ஈடுபட்டு வருகின்றது. இந்நிறுவனம் இதவரை ஆற்றியுள்ள முக்கியமான சில பணிகள் வருமாறு:

50 இற்கும் மேற்பட்ட வறிய நாடுகளிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்குசுமார் 20 ஆயிரம் உலர் உணவுப் பொதிகளை வழங்கும் 612 திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு திட்டத்தின் மூலமும் தலா 50,000 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. இலங்கையில் முதல்தடவையாக கடந்த வருடம் றமழான் மாதத்தில் கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதியில் வசிப்போருக்கு இவ்வுலருணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

550 மருத்துவ சிகிச்சை மற்றும் ஆரோக்கிய நலத்திட்டங்களை பல்வேறு நாடுகளிலும் நடத்தியுள்ளது. இதுகாலவரை 16,000 நோயாளர்களுக்கு இவ்வமைப்பினூடாக கண் சத்திரசிகிச்சை முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. காத்தான்குடி தளவைத்தியசாலையில் 650 நோயாளர்களுக்கும், தென்மாகாணத்தில் 650 ஏனைய இன மக்களுக்கும் இச்சத்திரசிகிச்சை முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டது.






திடீர் அனத்தங்கள், பூகம்பம், வெள்ள அபாயம் போன்ற அசாதாரண நிகழ்வுகளின் போது களத்துக்கு மீட்புப்பணிக் குழுக்களை அனுப்பி உதவிக்கரம் நீட்டுவதுடன், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் 15 திட்டங்களை இதுவரை இந்நிறுவனம் நிறைவேற்றியுள்ளது. கடந்த மூன்று மாதங்களுக்குள் துருக்கி, மொரோக்கோ, ஆப்கான், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் ஏற்பட்ட நிலநடுக்கம், வெள்ள அனர்த்தங்களின் போது இந்நாடுகளுக்கான விசேட விமான சேவை ஆரம்பிக்கப்பட்டு மீட்புக்குழுக்களும் (06ஆம் பக்கம் பார்க்க)

மௌலவி
ஏ.ஜி.எம் ஜலீல்...
மதனி, (பணிப்பாளர், அல்ஈமான் முன்மாதிரி கல்வி நிலையம்)
காத்தான்குடி

## இரா. துரைரத்தினம் எழுதிய 'கிழக்கில் சிவந்த சுவடுகள்' நூல் அறிமுக நிகழ்வு நாளை



சிரேஷ்ட ஊடகவியலாளர் இரா. துரைரத்தினம் எழுதிய 'கிழக்கில் சிவந்த சுவடுகள்' என்ற நூலின் அறிமுக நிகழ்வு நாளை 11 ஆம் திகதி பிற்பகல் 3.45 மணிக்கு திருகோணமலை நகராட்சி மன்ற பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

'அன்பின் பாதையில் எண்ணம் போல் வாழ்க்கை' கலை இலக்கிய மன்றத்தினரின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெறுகின்றது. எழுத்தாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான திருமலை நவம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண முன்னாள் கல்வியமைச்சர் சி. தண்டாயுதபாணி கலந்து கொள்வார். சிறப்பு விருந்திரனராக சிரேஷ்ட எழுத்தாளர் க. தேவகடாட்சம் கலந்து கொள்வார். இந்நிகழ்வில் கலந்து கொள்ள வருகை தருமாறு அனைவருக்கும் விழா ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

ஆலமுல் இஸ்லாம்
மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# இஸ்லாம் கூறும் குடும்பத் தலைவி

குடும்பத்தலைவி தன்னுடைய பொறுப்பை உணர்ந்து செயல்பட்டால், அநேக குடும்பங்கள் சுவனக் குடும்பங்களாக மாறிவிடும்.

நமது குடும்பங்களை இறைவன் விரும்பும் இஸ்லாமியக் குடும்பங்களாக மாற்றுவதில் இல்லாளின் பங்கு அளப்பரியது. குடும்பங்கள் இஸ்லாமியக் குடும்பங்களாக மாறாதவரை சமூக மாற்றமும் சாத்தியம் அற்றது. ஆரோக்கியமான குடும்பமே வளமான சமூகத்தை உருவாக்கும். ஆரோக்கியமான குடும்பத்தை உருவாக்குவதில் பெரும்பங்கு குடும்பத் தலைவிக்கே உள்ளது.

அல் குர்ஆன் அனைத்துத் துறைகளைக் குறித்தும் பொதுவாகவும் சுருக்கமாகவும் எடுத்தியம்பியுள்ளது. ஆனால் குடும்பவியல் குறித்து மட்டும் விரிவாகவும் விளக்கமாகவும் குறிப்பிட்டிருப்பதை அவதானிக்கலாம். இதன் ஊடாக குடும்பவியலுக்கு இஸ்லாம் கொடுக்கும் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ளலாம்.

நல்ல குடும்பம் என்பது அமைதியையும் மகிழ்ச்சியையும் அடித்தளமாகக் கொண்டே அமைக்கப்படுகிறது. குடும்பங்களில் அமைதியும் நிம்மதியும் ஏற்பட வேண்டுமெனில் தலைவனும்-தலைவியும், கணவனும்-மனைவியும் பரஸ்பரம் தமக்கிடையே நிறைவேற்ற வேண்டிய உரிமைகள், கடமைகள் பற்றிய அறிவைப் பெற்றிருக்க வேண்டும். கணவனும் மனைவியும் குடும்பத்தின் பங்காளர்களாவர்.

சிறந்த சந்ததிகளை உருவாக்குவதுதான் குடும்ப வாழ்வின் இலக்கு. இன்பகரமான குடும்பப் பின்னணியின் மூலம்தான் தூய சந்ததிகளை உருவாக்கலாம். அந்த இன்பகரமான குடும்பப் பின்னணியைத் தோற்றுவிப்பதில் குடும்பத் தலைவியின் பொறுப்பு பெரும் பங்காக இருக்க வேண்டும்.

குறிப்பாக பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் விஷயத்தில் குடும்பத்தலைவி முன்மாதிரித் தாயாகத் திகழ வேண்டும். வரலாற்றில் சாதனை படைத்த ஆளுமைகளுள் பெரும்பாலானோர் சிறு பருவத்திலேயே தாய்மார்களால் பட்டை தீட்டப்பட்டவர்களாகவே இருந்துள்ளனர். தாய்மார்களால் தனிக்கவனம் செலுத்தப்பட்ட பிள்ளைகளே பிற்காலத்தில் பெரும் ஆளுமை மிக்கவர்களாக திகழ்ந்துள்ளனர்.

அன்றைய தாய்மார் தமது பிள்ளைகளுக்கு ஊட்டும் அமுதுடன் அறிவையும் ஒழுக்கப் பண்பாடுகளையும் சேர்த்தே ஊட்டியுள்ளனர்.

அலி (ரழி) அவர்களை, "அறிவின் தலைவாசல்" என்று நபி (ஸல்) அவர்கள் சிலாகித்துக் கூறினார்கள். இதற்கான மூலகாரணம், அவரின் தாய் பாத்திமா பின்த் அசத் (ரழி) அவர்கள்தான். ஸுபைர் (ரழி) அவர்கள் அறிவும் ஞானமும் நற்பண்புகளும் மிக்கவராகவும் பெரும் வீரராகவும் திகழ்ந்தார்கள்.

"ஒவ்வொரு இறைத்தூதருக்கும் ஒரு மெய்க்காப்பாளர் இருப்பார். எனது மெய்க்காப்பாளர் ஸுபைர் (ரழி)" என்று பெருமானார் (ஸல்) அவர்களால் புகழாரம் சூட்டப்பட்டவர் அவர். இரண்டு கைகளிலும் இரண்டு வாள்கள் பிடித்து போர் செய்யும் ஆற்றல் பெற்ற தனிப்பெரும் வீரராகத் திகழ்ந்தார். இவ்வளவு சிறப்புக்கும் அவரது தாயார் ஸஃபிய்யா பின்த் அப்துல் முத்தலிப் (ரழி) அவர்கள் ஆவார்.

'இரண்டாம் உமர்' என்றும் 'நேர்வழி நின்ற ஐந்தாம் கலீபா' என்றும் வரலாற்று ஆசிரியர்களால் பெருமையுடன் பாராட்டப்படுபவர்தான் உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள். இவரது தாயார், உமர் (ரழி) அவர்களுடைய மகனான ஆஸிம் (ரழி) அவர்களுடைய மனைவியாகும். இப்பெண்மணி நற்குணத்திலும் இறையச்சத்திலும் இறை வழிபாட்டிலும் மிகச்சிறந்தவராக விளங்கினார். ஆகவே தமது மகனை ஒரு தலைசிறந்த ஆளுமை மிக்க முன்மாதிரியாக மாற்றிக்காட்டினார்.

இமாம் ஷாபி (ரஹ்) அவர்களை அறியாதவர்கள் இருக்க முடியுமா? சிறு வயதிலேயே தந்தையை இழந்தவர் அவர். ஆயினும் அன்னாரின் தாயார் இமாம் ஷாபி (ரஹ்) அவர்களைப் பேணி வளர்த்து, அமுதோடு அறிவையும் சேர்த்து ஊட்டி உலகம் போற்றும் உத்தம அறிஞராக மாற்றிக்காட்டினார். அனைத்துப் பெருமையும் அன்னாரின் தாயாரையேச் சாரும்.

இமாம் அவர்களின் தாயார் குறிப்பிடுகையில், "நான் எனது மகன் ஷாஃபிக்கு எப்பொழுதெல்லாம் பாலூட்ட நினைப்பேனோ அப்போதெல்லாம் உளு செய்துகொள்வேன்" என்று கூறியுள்ளார்.

பொதுவாக தந்தையைவிட தாய்தான் பிள்ளைகளுடன் மிகவும் நெருக்கமாகவும் அன்பாகவும் பழகுவார். அவர்களுடன் அதிக நேரத்தைச் செலவிடுவார். இதனால் தான் தாய்சேய் உறவு பலமடைகிறது. தாயின் மடியே பிள்ளைகளின் முதல் பள்ளிக்கூடமாகத் திகழ்கிறது. அங்கு கற்பிக்கப்படும் பாடங்களும், கற்றுக்கொள்ளும் ஒழுக்கங்களும்தான் பிள்ளைகளின் எதிர்காலத்தை வடிவமைக்கின்றன, சிறந்த ஆளுமைகளாக அவர்களை உருவாக்குகின்றன என்பதை குடும்பத் தலைவிகள் மறந்துவிடலாகாது.



ஒழுக்கத்தையும் நற்பண்புகளையும் சிறுவயதிலேயே கற்றுக்கொடுத்து அன்னையால் வார்த்தெடுக்கப்படும் பிள்ளைக்கும், தாயால் வளர்க்கப்படாத பிள்ளைக்கும் பெரிய வேறுபாடு உள்ளது. வரலாற்றின் பக்கங்களில் இருந்து இதனை நாம் அழகுறப் புரிந்து கொள்ளலாம்.

நூஹ் (அலை) அவர்களுடைய காலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது மலை உச்சி மீது ஏறி நின்ற தமது மகனை நபி நூஹ் (அலை) அவர்கள் அழைக்கின்றார்கள். அவனோ கப்பலில் ஏற மறுகின்றான். இக்காட்சியை அல் குர்ஆன் அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது, "அலைகள் ஒவ்வொன்றும் மலைபோல் உயர்ந்து கொண்டிருந்தது. நூஹுடைய மகன் தொலைவில் இருந்தான். அவர் தம் மகனை கூவியழைத்துக் கூறினார். "என் அன்பு மகனே! எங்களோடு நீயும் ஏறிக்கொள். நிராகரிப்பாளர்களுடன் இருக்காதே". அதற்கு அவன் பதிலளித்தான். "நான் இப்போதே ஒரு மலையின் மீது ஏறிக்கொள்கின்றேன். அது என்னை வெள்ளத்திலிருந்து காப்பாற்றிவிடும்." (11:42)

இறுதியில் என்னவாயிற்று..? அதையும் அல் குர்ஆனே விவரிக்கின்றது: "இதற்குள்ளாக இருவருக்குமிடையே ஓர் அலை குறுக்கிட்டுவிட்டது. மேலும் மூழ்கடிக்கப்பட்டவர்களில் அவன் சேர்ந்து விட்டான்!" (11:43)

இங்கு வாழ வருமாறு தந்தை அழைக்கின்றார். ஆனால் தந்தையின் அழைப்பை ஏற்காமல் நிராகரித்து மகன் தண்ணீரில் மூழ்கிப்போனான். நூஹ் (அலை) அவர்களின் மனைவியும் மகனின் தாயாரும் ஒரு முஸ்லிமாக இருக்கவுமில்லை, அவர் மகனுக்கு ஒழுக்கப்பண்புகளை கற்றுக்கொடுக்கவும் இல்லை.

அதே சமயம் இப்றாஹீம் (அலை) அவர்கள் தனது மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களை அழைத்தார். அதுவும் அறுத்துப்பலியிடவாகும். மகனின் பதில் என்னவாக இருந்தது? என்பதை அல் குர்ஆன் இவ்வாறு எடுத்தியம்புகிறது.

"என் அருமை மகனே! நான் உன்னை பலியிடுவதாய்க் கனவுகண்டேன். உனது கருத்து என்ன என்பதைச் சொல்!" அதற்கு அவர் கூறினார், "என் தந்தையே! உங்களுக்கு என்ன கட்டளையிடப்படுகிறதோ அதைச் செய்துவிடுங்கள். அல்லாஹ் நாடினால், என்னைப் பொறுமையாளர்களில் ஒருவனாகக் காண்பீர்கள்" (37:102)

இங்கு தந்தை மரணத்தை நோக்கி அழைக்கிறார். ஆயினும் மகனின் பதிலைப் பாருங்கள். இப்படியொரு வியத்தகு பதிலைக் கூறுவதற்குக் காரணமாக இருந்தவர் யார்? இப்ராஹீம் (அலை) அவர்களுடைய மனைவியும், இஸ்மாயீல் (அலை) அவர்களுடைய தாயாருமான ஹாஜரா (அலை) அவர்களாவர். அன்னாரின் பிள்ளை வளர்ப்பு அவ்வாறு சிறப்பாக அமைந்திருந்தது.

ஒரு தந்தை தனது மகனை வாழ்வதற்காக அழைக்கிறார். மகன் அவ்வழைப்பை ஏற்க மறுக்கிறான், நிராகரிக்கின்றான். அதேசமயம் இன்னொரு தந்தையோ தமது மகனை அறுத்துப் பலியிட மரணத்தை நோக்கி அழைக்கிறார். மகனோ உடனடியாக அவ்வழைப்புக்குச் செவி சாய்கின்றார்.

இரு மகன்களுக்கும் இடையே நிலவும் இவ்வேறுபாடு உணர்த்துவது என்ன? தாயின் வளர்ப்பு மிகச்சரியாக அமைந்துவிட்டால் பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக அமையும் என்பதையாகும். இதுவே இல்லற வாழ்வில் இல்லாளின் கடமை!

ஆகவே, நாமும் நமது குடும்பமும் நரக நெருப்பில் இருந்து காப்பாற்றப்பட வேண்டுமென்றால் அதற்கு தந்தையின் பங்களிப்பை விட தாயின் பங்களிப்பே அதிகம் தேவைப்படுகிறது. குடும்பத்தலைவி தன்னுடைய பொறுப்பை உணர்ந்து செயல்பட்டாலே போதும், அநேக குடும்பங்கள் சுவனக்குடும்பங்களாக மாறிவிடும் என உறுதிப்படக்கூறலாம்.

**அப்துல் ரஹ்மான்...**

# அகிலத்துக்கான முன்மாதிரிமிக்க அருட்கொடை

நபி (ஸல்) அவர்கள் கி.பி.570 ஆம் ஆண்டு மக்காவில் பிறந்தார்கள். அன்னார் நற்சிந்தனையும், கருணையும் கொண்டவராகவும், நேர்மைக்கு பெயர் போனவராகவும் காணப்பட்டார்கள். தனது 63 வயதில் கி.பி.632 இல் மரணித்தார்கள். இந்த இடைப்பட்ட காலத்திற்குள் மனித சமூகத்துக்கு உயர்ந்த முன்மாதிரிகளை வழங்கினார்கள்.



அல்லாஹ்விடமிருந்து அன்னாருக்கு ஒரு வெளிப்பாடு கிடைத்தது. அந்த வெளிப்பாடு தான் அருள்மறையாம் அல் குர்ஆன் ஆகும். இது அல்லாஹ்வின் போதனைகளையும், மனிதர்களுக்கான வாழ்க்கை வழிகாட்டுதல்களையும் கொண்டது. இக்குர்ஆனைக் கொண்டே நபி (ஸல்) அவர்கள் மக்களுக்கு வழிகாட்டினார்கள். அவர்களின் ஒவ்வொரு அசைவும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகவே அமைந்திருந்தது.

ஒரு முஸ்லிம் அல்லாஹ்வை வணக்கத்திற்குரிய நாயன், அவனைத் தவிர வேறு யாரும் வணங்குவதற்குத் தகுதியானவர் இல்லை என நம்பிக்கை கொண்டதும் நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என நம்பிக்கை கொள்வது ஈமானின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும்.

நபி (ஸல்) அவர்களது வாழ்வு உலக மக்களுக்கான முன்மாதிரி மிக்க வாழ்க்கை நெறியாகும். மனித சமூகத்திற்கான வழிகாட்டல்களை அல்லாஹ் அல்குர்ஆனில் கோட்பாடாக முன்வைத்து, அந்த வழிகாட்டல்களை நபி (ஸல்) அவர்கள் ஊடாக உலக மக்களுக்கு செயலுருப்படுத்திக் காட்டினான்.

அதாவது ஆட்சி முதல் அடுப்பங்கரை வரையான அனைத்து விடயங்களுக்கும் அன்னார் வழிகாட்டியுள்ளார்கள். மனித சமூகத்திற்கு ஏற்ற, நடைமுறை ரீதியான ஒரு மார்க்கம் இஸ்லாம் என்பதனை தனது முன்மாதிரிமிக்க வாழ்க்கையினூடாக நபி (ஸல்) அவர்கள் காட்டிச்சென்றார்கள். அன்னாரது போதனைகளும், வழிகாட்டல்களும் எல்லாக் காலத்துக்கும், எல்லா சமூகத்துக்கும் பொருத்தமானவையாகும். பண்பாடு, ஆன்மீகம், குடும்பவாழ்வு, சமூக வாழ்வு, அரசியல், தலைமைத்துவம், கொடுக்கல்வாங்கல்கள் போன்ற எல்லா விடயங்களிலும் ஒரு முன்மாதிரிமிக்க மனிதராக நபி (ஸல்) அவர்கள் விளங்குகிறார்கள்.

நபி (ஸல்) அவர்களின் மனைவியான ஆயிஷா (ரழி) அவர்களிடம் நபிகளாரின் வாழ்வு எவ்வாறு அமைந்திருந்தது என வினவப்பட்ட போது, அன்னாரது வாழ்வும், பண்பாடுகளும் முற்றிலும் குர்ஆனாகவே இருந்தது' என பதிலளித்தார்கள். (நபிமொழி)

மேலும் நபி (ஸல்) அவர்கள் நேர்மையானவராகவும், தைரியமானவராகவும் மாத்திரமல்லாமல் அன்பும், கருணையும் நிறைந்தவராக இருந்தார்கள். கேட்பவருக்கு இல்லையென சொல்லிராதவர். இருப்பதைக் கொடுத்துதவினார்கள். எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருந்தார்கள். மிருதுவாகப் பேசுவார்கள். எல்லோருடனும் நெருங்கிப் பழகினார்கள். குழந்தைகளோடு கனிவுடன் பேசுவார்கள். அவர்களை மடியில் வைத்துக் கொஞ்சுவார்கள். யாரைக்கண்டாலும் முதலில் ஸலாம் கூறுவது நபி (ஸல்) அவர்களின் வழக்கமாக இருந்தது. எவரையும் அவர் புறக்கணிக்கக்கூடியவராக இருந்ததில்லை.

அதேபோன்று விருந்தினர்களை கண்ணியப்படுத்தல், நிதானமான பேசுதல், சிறியவர் மற்றும் பெரியவர்களின் உணர்வுகளைப் புரிந்து நடந்தல் உள்ளிட்ட எல்லா விடயங்களிலும் அன்னார் முன்மாதிரியாக நடந்து கொண்டார்கள்.

சொத்துக்கள், செல்வங்கள் பல இருந்தாலும் இன்னும் வேண்டும் என்று பேராசைப்படும் மக்கள் வாழும் இவ்வுலகத்தில் இருப்பதையெல்லாம் நற்காரியங்களுக்கு வாரி வழங்கும் வள்ளலாக அன்னார் திகழ்ந்தார்கள். இதனால் வறுமை ஏற்பட்டு விடுமோ என்று அவர்கள் அஞ்சியதில்லை. ''வீசும் காற்றை விட அதிகமாக வாரி வழங்குபவர்களாக நபி (ஸல்) அவர்கள் இருந்தார்கள்'' என இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

மேலும் பொறுமையும், மென்மையும் நிறைந்தவராகவும் திகழ்ந்தார்கள். தலைவராக இருக்கும் அனைவருக்கும் பொறுமையும், மென்மையும் அவசியம். அப்போதுதான் தன்னைவிட கீழிருக்கும் மக்களை நல்வழிப்படுத்தவும், அவர்களின் செயல்கள் சில சமயங்களில் கோபத்தை ஏற்படுத்தும்படி இருக்கும்போது அவர்களிடம் மென்மையாக நடந்துக்கொண்டு பொறுமைகாத்து அவர்களுக்கு நல்வழிகாட்டவும் முடியும்.

அத்தகைய பெரும் நற்குணங்களை நபி (ஸல்) பெற்றிருந்ததால்தான் அன்றைய அரபு மக்களிடம் அல்லாஹ்வின் உதவியைக்கொண்டு மென்மையோடும், பொறுமையோடும் அன்னார் நடந்து கொண்டார்கள். நபி (ஸல்) அவர்கள் எவ்வித துன்பங்களை எதிர்கொண்டாலும் அதனையெல்லாம் பொருட்படுத்தாது நடந்து கொண்டதால்தான் அம்மக்களை அவர்களால் அரவணைத்துச் செல்ல முடிந்தது, வழிகாட்டவும் முடிந்தது.

மேலும் நபி (ஸல்) அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். ஒரு சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்தார்கள். கல்வி கற்க அனைவரையும் தூண்டினார்கள். யுத்த கைதிகளிடம் கூட அறிவை பெற தயங்கவில்லை. நபி (ஸல்) அவர்களிடம் 'திண்ணைத் தோழர்கள்' என்ற பெயரில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் முழு நேரம் கல்வி பெற்றார்கள்.

அதேபோன்று அவர்களின் குடும்ப வாழ்வியலை பொறுத்த வரையில் அவர்களது மனைவிமார்களுடன் நல்ல முறையில் நடந்துள்ளார்கள். அவர்களிடம் ஆலோசனை கேட்டு செயற்பட்டிருக்கின்றார்கள். வீட்டில் அவர்களுடைய வேலைகளை அவர்களாகவே செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள்.

எனவே அன்னாரை பின்பற்றும் ஒவ்வொருவரும் அன்னாரது வாழ்வையும் போதனைகளையும் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். அதுவே இஸ்லாத்தின் வழிகாட்டலாகும்.

**எம்.என்.பயாஸ் அஹமட்...**
தோப்பூர்.

# பொருளீட்டலின் மகிமை



மனிதனின் வாழ்கைக்குத் தேவையான செல்வத்தை திரட்டுவதற்கு உழைப்பு அவசியம். உழைப்பு இஸ்லாத்தின் பார்வையில் உயர்ந்த அந்தஸ்தை பெறுகிறது. தான் வியர்வை சிந்தி உழைக்காமல் பிறர் உழைப்பில் வாழ்வதை இஸ்லாம் தாழ்வாக கருதுகிறது.

ஒரு முறை நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதனின் சிறப்புக்கள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. அப்போது சில தோழர்கள், "அல்லாஹ்வின் தூதரே அவர் எங்களுடன் நீண்ட தூரம் பயணம் செய்தால் நாம் ஓரிடத்தில் தங்கினால் மீண்டும் பயணத்தை ஆரம்பிக்கும் வரை அவர் தொழுத வண்ணம் இருப்பார். நாம் பிரயாணம் செய்யும்போது நாம் தூங்கும் வரை திக்ர் செய்த வண்ணமே இருப்பார்" என்றார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், "அவர் பயணம் செய்த ஒட்டகத்தை மேயவிட்டவரும் அவருக்கு உணவு சமைத்துக் கொடுத்த வரும் யார்?" எனக் கேட்டார்கள் அதற்கு 'நாம் எல்லோரும்' என்று ஸஹாபாக்கள் பதில் கூறினர். அதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், 'அப்படியாயின் நீங்கள் எல்லோரும் அவரை விடச் சிறந்தவர்கள்' என்றார்கள். (நபிமொழி)

இச்சம்பவம் உழைப்பவர்கள் பிறர் உழைப்பில் தங்கி வாழ்வோரை விட மிகவும் சிறந்தவர்கள். அவர்கள் வணக்கவாளியாக இருப்பினும் சரியே என்பதை எடுத்துக்காட்டுகிறது.

மற்றொரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'ஒருவர் தொடர்ந்து யாசகம் கேட்டு வந்தால் மறுமையில் முகத்தில் சதையில்லாத நிலையிலேயே வருவான்' என்று கூறினார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

ஒரு சந்தர்ப்பத்தில் நபி(ஸல்) அவர்கள் உழைத்து வலுவேறிய ஒரு தொழிலாளியின் கையை நீண்ட நேரம் பற்றிப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

இதனைப் பார்த்தவர்கள் ஆச்சரியப்பட்ட போது நபி (ஸல்) அவர்கள் , நிச்சயமாக அல்லாஹ் தொழில் புரியும் விசுவாசியை நேசிக்கின்றான் என்று கூறினார்கள். (ஆதாரம்: தபரானி)

இஸ்லாத்தில் உழைப்பு முக்கியம் பெறப் பல காரணங்கள் உள்ளன. உழைப்பு அல்லாஹ்வின் அருளை தேடும் ஒரு முயற்சியாகும். 'அவன் தான் உங்களுக்கு பூமியை (நீங்கள் வசிப்பதற்கு) வசதியாக ஆக்கி வைத்தான். ஆகவே பல கோணங்களிலும் சென்று அவன் (உங்களுக்கு) அளித்திருப்பவைகளைப் புசித்துக் கொண்டிருங்கள்'. (அல்குர்ஆன் 67:15)

மேலும் (ஜும்ஆ ) தொழுகை முடிந்ததும் பூமியில் பரந்து சென்று அல்லாஹ்வின் அருளை தேடிப் பெற்றுக்கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 62:10)

உழைப்பு முஸ்லிமின் மீதுள்ள கடமையாகும். இஸ்லாமிய சட்ட விதியின் படி இஸ்லாம் முஸ்லிம்கள் மீது விதியாக்கியுள்ள கடமைகளுள் சில அவனது செல்வத்துடன் தொடர்புடையன. ஸகாத், ஹஜ், குடும்பப் பராமரிப்பு போன்ற கடமைகளை நிறைவேற்ற செல்வம் அவசியம். எனவே செல்வத்தை உழைப்பின் மூலம் பெற்றுக்கொள்வது கடமை.

மேலும் உழைப்பு ஒரு வணக்கமாக கருதப்படுகின்றது. ஒரு செயலை இஸ்லாமிய வழிகாட்டலில் செய்யும்போது அது வணக்கமாகின்றது அது போலவே உழைப்பும் அவ்வழிகாட்டலுக்கு அமைய மேற்கொள்ளும் போது அது வணக்கமாக இபாதத்தாக மாறுகின்றது. எவர் ஹலாலான உழைப்பில் ஈடுபட்டு, களைப்படைந்த நிலையில் ஓர் இரவை அடைகின்றாரோ அவர் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிலையில் அவ்விரவை அடைந்தவராவார் என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: இப்னு மாஜா)

உழைப்பை ஒரு வணக்கமாக நோக்குவதன் காரணமாகத்தான், பொருளீட்டலில் ஈடுபடுவோருக்கு தொழுகையில் சிறிய சூராக்களை ஓதுவதற்கு இஸ்லாம் சலுகை அளித்துள்ளது.

ஆகவே (இரவில் நீங்கள் தொழுதால்) குர்ஆனில் உங்களுக்கு சாத்தியமான அளவு ஓதுங்கள். ஏனெனில், உங்களில் நோயாளிகள் இருக்கக் கூடும் என்பதனையும் வேறு சிலர் அல்லாஹ்வின் அருளாகிய பொருளைத் தேடி பூமியின் பல பாகங்களில் செல்ல வேண்டியிருக்கும் என்பதனையும் வேறு சிலர் அல்லாஹ்வின் பாதையில் போர் புரிய செல்ல வேண்டியிருக்கும் என்பதனையும் அவன் நன்கு அறிவான். ஆதலால் (உங்களுக்கு அவகாசத்துக்கு தக்கவாறு (கூட்டியோ குறைத்தோ) உங்களுக்கு சௌகரியமான அளவே ஓதுங்கள். (அல்குர்ஆன் 73 : 20)

மேலும் பொருளீட்டலின் போது தூய எண்ணம், அடிப்படை வணக்கங்களுக்கு தடையில்லாதிருத்தல், ஷரீஆவின் அனுமதி, ஷரீஆவின் வரையறைகளை மீறாதிருத்தல் போன்றவற்றை கடைபிடிக்கும் போது அவ் உழைப்பு நிச்சயம் வணக்கமாக அமையும்.

நபிமார்களும் தமது வாழ்வாதாரத்துக்காக தொழில்கள் செய்துள்ளனர். ஆதம் (அலை) விவசாயம் செய்துள்ளார்கள். அவரது மகனாகிய ஹாபில் பயிர்ச்செய்கையும் மற்றைய மகன் காபில் கால் நடை வளர்ப்பையும் தமக்குரிய விசேட தொழில் முயற்சியாக மேற்கொண்டுள்ளனர். மேலும் இத்ரீஸ் (அலை) அவர்கள் நெசவுத் தொழிலையும் நூஹ் (அலை) மற்றும் ஸகரிய்யா (அலை) தச்சுத் தொழிலையும் செய்துள்ளனர்.

நபி (ஸல்) அவர்களது காலத்தில் ஆண்களைப் போலவே ஸஹாபாப் பெண்மணிகளும் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். எடுத்துக் காட்டாக உம்மஹாதுல் முஃமின்களில் ஒருவரான ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி) அவர்கள் வலை பின்னி சீவியம் நடத்தியதைக் குறிப்பிடலாம்.

எந்தத் தொழிலைச் செய்தாலும் அதில் ஹலால் ஹராமைப் பேணுவது கட்டாயமாகும். எனவே முஸ்லிம்களாகிய நாம் எமது தொழிற்துறைகளில் இஸ்லாமிய ஷரிஆவைப் பேணிக் கொள்வது அவசியமாகும்.

மௌலவி
**எம்.யூ.எம். வாலிஹ்...**
(அல் அஸ்ஹரி), வெலிகம

# கம்பளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவிலில் கந்தசஷ்டி

நாவலப்பிட்டி சுழற்சி நிருபர் டி.வசந்தகுமார்

கம்பளை நாட்டுக்கோட்டை நகரத்தார் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவில் கந்தசஷ்டி பெருவிழா காலத்தில் விஷேட பூஜைகள் நடைபெறவுள்ளன.

கந்தசஷ்டி பெருவிழாவில் தினமும் காலை 7.30 மணிக்கு நித்தியப்பூஜையும் பகல் 11.30 மணிக்கு உச்சிக்கால பூஜையும் மாலை 5.00மணிக்கு மாலை சாந்திப் பூஜையும் இடம்பெறும்.

இங்கு தினமும் காலை 8.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகும். 13.11.2023 மாலை 6.30 மணிமுதல் விநாயகர் வழிபாடு புண்ணியாக வாஜனம் வாஸ்த்து சாந்தி, கணபதி ஹோமம் என்பன நடைபெறும். 14.11.2023முதல் 18.11.2023 வரை காலையில் அஸ்டோத்திர சத சங்காபிஷேகம் (108) நடைபெறவுள்ளன.

19.11.2023 காலை 6.00 மணிமுதல் முருகப்பெருமானுக்கு விஷேட அபிஷேகம் இடம்பெறும். தொடர்ந்து காலை 8.00மணிக்கு பாரணையும்பகல் 12.30 மணிக்கு மகேஸ்வர பூஜை நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்படும்.

20.11.2023 காலை 10.00 மணிமுதல் இடும்பன் மடை , மஞ்சள்நீர் உற்சவம் சிறப்பு ஆன்மீக சொற்பொழிவு என்பன இடம்பெறும். தென்னிந்திய சிறப்பு சொற்பொழிவாளர் சொல்லின் செல்வர் பி.மணிகண்டனின் சிறப்பு ஆன்மீக சொற்பொழிவு இடம்பெறும். இவ்வாறு நவம்பர் மாதம் 14,15 ,16, மற்றும் 17ம் திகதிகளில் மாலை 7.00 மணிமுதல் 8.00 மணிவரை நடைபெறவுள்ளது. ஆலய பிரதம குரு ஈசான சிவம் சிவஸ்ரீ என். இனியன் உதயகுமராக் குருக்கள் தலைமையில் பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

## இன்றைய பலன்கள்

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)





**மேஷம்:**
சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு அவசரமாக செய்ய வேண்டிய காரியங்களால் அதிக அலைக்கழிப்பு உருவாகும்.



**ரிஷபம் :**
சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு வேலை பளு கூடுவதால் பணிகளை விரைந்து முடிக்க வேண்டிய கட்டாயம் உருவாகும்.



**மிதுனம் :**
சொந்தத் தொழில் செய்பவர் வாடிக்கையாளர் ஒருவரின் முக்கிய வேலையை விரைவாக செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.



**கடகம் :**
வேலையில் கவனமாக நடப்பது பிரச்சினைகளை தவிர்க்கும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு மகிழ்வளிக்கும்.



**சிம்மம் :**
அலுவலகப் பொருட்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள். சொந்த தொழில் செய்பவர்களுக்கு புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமும் அவர்களால் வருமானமும் உருவாகும் .



**கன்னி :**
சக பணியாளர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். சொந்த தொழில் செய்பவர்கள் வேலைகளில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம்.



**துலாம் :**
பணியில் கவனமாக இல்லாவிட்டால் அதிகாரிகளின் கோபத்துக்கு இலக்காகுவீர்கள்.



**விருச்சிகம் :**
பொறுப்புகளில் கவனமாக இருங்கள். சொந்த தொழில் செய்பவர்களுக்கு வேலை பளு அதிகரிக்கும்.



**தனுசு :**
பழைய வாடிக்கையாளர்கள் மூலம் புதிய நபர் அறிமுகம் கிடைக்கும். கூட்டுத்தொழில் முயற்சியில் எதிர்பார்க்கும் லாபம் வந்து சேரும்.



**மகரம் :**
சக பணியாளர்களின் வேலையையும் சேர்த்து செய்ய வேண்டியது இருக்கும். சொந்த தொழிலில் தொல்லைகள் இருந்தாலும் ஆதாயம் குறையாது.



**கும்பம் :**
சொந்த தொழில் செய்பவர்கள் புதிய யுக்திகளை கையாண்டு வேலைகளை விரைவாக செய்து கொடுப்பார்கள்.



**மீனம் :**
சொந்தத் தொழில் செய்பவர்கள் செய்து கொடுத்த பணியில் உள்ள குறைகளை மீண்டும் சரிவு செய்து கொடுக்க நேரலாம்.

## இலங்கை கிரிக்கெட்டை...

தொகுதியில் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த போதே, இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச கிரிக்கட் கவுன்சில் இலங்கை கிரிக்கெட் தொடர்பாக அவதானம் செலுத்தி வருவதாகவும், இலங்கை கிரிக்கெட்டில் சர்வதேச தாக்கம் ஏற்படாதவாறு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கிரிக்கெட் வேலைத்திட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதம் சரியான நேரத்தில் நடைபெற்றதெனவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நீதித்துறை செயற்பாடுகள் தொடர்பில் வெளியிடப்பட்ட சில அறிக்கைகளை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

நான் அமைச்சருக்கு ஆலோசனை கூறியது, இது தொடர்பில் நீதிமன்றத்துக்கு சென்றால் தடுத்து நிறுத்தமலாம் என்பதனாலாகும். இது குறித்து அமைச்சரவையில் விவாதித்தோம். எவ்வாறாயினும் இந்த விவகாரம் தற்போது நீதிமன்றத்துக்கு சென்றுள்ளது.

கிரிக்கெட்டுக்கு மிகவும் பொருத்தமான சித்திரசிறி அறிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டும். இதற்காக இடைக்கால குழுக்களை நியமிப்பது போதுமானதல்ல என எண்ணுகிறேன். இவை அனைத்தும் தற்காலிக தீர்வுகள். ஒரு முழுமையான சட்டவிதி மாற்றம் மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

கிரிக்கெட்டை ஆரம்பித்தவர்கள்; ஜே.ஆர்.ஜயவர்த்தன மற்றும் காமினி திசாநாயக்க ஆகியோரே. அவ்வேளையில் பாடசாலை கிரிக்கெட்டை வளர்க்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் மூலம்தான் எங்கள் முதல் அணி முன்னுக்கு வந்தது.

அதன்பின்னரே, 1996 அணி உருவாகி உலகக் கோப்பையை வென்றது. அதனால் மீண்டும் கிரிக்கெட் விளையாட்டை வளர்க்க வேண்டும். நான் எந்த தரப்பையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. எனக்கு ஒரே ஒரு தரப்பே. அது இலங்கை கிரிக்கெட் தரப்பு மட்டுமே.

அதை மேம்படுத்த அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எனக்குள்ள பயம் இதுபற்றி நேற்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் பேசியதுதான்.

அதனால், நாம் பாதிக்கப்படாதவாறு நடவடிக்கையில் ஈடுபடுவோம்.

இன்று முன்வைக்கப்பட்ட இந்த யோசணையை அங்கீகரிப்போம் என்றார்.

## நுவரெலியா நகரிலுள்ள தபாலகத்தில்...

கூறி வருகின்றனர். தபால் கட்டடத்தை அங்கேயே வைத்து, அங்கு தபால் சேவை இயங்குவதற்கும் இடம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், இந்நேரத்தில் முதலீடுகள் செய்ய வேண்டியது அவசியமாகும். அதற்கு நாங்களும் சம்மதித்துள்ளோம்.

தபால் என்பது ஒரு அத்தியாவசிய சேவையாகும். ஒரு நாள் கூட தாமதம் செய்ய முடியாத ஒன்று. தபால் துறை வேகமாக வளர்ந்து வரும் காலம் இது. இந்த நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய இரண்டு மாதங்களில்தான் தபால்துறை அதிக வருமானம் ஈட்டுகிறது.

மேலும், தபால் துறையை டிஜிட்டல் மயமாக்கி, மற்ற நாடுகளைப் போல புதிய தொழில்நுட்பத்துடன் முன்னேற்ற தெளிவான திட்டத்தை வகுத்துள்ளோம்.

அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார்.

## நாட்டின் சனத்தொகையில் நீரிழிவு...

சுகாதார அமைச்சின் பொது மருத்துவ விஷேட நிபுணர் அருந்திகா சேனாரத்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

உலகளாவிய ரீதியில் நோக்கும்போது உலக சனத் தொகையில் 500 மில்லியனுக்கும் அதிகமானோர் தற்போது நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தவரை பிரதி ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை உலக சுகாதார அமைப்பின் அனுமதியுடன், இதன் விதிமுறைகளைப் பின்பற்றி கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

முழு நாட்டையும் உட்படுத்தி 18 வயதுக்கும் 69 வயதுக்கும் இடைப்பட்டவர்களிடையே மாதிரிகள் பெறப்பட்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த மதிப்பீடுகளுக்கு அமைய நாட்டில் 14. 6 வீதமானோர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் மேற்கொண்ட கணிப்பீடுகளில், 7.4 வீதமாகவே இந்த நோயாளர்களின் எண்ணிக்கை காணப்பட்டது.

முறையற்ற உணவுமுறையை பின்பற்றல், மன உளைச்சல் ஆகியவையும் நீரிழிவு நோய் அதிகரிப்புக்குக் காரணமாகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தென் கொரியாவில் மனிதனை...

பணிபுரியும் 40 வயதுடைய நபர், இந்த ரோபோவை சோதனை செய்து கொண்டிருந்த போதே இச்சம்பவம் பதிவாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. காய்கறி பெட்டிகளை பேக் செய்யும்போது உணவுப் பெட்டிகளிலிருந்து தொழிலாளியை வேறுபடுத்திப் பார்க்கத் தவறிய ரோபோ, அவரைப் பிடித்துஅவரது உடலை கன்வேயர் பெல்ட்டில் தள்ளி, அவரது முகத்தையும் மார்பையும் நசுக்கியதாலேயே இச்சம்பவம் ஏற்பட்டுள்ளது. விபத்தின் பின்னர் தொழிலாளி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## இராஜாங்க அமைச்சர் டயனாவின்...

அறிக்கையை தயாரிப்பதற்கு முடிவெடுத்தது.

இதன்படி, சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹன பண்டார திஸாநாயக்க மற்றும் சுஜித் சஞ்சய பெரேரா ஆகியோருக்கு சில காலம் பாராளுமன்றத்துக்கு வருவதற்கு தடை விதிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த சில்வாவும் குழு முன் நேற்று ஆஜராகி சாட்சியமளித்தார். பாராளுமன்றத்தின் கீழ் தளத்தில் கடந்த மாதம் (20) இம்மூவருக்கும் இடையில் இந்த குழப்பகரமான சம்பவம் இடம்பெற்றது.

## அகவை 67 இல், அமைச்சர் டக்ளஸ்...

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,எப்பொழுதும் தமிழ் மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டுமென்பதில் முனைப்பாக செயற்பட்டு வரும் அரசியல் தலைவராவார். பேச்சு வார்த்தைகள் மூலம் தமிழ் மக்களுக்கான தீர்வைக் காண வேண்டும். அத்துடன், இந்திய அரசின் உதவியுடன் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டுமென்பதிலும் ஆணித்தரமாக உறுதியாக செயற்பட்டு வருபவர். மக்களுக்கான அவரது சேவை மேலும் வளரவும், தொடரவும் எல்லாம் வல்ல இறைவன் அருளையும் கீர்த்தியையும் கொடுக்க வேண்டுமென, சர்வதேச இந்து மத பீடம் சார்பாக ஆசிகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டிஜிட்டல் முறையில் அனுப்புமாறு...

பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சபையின் பேச்சாளர் நோயல் பிரியந்த தெரிவித்துள்ளார். எனவே, டிஜிட்டல் முறைகளைப் பயன்படுத்தி முறைப்பாடுகளை அனுப்புமாறு நுகர்வோரை இலங்கை மின்சார சபை கோரியுள்ளது. இலங்கை மின்சார சபை தற்போதுள்ள நிலைமைகளை கருத்திற்கொண்டு, மின்தடைகளை விரைவில் மீளமைக்க 24 மணி நேரமும் செயற்படுமென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

## தலைமன்னார் கடலில் கைதான...

மன்னார் நீதிமன்றத்தில் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இதன் போது மீனவர்களுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 06 மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் மீனவர்கள் 05 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 05 படகுகளின் உரிமையாளர்களும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென இந்திய துணைத் தூதரகம் ஊடாக படகு உரிமையாளர்களுக்கு அறிவிக்கும்படி நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

வாதி தரப்பில் முதலாவது குற்றவாளியாக படகுகளின் உரிமையாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட 38 மீனவர்களும் மிகிரியாகம தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டு, இந்திய தூதரக அதிகாரிகள் ஊடாக நாட்டுக்கு அனுப்பி வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## கட்சி பேதமின்றி அனைவரும்...

புதிய சட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், சித்ரசிறி அறிக்கையை அடிப்படையாக வைத்து அந்த சட்டத்தை உருவாக்க முடியும் என்றும், அந்த அறிக்கை அரசியலுக்கு அப்பாற்பட்டது என்றும் அவர் சபையில் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, பதவி விலக வேண்டுமென்ற ஒன்றிணைந்த யோசனை தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், இலங்கை கிரிக்கெட் சபையின் செயற்பாடுகள் தொடர்பில் நாட்டில் பாரிய மக்கள் எதிர்ப்பு உருவாகியுள்ளது. அந்த வகையில் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ள இந்த யோசனையை நிறைவேற்றுவது நாட்டு மக்களின் கருத்துக்களுக்கு கௌரவமளிப்பதாகவே அமையும்.

இந்த மக்கள் கருத்தை பிரபலப்படுத்துவது தவிர,வேறு எந்த சட்டபூர்வ உரிமையும் எமக்கு கிடையாது.

அந்த வகையில் தேவையில்லாத பிரச்சினைகளுக்கு வழிவகுக்காமல், தற்போதுள்ள கிரிக்கெட் நிர்வாக சபையை தயவு செய்து பதவி விலகுமாறு நாம் கேட்டுக் கொள்கிறோம்.

அதேவேளை, இதுபோன்ற செயற்பாடுகள் இனியும் இடம்பெறாமல் உரிய நடவடிக்கை எடுப்பதும் அவசியமாகும்.

சித்ரசிறி அறிக்கைக்கிணங்க, அதனை அடிப்படையாகக் கொண்டு நாம் அரசியலுக்கு அப்பால் சட்டமொன்றை தயாரித்துள்ளோம்.

அதில் அமைச்சருக்கு கூட அதிகாரம் கிடையாது சிவில் சமூகத்திற்கே முழுமையான அதிகாரம் உள்ளது.

தற்போதைய ஜனாதிபதி குறுகிய அரசியலில் பயணிப்பவர் அல்ல. குறுகியகால அரசியல் இலாபத்திற்காகவன்றி நீண்ட கால எதிர்பார்ப்பை கொண்ட முறைமையொன்றை அரசாங்கம் வகுத்துள்ளது.

தற்போதுள்ள கிரிக்கெட் நிர்வாக சபை ஊழல் நிறைந்தது. அவர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கு சட்ட ரீதியான முறைமை தயாரிக்க வேண்டியது அவசியம்.

இருட்டில் கைகளை நுழைத்து இந்த பிரச்சினைக்கு பதில் தேட முடியாது.

அவசரமாக எதையாவது செய்யப்போய் அதன் மூலம் 'சம்மி' க்களையே பலப்படுத்த நேரும். அதனை சரியாக சிந்தித்து, அதற்கான சட்டத்தை பலமானதாக உருவாக்க, விளையாட்டுத் துறை சட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாட்டில் உணவுப் பணவீக்கம்...

மேம்பாட்டுக்காக எமக்கு உள்ள பிரதான வருமான வழியான வரி வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தோம். அந்த வகையில் சீனிக்கு விதிக்கப்பட்டிருந்த 50 சத வரியை 50 ரூபாவாக அதிகரிக்க நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்தது. இதன் ஊடாக நாட்டில் சீனியின் விலை அதிகரிக்கப்படுமாயின் அதன் மூலம் நுகர்வோர் பாதிக்கப்படுவார்கள். எனவே, அதனைத் தடுப்பதற்காக சீனிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

நாட்டில் உற்பத்திகள் நுகர்வோரைச் சென்றடையும் அளவு தொடர்பில் நாம் தற்போது ஆய்வுகளை நடத்தி வருகின்றோம். உதாரணமாக நாட்டில் மேற்கொள்ளப்படும் பால் உற்பத்தியில் நேரடியான நுகர்வுக்காக பயன்படுத்தப்படும் பாலுக்கு மேலதிகமாக பால் சார்ந்த உற்பத்திக்கு பால் பயன்படுத்தப்படுகின்றது. பால் விலை அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக இது போன்ற தொழில் முயற்சியாளர்கள் இந்த பால்சார் உற்பத்திகளில் இருந்து விலகிக்கொள்கின்றனர்.

இதன் காரணமாக நாட்டின் தேவைக்காக நாம், பால்சார் உற்பத்திகளை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்கின்றோம். உதாரணமாக பால் மாவைக் குறிப்பிடலாம். இதற்காக பெருமளவில் அந்நியச் செலாவணியை நாம் வழங்குகின்றோம். இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு எமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மீன்பிடி அமைச்சு, கமத்தொழில் அமைச்சு மற்றும் கால்நடைகள் அமைச்சு போன்ற அமைச்சுகளுக்கு தெரிவித்துள்ளோம்.

இவ்வாறான பல்வேறு பொருட்கள் தொடர்பில் நாம் தற்போது அவதானம் செலுத்தி வருகின்றோம். நாட்டில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி, அந்த உற்பத்திகளில் நாட்டினுள் விநியோகிக்க எதிர்பார்க்கும் அளவு, அடுத்த வருடத்தில் அவற்றின் விலைகள் தொடர்பில் எமக்கு அறிக்கையளிக்குமாறு நாம் அமைச்சுகளுக்கு அறிவித்துள்ளோம்.

உதாரணமாக நெல் உற்பத்தியை எடுத்துக் கொண்டால் சிறு போகம், பெரும் போகம் ஆகிய இரு போகங்களினதும் விளைச்சல், அவற்றில் விநியோகிக்கப்படும் நெல்லின் அளவு மற்றும் அதன் விலைகள் தொடர்பிலும் அரிசியின் விலைகள் குறித்தும் கணிப்பிட்டு எமக்கு அறிவிக்குமாறு தெரிவித்துள்ளோம்.

இதன் ஊடாக நாட்டில் உணவுப் பாதுகாப்பை எவ்வளவு தூரம் எம்மால் பேணமுடியும் என்றும் அடுத்த வருடத்தில் எவ்வாறு விலைகளைக் கட்டுப்படுத்தலாம் என்றும் விலைகள் குறித்து எமக்கு ஒரு தெளிவைப் பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கின்றோம்.

## வடமாகாண மக்களின்...

பிரச்சினையை கையாள்வது குறித்து தாம், ஆலோசித்து வருவதாகவும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார். தற்போதுள்ள 40,000 ஏரிகளை மேம்படுத்தவும், மழைநீர் சேகரிப்பு, கடலில் கலக்கும் நதி நீரை சேகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

## உலகெங்கும் வாழும் நலிவுற்ற... (04ஆம் பக்கத் தொடர்)

நிவாரணப் பொருட்களும் உடனடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைக்க இந்நிறுவனம் சகல ஏற்பாடுகளையும் செய்தமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை நிறுவனம் 180 வீடமைப்புத் திட்டங்களை உலகின் பல பாகங்களிலுமுள்ள வறிய நாடுகளில் வாழும் வீடற்றோருக்கு வழங்கியுள்ளது. ஒவ்வொரு திட்டத்தில் கீழும் தலா 10,000 முழுமையான வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

மருத்துவ உபகரணங்கள் பற்றாக்குறையாகவுள்ள பாதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள மருத்துவசாலைகளுக்கு சீ.ரி. ஸ்கான் கருவி, எக்ரே கருவி போன்றவற்றை அன்பளிப்புச் செய்யும் 51 திட்டங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. சுத்தமான குடிநீர் மற்றும் கழிவறை அமைத்துக் கொடுக்கும் 66 திட்டங்களை இந்நிறுவனம் நடைமுறைப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு திட்டத்தின் கீழும் தலா 50,000 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. இலங்கையில் இத்திட்டத்தின் கீழ் பல இலட்சம் மக்கள் குடிநீர் இணைப்பு, கிணறு, மலசலகூட வசதிகளைப் பெற்றுள்ளனர்.

அறபு தனவந்தர்கள் நன்கொடையாகவோ அல்லது மஸ்ஜித்,பாடசாலை நிர்மாணம் போன்ற தேவைக்காக வழங்கும் நிதியிலிருந்து பொருட்களைப் பெற்று அவற்றை தகுதியானவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் மூன்றாம் தரப்பு சேவைகளையும் இந்நிறுவனம் மேற்கொள்கின்றது.

## வட., கிழக்கு பாடசாலைகளுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

வழங்கப்பட்டிருந்தது. எனினும், இந்த வருடம் வடக்கு கிழக்கு பாடசாலைகள் தொடர்பில் இவ்விடயத்தில் எவ்விதத் தீர்மானமும் இதுவரை எடுக்கப்படவில்லை. இது மாணவர்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகுமெனவும் வடமாகாண தமிழ் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, இதனை கருத்திற்கொண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் உள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை கிரிக்கெட்டை... (03ஆம் பக்கத் தொடர்)

ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் கட்டமைப் பொன்றை சட்டம் மூலம் அனுமதிக்கும் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானங்களின் அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் சபை இலங்கை கிரிக்கெட் சபைக்கு தடை விதிக்க முடிவு செய்தால் அதற்கு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆளும், எதிர்த்தரப்பின்...

பலர் ஆதரவு தெரிவித்து உரையாற்றினர். விளையாட்டுத்துறை முன்னாள் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் பலர் உரையாற்றியபோதும் முன்பு விளையாட்டுத் துறை அமைச்சராகவிருந்த நாமல் ராஜபக்ஷ விவாதத்தில் பங்கேற்கவில்லை.

விவாதத்தின் முடிவில் பிரேரணை வாக்கெடுப்பின்றி ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியின் ஏகமனதான முடிவுடன் சபையில் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

## இலங்கை வந்தது ஜேர்மனியின்...

12 மதுபானசாலைகள், 08 நீச்சல் தடாகங்கள், 03 ஒய்வறைகள் மற்றும் 07 உணவகங்கள் உள்ளன.

Aitken Spence PLC இன் துணை நிறுவனமான Aitken Spence Shipping Ltd நாட்டின் சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில், கப்பல்களை இயக்குபவர்களுக்கான சேவைகளை தொடர்ந்து வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

## சீனத் தூதுவர் நயினையில்...

அத்துடன் சிவில் சமூகத்தினர், புத்திஜீவிகள், வர்த்தக சமூக பிரதிநிதிகளையும் சீனத் தூதுக்குழு யாழ்ப்பாணத்தில் சந்தித்து கலந்துரையாடியது.

# மதுகமயில் 'இலங்கையின் புன்னகைக்கும் சிறுவர்கள்' வேலைத்திட்டம் முன்னெடுப்பு

*(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)*

தேசத்தின் வறுமை நிலை போக்கும் செயல் திட்டத்துக்கு வலுவூட்டும் "இலங்கையின் புன்னகைக்கும் சிறுவர்கள் " (Srilanka Smiling Children) வேலைத் திட்டமொன்று சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அநுப பஸ்குவலின் சிந்தனையின் கீழ் மதுகமவில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி வேலைத் திட்டம் இராஜாங்க அமைச்சரின் ஏற்பாட்டில் "கிராம அபிவிருத்திக்கான சீன பவுண்டேஷன்" ஆதரவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மதுகம ஆரம்ப பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் சீன பவுண்டேஷனின் பணிப்பாளர் Zou Zhiqiang உள்ளிட்ட பிரதிநிதிகள் மற்றும் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

வறுமை ஒழிப்பு வேலைத் திட்டத்துக்கு சீன உதவியாக இந்த திட்டம் ஆரம்பிக்கப்படுவதுடன் பூர்வாங்க செயல் திட்டமாக தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் கிராமிய பாடசாலைகளின் பிள்ளைகளுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கவும் மேற்படி அமைப்பு உத்தேசித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்

இவ்வேலைத் திட்டத்தின் கீழ் மேலும் பல்வேறு செயல் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் அதன் மூலம் வறுமை நிலை மக்களை வலுவூட்டுவதற்காக உச்ச பங்களிப்பை தான் பெற்றுக் கொடுப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# நீண்டகாலமாக சேவையாற்றியோரை கௌரவித்த மக்கள் வங்கி





'இருபத்தைந்து ஆண்டுகள் சேவை' விருது நிகழ்வில், இருபத்தைந்து ஆண்டுகள் சேவையைப் பூர்த்தி செய்துள்ள அர்ப்பணிப்புமிக்க தனது பணியாளர்களை மக்கள் வங்கி அண்மையில் கௌரவித்துள்ளது. கொழும்பு 07, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ச, மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பொது முகாமையாளர் கிளைவ் ஃபொன்சேகா உள்ளிட்ட உயர் அதிகாரிகள் மற்றும் நிர்வாக முகாமைத்துவ அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளனர்.

மக்கள் வங்கியில் மிகவும் போற்றத்தக்க வகையில் இருபத்தைந்து ஆண்டுகள் சேவையை பூர்த்தி செய்துள்ளதைப் பாராட்டுவதில், மொத்தமாக 886 பணியாளர்கள் அங்கீகரிக்கப்பட்டு, பெறுமதிப்பு மிக்க தங்க விருதுகள் வழங்கப்பட்டன. இவ்வாறு கௌரவிக்கப்பட்டவர்களுக்குப் புறம்பாக, தொடர்ச்சியாக நாற்பது ஆண்டுகள் சேவையைப் பூர்த்தி செய்துள்ள 52 சிரேஷ்ட பணியாளர்களுக்கு விசேட நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.





பஹன ஊடக நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அஷ். எம்.எஸ். அப்துல் முஜீபின் வழிகாட்டலில், பஹன அக்கடமி முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்துடன் இணைந்து அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தெல்தோட்டைக்கிளையின் ஒத்துழைப்புடன் மஹ்பலுல் உலமா அரபு கலாசாலையில் சமூக மாற்றத்துக்காக அறிவூட்டும் வகையில் 'உலமா ஊடகவியல்' என்ற தொனிப்பொருளில் உலமாக்களுக்கென மூன்று நாட்கள் பயிற்சிக்கருத்தரங்கு அண்மையில் நடாத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் பங்கு பற்றியோருக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட திணைக்களத்தின் பணிப்பாளர் இசட்.ஏ.எம். பைசல் சான்றிதழ் வழங்குவதையும் அரசாங்க தகவல் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் ஹில்மி முஹம்மட் உள்ளிட்டோர் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.

# 'முத்துக்கள் வட்ஸ்அப்' குழும ஏற்பாட்டில் தாதிகள் பயிற்சி கருத்தரங்கு

பேருவளை, சீனன்கோட்டை 'முத்துக்கள் வட்ஸ்அப்' குழுமத்தின் ஏற்பாட்டில் தாதிகள் பயிற்சி கருத்தரங்கு எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 முதல் பி.ப 1.00 மணி வரை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் வளவாளர்களாக டாக்டர் மரீனா ரிபாய், டாக்டர் பிர்தவ்ஸியா நியாஸ் மற்றும் டாக்டர் திருமதி நியாஸ் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை அதிபர் எம். இப்றாஹீம், நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி அதிபர் ஜனாபா பஹீமா பாயிஸ் ஆகியோர் உட்பட இரு பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் சார்பில் சர்பான் முஸம்மில் தினகரனுக்கு தெரிவித்தார்.


**கொழும்பில்**
அமைந்துள்ள
புத்தக
நிலையத்தில்
பணிபுரிய
ஆட்கள் தேவை.
ஆண்கள்
மட்டும்
தொடர்புகளுக்கு
**0772671071**


# சோனக இஸ்லாமிய கலாசார நிலைய ஏற்பாட்டில் மீலாத் விழா

*ருஸைக் பாரூக்*

சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தின் 70ஆவது ஆண்டை முன்னிட்டு ஒழுங்கு செய்துள்ள மீலாதுன் நபி வைபவம் மற்றும் ஹிப்ழ், பேச்சு மற்றும் எழுத்துப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை 11ஆம் திகதி மாலை 4. 00 மணிக்கு வெள்ளவத்தை ஏ.ஏ.எம். மர்லீன் மண்டபத்தில் கலாசார நிலையத் தலைவர் உமர் காமில் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் இலங்கைக்கான மலேசிய உயர் ஸ்தானிகர் பட்லி ஹிஷாம் ஆதம் மற்றும் அவரது பாரியார் சலீனா பிந்தி மொஹமட் யூசுப் ஆகியோர் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.




# கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.

**30 செப்டெம்பர் 2023 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான முக்கிய நிதியியல் தரவுகள் (கணக்காய்வு செய்யப்படாதது)**

| ரூபா மில்லியனில் | 01 ஏப்ரல் 2023ம் இருந்து 30 செப்டெம்பர் 2023ம் வரை | | 01 ஏப்ரல் 2022ம் இருந்து 30 செப்டெம்பர் 2022ம் வரை |
|---|---|---|---|
| | கம்பனி | குழுமம் | கம்பனி / குழுமம் |
| வட்டி வருமானம் | 12,551 | 12,554 | 10,894 |
| வட்டிச் செலவு | (7,916) | (7,916) | (5,455) |
| **தேறிய வட்டி வருமானம்** | **4,635** | **4,638** | **5,439** |
| வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகளிலிருந்தான இலாபம்/(நட்டம்) | 21 | 21 | (80) |
| ஏனைய வருமானம் | 1,562 | 1,651 | 1,856 |
| தொழிற்பாட்டு செலவினங்கள் (பெறுமதி இழப்பு நீங்கலாக) | (3,312) | (3,318) | (3,361) |
| பெறுமதி இழப்பு | (554) | (554) | (1,457) |
| **வரிக்குமுன்னரான இலாபம்/(நட்டம்)** | **2,353** | **2,438** | **2,397** |
| வரிகள் | (1,303) | (1,297) | (1,248) |
| **வரிக்குப் பின்னரான இலாபம்/(நட்டம்)** | **1,050** | **1,141** | **1,149** |

**30 செப்டெம்பர் 2023 இல் உள்ளவாறு முக்கிய நிதியியல் தரவுகள் (கணக்காய்வு செய்யப்படாதது)**

| ரூபா மில்லியனில் | 2023 செப்டெம்பர் 30 ஆம் திகதியில் | | 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதியில் |
|---|---|---|---|
| | கம்பனி | குழுமம் | கம்பனி / குழுமம் |
| **சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 5,579 | 5,676 | 3,549 |
| அரச பிணையங்கள் | 9,124 | 9,124 | 5,503 |
| கடன்கள் (தொடர்பான தரப்பினரிடமிருந்து வரவேண்டியவை நீங்கலாக) | 76,001 | 76,001 | 77,814 |
| பங்குரிமை மூலதனத்திலுள்ள முதலீடுகள் | 360 | 345 | 328 |
| முதலீட்டுச் சொத்துக்கள் மற்றும் உண்மைச் சொத்துக்கள் | 1,419 | 1,419 | 1,490 |
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் | 7,240 | 7,240 | 5,726 |
| ஏனைய சொத்துக்கள் | 2,780 | 2,808 | 3,426 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **102,502** | **102,612** | **97,836** |
| **பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை | 14,059 | 14,059 | 20,843 |
| வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்புக்கள் | 61,144 | 61,144 | 51,394 |
| ஏனைய கடன்பாடுகள் | 1,354 | 1,354 | 1,354 |
| ஏனைய பொறுப்புக்கள் | 4,855 | 4,857 | 5,353 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **81,412** | **81,414** | **78,943** |
| **பங்குரிமை மூலதனம்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 2,151 | 2,151 | 2,151 |
| நியதி ஒதுக்கு நிதியம் | 4,146 | 4,203 | 4,073 |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் | 14,387 | 14,438 | 12,262 |
| ஏனைய ஒதுக்குகள் | 407 | 407 | 407 |
| **மொத்த பங்குரிமை மூலதனம்** | **21,091** | **21,199** | **18,893** |
| **பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி** | **66.31** | **66.65** | **59.40** |

**தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள்**

| விடயம் | 2023 செப்டெம்பர் 30 ஆம் திகதியில் | | 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதியில் | |
|---|---|---|---|---|
| **ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமை (%)** | உண்மை | தேவையானது | உண்மை | தேவையானது |
| அடுக்கு 1 மூலதன போதுமை விகிதம் | 16.60 | 10 | 15.16 | 8.5 |
| மொத்த மூலதன போதுமை விகிதம் | 17.77 | 14 | 16.31 | 12.5 |
| வைப்பு பொறுப்புக்களுக்கான மூலதன நிதிய விகிதம் | 34.51 | 10 | 36.76 | 10 |
| **கடன் சொத்துப்பட்டியலின் தரம் (%)** | | | | |
| மொத்தச் செயற்படாக் கடன்களின் விகிதம் | 18.05 | | 9.92 | |
| தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | 8.97 | | 0.44 | |
| மைய மூலதன விகிதத்திற்கான தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | 38.03 | | 2.22 | |
| ஒதுக்கு பாதுகாப்பு விகிதம் | 56.25 | | 95.95 | |
| **இலாபத்தன்மை (%)** | | | | |
| தேறிய வட்டி இலாபம் | 9.53 | | 12.22 | |
| சொத்துக்கள் மீதான வருவாய் | 3.42 | | 3.89 | |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் | 10.57 | | 12.59 | |
| வருமானத்திற்கான செலவு விகிதம் | 63.13 | | 54.67 | |
| **திரவத்தன்மை (%)** | | | | |
| தேவையான திரவச் சொத்துகளுக்கான கிடைக்கத்தக்க திரவச் சொத்து (குறைந்தபட்சம் 100%) | 217.43 | | 129.10 | |
| வெளிவாரி நிதியத்திற்கான திரவச் சொத்துக்கள் | 17.14 | | 9.40 | |
| **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 133 | | 133 | |
| வெளிவாரி கொடுகடன் தரமிடல் | BBB (Stable) | | BBB (Stable) | |
| **கடந்த 6 மாதங்களில் விதிக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தண்டங்கள் தொகை (ரூ.மில்லியனில்)** | N/A | | N/A | |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் வைப்புக் கட்டுப்பாடுகள்** | | | | |
| மொத்த வைப்புக்கள் மீதான உச்ச எல்லை (ரூ.மில்லியன்) | N/A | | N/A | |
| வைப்புக்களின் அளவைக் குறைத்தல் மாதம்/ காலாண்டு ஆண்டு ஒன்றிற்கு (ரூ.மில்) | N/A | | N/A | |
| வைப்புக்களை முடக்குதல் | N/A | | N/A | |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் கடன்பாடுகள் கட்டுப்பாடுகள்** | | | | |
| மொத்த கடனபாடுகள் மீதான உச்ச எல்லை (ரூ.மில்லியன்) | N/A | | N/A | |
| கடன்பாடுகள் சொத்துப்பட்டியல்கள் அளவைக் குறைத்தல் மாதம்/ காலாண்டு/ஆண்டு ஒன்றிற்கு (ரூ.மில்) | N/A | | N/A | |
| கடன்பாடுகளின் முடக்கம் | N/A | | N/A | |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் கடன்வழங்கல் கட்டுப்பாடுகள்** | | | | |
| மொத்தக் கடன் வழங்கல் சொத்துப்பட்டியல் மீதான உச்சஎல்லை (ரூ.மில்) | N/A | | N/A | |
| கடன்வழங்கல் சொத்துப்பட்டியல்கள் அளவைக் குறைத்தல் மாதம்/ காலாண்டு/ ஆண்டு ஒன்றிற்கு (ரூ.மில்) | N/A | | N/A | |
| புதிய கொடுகடன் வசதிகளை வழங்குதல் அத்துடன்/ அல்லது ஏற்கனவே உள்ள கொடுகடன் வசதிகளின் தவணைக் காலத்தை நீடித்தல் மீதான கட்டுப்பாடுகள் | N/A | | N/A | |
| **வேறு ஏதேனும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகள்** | N/A | | N/A | |

**சான்றுபடுத்தல்**

நாங்கள், கொமர்ஷல் கிரெடிட் மற்றும் பினான்ஸ் பிஎல்சியின் இன் பிரதான நிறைவேற்று அலுவலராக, பிரதம நிதி அதிகாரி மற்றும் இணங்குவிப்பு அலுவலராகவுள்ள நாங்கள் கூட்டாக பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றோம்.

(அ) மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

கையொப்பமிட்டது
ஆர்.எஸ்.எகொடகே
முதன்மை நிறைவேற்று அலுவலர்
திகதி 31.10.2023

கையொப்பமிட்டது
எம்.ஏ.டி.ஜே.தேஷப்பிரிய
பிரதம நிதி அதிகாரி
திகதி 31.10.2023

கையொப்பமிட்டது
பி.எச். ரங்கல
இணங்குவிப்பு அலுவலர்
திகதி 31.10.2023

COMMERCIAL CREDIT

நகரக் கிளை - இல. 165, கின்சி வீதி, கொழும்பு 08. தொலைபேசி: 011 2 000 000 | தொலைநகல்: 011 2 327 882


ஏ.ஜீ .எம். தமீம்
(பாடசாலை அதிபர்)


புதிய கட்டட தொகுதி




# கண்டி சித்தி லெப்பை கல்லூரியின் கேட்போர் கூட திறப்பு விழா இன்று


எம்.எச்.எம். ஸலாஹுதீன்
(வைத்திய கலாநிதி)


கே.ஆர்.எம். சித்தீக்
(கண்டி பள்ளிவாசல் சம்மேளன தலைவர்)

கண்டி மாநகரில் கல்வி ஒளிச்சுடராக கம்பீரமாகத் தோற்றமளிக்கும் சித்திலெப்பைக் கல்லூரி இன்று 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரலாற்றில் புதியதொரு மைல்கல்லாக, தடம் பதிக்கும் மாபெரும் நிகழ்வை வெகு விமரிசையாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. இப்பிரதேச மக்களின் பிள்ளைகளின் கல்வித் தேவையை நிறைவு செய்யும் முஸ்லிம் பாடசாலையாகவும் மிகப் பெரும் சொத்தாகவும் இக்கல்லூரி திகழ்கிறது.

இக்கல்லூரியின் முக்கியமானதும் முதன்மையானதுமான கேட்போர் கூடத் தேவையினை சித்திலெப்பை கல்வி அபிவிருத்திச் சங்கம் (செடா), கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம், ஸம்ஸம் அமைப்பு, கண்டி சிட்டி ஜம்இய்யத்துல் உலமா அமைப்பு, முஸ்லிம் வர்த்தக சங்கம், கண்டி மஸ்ஜித் சம்மேளனம், பாடசாலை அபிவிருத்தி சபை போன்ற அமைப்புக்களினதும் நல்லுள்ளம் கொண்ட தனவந்தர்களின் கூட்டு முயற்சியினால் செடா அமைப்பின் தலைமைத்துவத்தினாலும் தியாகத்தினாலும் உருவாக்கப்பட்டது. வல்லோன் அல்லாஹ் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக. 'அல்ஹம்துலில்லாஹ்'

எமது தேசத்தின் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கையில்; இலங்கை தாய்த்திரு நாட்டின் தோற்றம், வளர்ச்சி, உயர்வு என்பவற்றில் இஸ்லாமிய சமூகத்தைச் சார்ந்த முக்கியமும் முதன்மையுமானவருமான



வரலாற்றின் தந்தையாகக் கருதப்படுபவர் அறிஞர் எம்.ஸீ. சித்திலைப்பை அவர்கள். அவர் தம் சொந்த மண்ணிலே வாழும் மக்களின் கல்வித் தேவையினை நிறைவு செய்ய தனியானதொரு இடமின்றி தவித்துக் கொண்டிருந்த வேளையிலே தாமே அதற்கான காணியை வழங்கி 1887ஆம் ஆண்டு தனது சகோதரியையே ஆசிரியராக நியமித்து ஒரு கட்டிடத்தை சமூகத்திற்கு வழங்கினார். அன்றைய காலகட்டத்தில் அரபு மொழியும் பெண்களுக்கான மத்ரஸா கல்வி என்று இணைந்து தொழிற்பட்டு ஆங்கிலக் கல்வியும் புகட்டப்பட்டது. பெண்கள் பாடசாலை, கலவன் பாடசாலை, அரசாங்க பாடசாலை, முஸ்லிம் வித்தியாலயம், மகா வித்தியாலயம் என்று படிமுறை வளர்ச்சியின் பின் தற்காலத்தில் சித்தி லெப்பைக் கல்லூரியாக நாமம் பெற்று மும்மொழிப் போதனைகளும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

1943 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கப் பாடசாலையாகவும் 1962 ஒக்டோபர் முதலாம் திகதி மகா வித்தியாலயமாகவும் தரமுயர்த்தப்பட்டதுடன் ஒஸ்மாணியா என்ற பெயரையும் பெற்றது. 1971 ஆண்டு முதல் தரம் 1 – 8 வரையான மாணவிகள் கண்டி பெண்கள் கல்லூரிக்கு அனுப்பப்பட்டனர். பின்பு கலவன் பாடசாலையாக மாற்றப்பட்டது.

2018 ஆம் ஆண்டு கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டு, பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொண்டு பல்துறை வளர்ச்சியை,


ஆசிரியர் குழாம்

கண்டு வருவதுடன், மறுமலர்ச்சியுடன் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

1971 ஆம் ஆண்டு காலப்பகுதயில் விஞ்ஞான ஆய்வுகூடம், நூலகம் என்பன அமைக்கப்பட்டன. இவையும் தற்காலத்தில் நவீனமயப்படுத்தப்பட்டு மாற்றங்கள் பெற்றுள்ளன. 1972ஆம் ஆண்டு கண்டிப் பிரதேச அறிஞர்களினதும் மக்களினதும் சமூக நலன் விரும்பிகளினதும் பெற்றோர்களினதும் அபிலாசைகளின்படி எமது சமூகத்தின் தேசபிதாவான அறிஞர் சித்திலெப்பை அவர்கள் சமூகத்திற்கு ஆற்றிய அளப்பரிய சேவையினைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக சித்திலெப்பை கல்லூரி என்ற நாமம் சூட்டி கல்விப் பணியை தொடர்வதுடன், 1C தரத்துடன் கல்வியொளி பரப்புகின்றது. சித்திலெப்பை கல்லூரி ஈன்றெடுத்தச் செல்வங்கள் தற்காலத்தில் உலகில் பல பாகங்களிலும் பல்துறைசார் சேவைகளை வழங்கி வருவதும் பெருமைக்குரியவிடயமாகும்.

1943 ஆம் ஆண்டு தொடக்கம் எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு சேவையாற்றிய அதிபர்களாக எம். ஹஸன், வீ.முத்துலிங்கம், எம். தாஹா, எம். லியாவுத்தீன், எம். முஹம்மட், எம். இஸ்மாயில், எம்.ஏ. அஸீஸ், எம். சலீம், முஹம்மட், எம். கப்பார், எம். ஹனீபா, எம் ஹுசைன், எம் குவைலிதீன். எம்.சலாஹுத்தீன், ஜனாபா எஸ்.எஸ் மஸாஹிமா போன்றோர் திகழ்ந்துள்ளனர்.

தற்போதைய கல்வியின் வளர்ச்சிக்காக அதிபர் ஏ.ஜி.எம்.தமீம் பணியாற்றி வருகிறார். அவர் பதவியேற்ற பின் பல மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் கண்டு வரும் இக்கல்லூரி கண்டி வாழ் மக்களின் கல்வித் தேவையை நிறைவு செய்யும் ஒரு பொக்கிஷமாக உள்ளதென நாம் புரிந்து செயற்படுவது அவசியமாகும். இன்றைய காலகட்டத்திலே மானிடவளம், பௌதீக வளம், முகாமைத்துவம், கல்வி இணைப்பாடவிதானம் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளிலும் உயர் நோக்கங்களைக் கொண்டு வெற்றிப்பாதையில் சென்று கொண்டிருக்கின்றது.

பன்மைச் சமூக அமைப்பைக் கொண்ட எமது தாய் திருநாட்டில் தமிழ், சிங்களம் என்ற மொழிப் பிரிவுகளுடனும் சர்வதேச தொடர்பாடல், காலத்தின் தேவையென்பதை கருத்திற் கொண்டு 2013 ஆம் ஆண்டு தொடக்கம் தரம் 6 இலிருந்து ஆங்கில மொழிக்கல்விக்கும்










உரிய இடமளிக்கப்பட்டு கல்விப் போதனைகள் இடம்பெறுவது காலத்தின் தேவையை நிறைவு செய்யும் செயற்பாடாக உள்ளது.

கல்லூரியின் வளர்ச்சிப்பக்கங்களைப் புரட்டிப் பார்க்கும் வேளையிலே எமது மாணவர்கள் ஏனைய சகோதர சமூகத்தைச் சார்ந்தவர்களுடன் போட்டியிட்டு நாம் எந்த விதத்திலும் சலைத்தவர்கள் அல்லர் என்று பல வெற்றிகளையும் பரிசுகளையும் சாதனைகளையும் புரிந்து சமூகத்திற்கும் கல்லூரிக்கும் நற்பெயரை பெற்றுத் தருகின்றனர். இவை மறுமலர்ச்சியின் எடுத்துக் காட்டாக அமைகின்றது. எமது கல்லூரியை சேர்ந்த மாணவர்கள் வெளிக்கள போட்டி நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி பல்வேறு வெற்றிகளை பெற்று பாடசாலைக்கு பெருமைகளை ஈட்டித் தந்துள்ளனர். அந்தவகையில்; பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில் மாணவன் எஸ்.டென்சில் வெள்ளிப்பதக்கத்தையும், ஜூடோ போட்டியில் மாணவன் எம்.ஐ. எம். இமாத் மற்றும் எம். ஸைஹான் தங்கப் பதக்கத்தினையும், எம்.ஆர். எம். இஸ்பாக் மற்றும் எம்.ஆர். எம். இனாஸ் வெள்ளிப் பதக்கத்தினையும், வை.எம்.சி. சார்பாக குத்துச்சண்டை போட்டியில் கலந்து கொண்டு மாணவர் எம். எஸ்.எம். உமர் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்று கடந்த வருடங்களில் கல்லூரியின் நாமத்தை சமூகத்திற்கு பறைசாற்றியுள்ளனர்.

உதைப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள் பிரதேச ரீதியிலான வெற்றியினைத் தமதாக்கிக் கொண்டனர். மேலும் இஸ்லாமிய தினப் போட்டி, சமூக, விஞ்ஞானப் போட்டி, தமிழ் மொழித்தினப் போட்டி, சித்திரப் போட்டி, ஆங்கில தினப்போட்டி, விளையாட்டுப் போட்டி போன்றவற்றில் தன்னம்பிக்கையுடன் கலந்து கொண்டு பெரும் வெற்றிகள் பலவற்றையும் பெற்றுக் கொண்டனர். தேசிய ரீதியில் நடைபெற்ற மீலாதுன் நபி விழாப் போட்டியில் சிங்கள மொழிப் பிரிவைச் சேர்ந்த தரம் 10 மாணவன் எம்.என். எம். மிராஜ் இரண்டாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டு, கல்லூரியின் நாமத்தை ஏனையோரும் அறியும் வண்ணம் சாதனையைப் புரிந்துள்ளார்.

மேலும், சர்வதேச ரீதியில் தொடர்பாடல் செயற்பாடுகளில் பங்கு கொண்டு கல்வி அமைச்சும் பிரித்தானிய தூதரகமும் நடாத்திய சர்வதேச ரீதியிலான ஐ.எஸ்.ஏ. நட்சத்திர விருது (2014/2015) மற்றும் (2016/2017) ஆகிய இருகாலகட்டத்திற்குரிய இரண்டு விருதுகளும் எமது கல்லூரிக்கு கிடைத்தமை அனைவரும் பாராட்டத்தக்கது. இது பல்துறை வெற்றிகளுக்கு பக்க பலமாகத் திகழ்ந்தது. அத்தோடு 2014 ஆம் ஆண்டு சிறந்த அதிபருக்கான 'பிரதீபா பிரபா' விருதினையும் எமது கல்லூரி அதிபர் பெற்றுக் கொண்டார்.

தற்காலத்திலே நவீனத்துவத்திற்கு ஏற்றாற் போல் கற்றல் கற்பித்தல் முறைகளை உள்ளடக்கிய 'நுண்திறன் வகுப்பறை' மூன்றினை 'செரண்டிப்' நிறுவனம் வழங்கி மாணவர் கல்வியை ஊக்கப்படுத்தி வழிப்படுத்தியுள்ளது. நவீனத்துவ முறையில் அமைந்த ஆரம்பப் பிரிவு சாரணர் குழு, பேண்ட் வாத்தியக் குழு, கணினி பிரிவு, ஆரம்ப ஒலி ஒளி பிரிவு மேலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைகின்றமையும் சிறந்த புள்ளிகளைப் பெற்று வருகின்றமையும் மற்றும் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (2019) சிறந்த சித்திகளைப் பெற்றமை



யும் கணித, வர்த்தக ஏனைய கலைத்துறைகளுக்கும் தெரிவானதோடு பாடசாலை தர ரீதியிலும் உயர் நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. எமது பாடசாலை மாணவர்களின் தேவைகளை அறிந்த சமூக. நலன் புரி அமைப்புக்கள் கற்றல் உபகரணங்கள், உலர் உணவுகள், பொதிகள் போசனைத் திட்டங்கள், உடைகள் என்பவற்றை வழங்கி ஊக்கமும் உற்சாகமும் அடைந்திட வழிசெய்கின்றன.

குறிஞ்சி நில மண்ணிலே, பன்மொழிச் சமூக அமைப்பினைக் கொண்ட பிரதேசமாக கண்டி நகரம் காணப்படுவதால் இங்கு எம்முடன் சிங்களம், தமிழ், கிறிஸ்தவம் ஆகிய மொழிப் பிரிவைச் சேர்ந்த மாணவர்களும் ஒற்றுமையாகக் கல்வியைத் தொடர்வதுடன் சகோதர இனத்தைச் சார்ந்த ஆசிரியர்களும் ஒருமைப்பாட்டுடன் பணியாற்றி புரிந்துணர்வுடன் ஒற்றுமையாக சேவை புரிவது அனைவருக்கும் படிப்பினையாகவும் முன்மாதிரியாகவும் அமையப் பெற்றுள்ளது. கொரோனா எனும் கடுமையான இடர்காலத்திலும் அதன் பின்பும் மாணவரின் கல்வியை மேம்படுத்துவதில் எமது ஆசிரியர்கள் அரும்பாடுபட்டு தொண்டாற்றி வருகின்றமைக் குறிப்பிடத்தக்கது.

கல்லூரியின் பௌதீக வள அபிவிருத்தியில் அமைப்பு ரீதியிலான மாற்றங்களை ஏற்படுத்துவதில் அவ்வப்போதைய கால அதிபர்களும் அரசியல்வாதிகளும். கல்வி நிறுவனங்களும் சமூக சேவையாளர்களும் பல உதவிகளை வழங்கி மேம்பாட்டிற்கு தன்னலம் அற்ற சேவைகளை வழங்கி பாடசலையின் வளர்ச்சிக்கு பக்க பலமாகத் தொழிற்பட்டுள்ளனர் என்பதை வரலாறுகள் சான்று பகர்கின்றன. இன்று திறந்து வைக்கப்படும் கேட்போர் கூடம் அமைந்துள்ள மூன்று மாடிக் கட்டட முதற்கட்டத் திறப்பு விழா முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவின் முயற்சியால் உருவாக்கப்பட்டது.

எமது கல்லூரியின் எதிர்கால வேலைத் திட்டங்களாக, கல்வித்துறையில் உயர்நிலையை அடைதல், நவீனத்துவத்திற்கு ஏற்ற உயர் நோக்கையுடைய, உயர் சமூக பரம்பரையை உருவாக்குதல், பல்துறைசார் சான்றோர்களை அதிகரித்தல், சவால்களை எதிர்கொண்டு வெற்றிப்பாதையில் வீறுநடை போடும் புத்தாக்க சமூகத்தை உருவாக்குதல், விளையாட்டுத்துறையில் உயர்நிலையை அடைந்து வெற்றிகளை தேசிய ரீதியில் அடைதல், சமூகத்தில் உயர்நிலை கல்லூரியாக திகழ்தல் போன்றனவாகும்.

இவ்வாறு பிரதேச மக்களின் அறிவுப் பசியைத் தீர்த்து வைக்கும் நோக்கில் உருவான கல்லூரியின் வளர்ச்சிக்கு பாலமாகவும், அச்சாணியாகவும் திகழும் நோக்கில் 2014 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் புத்திஜீவிகள், தனவந்தர்கள், நல்லுள்ளம் கொண்ட நல்லோர்கள் வர்த்தக சங்கத்தினர், கண்டி பொதுவைத்தியசாலை வைத்தியர் எம்.எச்.எம். சலாஹுத்தீன் அவர்களைத் தலைவராக கொண்டு உருவான சித்திலெப்பை கல்வி அபிவிருத்தி சங்கம் (செடா), ஸம்ஸம் அமைப்பு, கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம், கட்டுக்கலை முஸ்லிம் இளைஞர் பேரவை, கண்டி சிட்டி ஜம்இய்யத்துல் உலமா, முஸ்லிம் வர்த்தக சங்கம் கண்டி, முஸ்லிம் சம்மேளனம் கல்லூரிக்கு என்றும் உறுதுணையாக நின்று செயற்படும் மௌலவி எம்.சியாமை செயலாளராகக் கொண்டு இயங்கி வரும் பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்கள் (எஸ்.டீ.சி), சட்டத்தரணிகள் சங்கம், வை.எம்.எம்.ஏ கட்டுக்கலை பரிபாலன சபை, ஒரபிபாஷா கலாசார நிலையம், பழைய மாணவர் சங்கம், பொதுநல இயக்கங்கள், சமூக நலன் விரும்பிகள், பெற்றோர் போன்ற பலரும் அரும்பாடுபட்டு ஒற்றுமையுடன் ஒன்றிணைந்து உழைக்கின்றனர். அனைவரின் உயர் நோக்கினை இறைவன் பொருந்திக் கொள்வானாக.

'ஸதகத்துல் ஜாரியாவில்' உள்ளடக்கப்படும் கல்விக்காக உதவும் இந்த ஈருலக நன்மையை பெற்றுத்தரும் செயற்பாடுகளை வல்ல நாயன் ஏற்று அருள்புரிந்து உதவ வேண்டுமெனவும் எமது சமூகத்தினதும் கண்டி வாழ் மக்களினதும் மாபெரும் சொத்தான கலைக்கூடத்தினை வலுவும் வளமும் பெற்றதாக மாற்றியமைத்து உயர்வடைச் செய்வது சமூகத்தின் பாரிய பொறுப்பாகும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் எம்மைப் பொருந்திக் கொள்வானாக.







**ஆசிரியை ரஸ்மியா ஆஸீன்**
(கண்டி – சித்தி லெப்பை கல்லூரி)

படங்களும் தகவல்களும் – இக்பால் அலி

# கிழக்கின் குரல்



## முஷாரப் எம்.பியின் ஏற்பாட்டில் பாக். உயர்ஸ்தானிகர் பசறிச்சேனைக்கு விஜயம்

(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)



பாகிஸ்தான் நாட்டின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாறுக் புர்கி பசறிச்சேனை பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்ததுடன் அங்கு பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்தார்.

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட கதிரை, மேசைகள் பசறிச்சேனைஅல்இஷ்ராக் மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கப்பட்டதுடன், 10 கிரிக்கட் விளையாட்டுக் கழகங்களுக்கான கடின பந்து உபகரணங்கள் மற்றும் 100 குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகளும் இதன்போது பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் உமர் பாறுக் புர்கியினால் வழங்கி வைக்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் விடுத்த வேண்டுகோளின் பேரில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் நிதியுதவியின் மூலம் அல்இஷ்ராக் வித்தியாலயத்தில், தெரிவு செய்யப்பட்ட சிங்கபுர, பசறிச்சேனை பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு தளபாடங்களும், பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களை சந்தித்து அவர்களது தேவைகளையும் உயர்ஸ்தானிகர் கேட்டறிந்து கொண்டார்.

## சாய்ந்தமருது தொழிலதிபருக்கு ஜனாதிபதி தேசிய விருது



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

கைத்தொழில் திறமைக்கான "மத்திய ரக" ஜனாதிபதி தேசிய விருதினை (National Industry Excellence 2023 Award) சாய்ந்தமருதின் பிரபல தொழிலதிபரும் றியோ மார்கட்டிங் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும், முன்னாள் கல்முனை மாநகரசபை உறுப்பினருமான றிஸ்மீர் நெய்னா முஹம்மட் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வு கொழும்பு தாமரை தடாகத்தில் அண்மையில் கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஸ் பத்திரன தலைமையில் இடம்பெற்றது.

## ரூ.6 மில்லியன் செலவில் ஐயங்கேணி அப்துல் காதர் வித்தியாலயத்தில் புதிய கலாசார மண்டபம்

(ஏறாவூர் நிருபர்)



குவைத் நாட்டின் அப்துல்லா அந்நூரி அமைப்பினால் சுமார் ஆறு மில்லியன் ரூபா நிதியுதவியுடன் மட்டக்களப்பு ஏறாவூர் ஐயங்கேணி அப்துல் காதர் வித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ள கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.எஸ். லாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ். எம். எம். அமீர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

அப்துல்லா அந்நூரி அமைப்பின் அபிவிருத்தி பிரிவிற்கான ஐ.எஸ்.ஆர்சி திட்ட இணைப்பாளர் ஜுனைட் நழீமி , பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.ஜே.எப்.றிப்கா மற்றும் கல்வித்துறை அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

இக்கலாசார மண்டபம் அடுத்த சுமார் மூன்று மாத காலத்திற்குள் அடிப்படை வசதிகளை உள்ளடக்கியதாக அமைக்கப்படவுள்ளது.

## உணவகங்களில் பணிபுரிபவர்களுக்கு மருத்துவ சான்றிதழ் அவசியம்

### சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் ஏ. எம்.முகம்மது இஸ்ஸதீன்



(ஒலுவில் விசேட நிருபர்)

உணவ கங்கள் மற்றும் உணவு கை யாளும் நிலையங்களில் பணிபுரிபவர்கள் மருத்துவ சான்றிதழை தன்வசம் வைத்திருக்க வேண்டுமென, அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் ஏ. எம்.முகம்மது இஸ்ஸதீன் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட பிரதேசங்களில் உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பாவனைக்குதவாத உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படுவதாக பொது மக்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஐ.எல். எம். றிபாஸின் ஆலோசனைக்கமைய பொதுச்சுகாதார பரிசோதகர்களால் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள், பேக்கரிகள் என்பவற்றில் இரவு வேளைகளில் விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். பரிசோதனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் பாவனைக்குதவாத உணவுப் பண்டங்கள், காலவதியான உணவுப் பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டு அழித்தொழிக்கப்பட்டு வருவதுடன் உரிமையாளர்களுக்கு முதல் தடவையாக எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகாரசட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய வேண்டுமெனவும், உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றை தூய்மையாக வைத்திருக்க வேண்டுமெனவும், உணவகங்களில் பணியாற்றுபவர்கள் கையுறை போன்றவற்றை பாவிக்க வேண்டுமென கேட்டுள்ளார். உணவு பாதுகாப்பு சட்ட திட்டங்களை மீறுபவர்களுக்கெதிராக நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதோடு, பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அதனை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## அல்ஹம்றா மத்திய கல்லூரியில் இருவர் அதிபராக தெரிவு



(தோப்பூர் குறூப் நிருபர்)

தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியிலிருந்து அதிபர் தரம் 111 இற்கு தெரிவு செய்யப்பட்டு நியமனம் பெற்றுள்ள முகம்மது முகைதீன் நௌபீக் மற்றும் எஸ். நியாஸ் ஆகிய ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி முதல்வர் எஸ்.எம்.றஹீம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது புதிய இரு அதிபர்களும் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதோடு கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மூலம் கௌரவிக்கப்பட்டு வாழ்த்தப்பட்டனர்.

## மட்டக்களப்பில் திருட்டு அதிகரிப்பு

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

மட்டக்களப்பில் அண்மைக்காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துவருவதாக பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

பகல், இரவு என திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமையால் பொதுமக்கள் அவதானமாக நடந்துகொள்ளுமாறு பொலிஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

குறிப்பாக துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி, கார், வான் போன்றவற்றை பூட்டி திறப்புக்களை பாதுகாப்பாக வைத்துகொள்வதுடன், தங்க ஆபரணங்கள், பணம், ஆவணங்கள் போன்றவற்றையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளனர். அது மட்டுமின்றி, சிறுபிள்ளைகளை தனிமைப்படுத்தி வீட்டில் விட்டு வெளியே செல்வதையும் தவிர்க்கவும்.

சிறுவர்களுக்கு தெரியாதவர்கள் இனிப்பு பண்டம் வழங்கினால் அதை வாங்கி உண்ணவேண்டாம் என பிள்ளைகளுக்கு அறிவுறுத்துவதுடன் வீட்டிற்கு அறிமுகம் இல்லாத நபர்கள் வருவதை அனுமதிக்கவேண்டாம் எனவும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை யாசகர்கள், பொருட்களை விற்பனை செய்வதாக கூறிவரும் நபர்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் பொலிஸார் தெரிவித்தார்.

## இனந்தெரியாத நபர்களால் பஸ்வண்டிக்கு தீவைப்பு

ஆரையம்பதி தினகரன், மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பஸ் வண்டி இனந்தெரியாத நபர்களினால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏம். எஸ்.ஏ. ரஹீம் தெரிவித்தார்.

காத்தான்குடி ஆரையம்பதியில் கல்முனை மட்டக்களப்பு வீதியில் ஆரையம்பதி பிரதான வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பஸ் வண்டியே இவ்வாறு தீ வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பொத்துவில் பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பஸ் வண்டியை நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை 7 மணியளவில் உரிமையாளர் நிறுத்தி வைத்துவிட்டு அவரது சொந்த இடமான கொக்கட்டிச்சோலைக்குச் சென்றுவிட்டார்.

இதனையடுத்தே நேற்று அதிகாலை 3:30 மணியளவில் பஸ் தீப்பற்றி எரிந்துள்ளதாக தெரியவருகின்றது.

மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதிலும் பஸ் வண்டி முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## அரச உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் போதைப்பொருள் முற்தடுப்பு செயற்பாடுகளில் ஈடுபட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த் தலைமையில் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலைய நிறைவேற்று பணிப்பாளர் சம்பத் டி சேரத்தின் பங்குபற்றுதலுடன் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட செயலகம், மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்துடன் இணைந்து இது தொடர்பான ஆறுமாத கால பயிற்சி நெறியை மேற்கொண்டனர். இப்பயிற்சி நெறியை நிறைவு செய்த உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் மாவட்ட செயலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டன. இதன்போது 88 உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன. இப்பயிற்சி செயலமர்வில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்கள், போதைப்பொருள் முற்தடுப்பு உத்தியோகத்தர்கள், உளவளத் துணை உத்தியோகத்தர்கள் என பல்வேறு தரப்பினரும் பங்குபற்றியிருந்தனர்.

## கோட்டைக்கல்லாற்றில் கதை சொல்லல் நிகழ்வு

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)



மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் கீழுள்ள கோட்டைக்கல்லாறு பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் சிறுவர்களுக்கான கதை சொல்லல் நிகழ்வு கோட்டைக்கல்லாறு விநாயகர் பாலர் பாடசாலையில் நூலகப் பொறுப்பாளர் திருமதி வினோதா அன்ரோ தலைமையில் நடைபெற்றது.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கோட்டைக்கல்லாறு பொது நூலகத்தின் ஏற்பாட்டில் மாணவர்கள் மத்தியில் பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

பாடசாலைகளில் வாசிப்பு போட்டிகள் மற்றும் நூல் அன்பளிப்பு, கதை சொல்லல் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெற்றுவருகின்றன. விநாயகர் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு ஆடல், பாடலுடன் கதை சொல்லல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதில் வளவாளராக கதை சொல்லி அகரம் செ.துஜியந்தன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கதை சொல்லி மகிழ்வித்தார். இந்நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியைகளான ஜெ.மனோரஞ்சிதம், செ.சரணிகா ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

**I. தரப்பட்ட பாடலை நன்கு வாசித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்குக.**

கறுப்பு வண்ணக் காக்கையாரே
கண்ணை உருட்டி கரைகிறாய்
விருந்தில் கலந்து கொள்ளவா
விரைந்து உறவை அழைக்கிறாய்

ஒற்றுமையின் வலிமையை
உணர்த்த வானில் கரைகிறாய்
வண்ணக் கறுப்பே ஆனாலும்
வருத்தம் மனதில் இல்லையே

சுத்தம் தெருவில் செய்கிறாய்
சிறந்த தொண்டன் ஆகிறாய்
வண்ணக் குயில் குஞ்சுக்கு
வளர்ப்பு தாயும் நீயாவாய்

01. இப்பாடலில் கூறப்பட்ட பறவை எது? ……………………………………………

02. அப்பறவையின் சிறப்பியல்பு யாது? …………………………………………....

03. யாருக்கு காக்கை வளர்ப்புத் தாய் ஆகிறது? ……………………………………..

04. ஒத்தகருத்து தருக.

i. வானில் - …………………………... ii. கண்ணை - …………………………

05. எதிர்கருத்து தருக.

i. கறுப்பு - ………………………….... ii. சுத்தம் - ……………………………

06. இப்பாடலிலுள்ள உயர்திணை சொல் எது? ………………………………….......

**II. ஆண்பால் வாக்கியங்களை பெண்பால் வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

07. பேரன் கதை கேட்டான் - ………………………………………………………...

08. அவன் கதை எழுதினான் - ……………………………………………………..

09. உழவன் வயல் உழுதான் - ……………………………………………………..

**III. மரபுப் பெயர்களை எழுதுக.**

10. வாழையின் இளங்காய் - ………………………………………………………...

11. நெல்லின் இளையது - …………………………………………………………..

12. ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழாவானது

…………………………………………………………………………………………

13. கோழிகளை வளர்க்கும் இடமானது - …………………………………………

14. பின்வரும் பிராணிகளின் தொனிகளை எழுதுக.

i. பன்றி - ………………………… ii. கிளி - ……………………………

iii. பல்லி - ………………………… iv. கோழி - ……………………..……...

15. பின்வரும் சொற்களை சேர்த்தெழுதுக.

i. பல் + பசை - …………………… ii. மலர் + இதழ் - ……………………..

iii. நஞ்சு + பாம்பு - ………………… iv. பூ + தோட்டம் - ………………...…

16. பின்வரும் சுருக்கக் குறியீடுகளை விரித்து எழுதுக.

i. இ.மி.ச - ……………………………………………………………………

ii. மு.ப. - ……………………………………………………………………

17. பழமொழிகளை பூர்த்தி செய்க

i. அகத்தின் அழகு - ……………………………………………………………

ii. தொட்டிற் பழக்கம் - ………………………………………………………

18. மரபுத் தொடரின் கருத்தை எழுதுக.

i. கைகலத்தல் - …………………..... ii. காது குத்துதல் - ………………...…

19. பின்வரும் தமிழ் வார்த்தைகளின் சிங்கள கருத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

i. நண்பன் - ……………………….. ii. வங்கி - ……………………………....

iii. அதிபர் - ……………………….. iv. தண்ணீர் - ………………………….....

20. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

i. Do you like this? - ……………………………………………………………

ii. Be careful - ……………………………………………………………...…

**IV. கீழே காட்டப்பட்ட படங்களின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.**





i. ………………………………... ii. ……………………………..

21. இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது. இங்கு குறிப்பிடப்பட்ட எண்ணை எண் பெயராக தருக.

…………………………………………………………………………………………

22. பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்துக. 25101, 25111, 25110, 25011

…………………………………………………………………………………………

23. 

மேலேயுள்ள உருக்களின் எண்ணிக்கையில் 2/6 மடங்கு யாது?

…………………………………………………………………………………………

24. 

நிறம் தீட்டப்படாத பகுதியை தசம எண்ணாக தருக.

…………………………………………………

25. பிற்பகல் 4.24 இதனை நியம நேரமாக எழுதினால் ……………………………...

26. ஒரு கூடையில் 75 மாம்பழங்கள் இருந்தன. அவற்றில் 25 பழங்கள் அழுகிவிட்டன. வியாபாரி இன்னும் 50 பழங்களை கூடையில் இட்டார். தற்போது கூடையிலுள்ள மொத்த பழங்கள் எத்தனை?

…………………………………………………………………………………………

27. ஒரு வரிசையில் 8 கதிரைகள் வீதம் 640 கதிரைகளை எத்தனை வரிசையில் அடுக்கலாம்?

…………………………………………………………………………………………

28. 1500ml + 2300ml + 1200ml இவற்றை மொத்தமாக கூட்டினால் அதிலுள்ள 500ml கள் எத்தனை?

…………………………………………………………………………………………

29. 

உருளை ஒன்றினை படத்தில் காட்டியவாறு 4 சமபங்காக வெட்டினால் கிடைக்கும் மொத்த முகங்கள் எத்தனை?

…………………………………………………

**V. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. எளிமையான வாழ்க்கையை விளக்க பொருத்தமான விடை
i. நகர மயமாக்கல் வாழ்க்கை ii. கிராமிய வாழ்க்கை
iii. தொடர்மாடி வீடுகளில் வாழும் வாழ்க்கை

31. உடல், உள, உள்ளார்ந்த செயற்பாடுகளின் ஆரோக்கியத்திற்காக செயற்பாடுகளை செய்ய வேண்டியது
i. வாரந்தோறும் ii. மாதந்தோறும் iii. நாள்தோறும்

32. இலங்கையின் தேசிய பறவை, மலர், மரம் என்பன முறையே
i. காட்டுச்சேவல், நாகமரம், அல்லி ii. காட்டுச்சேவல், அல்லி, நாகமரம்
iii. மரஅணில், அல்லி, நாகமரம்

33. இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவரும் வழிபடும் இடம்
i. சீகிரியா ii. எம்பக்க தேவாலயம் iii. சிவனொளிபாதமலை

34. முகமூடிகளுக்கு பிரசித்தி பெற்ற நகரம்
i. பலாங்கொடை ii. கண்டி iii. அம்பலாங்கொடை

35. பூக்களின் மகரந்த சேர்க்கைக்கு உதவும் பிராணி அல்லாதது
i. வண்டு ii. எறும்பு iii. வண்ணத்துப்பூச்சி

36. நுளம்பினால் பரவும் நோய் அல்லாதது
i. நீர்வெறுப்பு நோய் ii. டெங்கு iii. மலேரியா

37. நிலத்தை தோண்டி முட்டையிடும் பிராணி
i. ஓணான் ii. பல்லி iii. தவளை

38. கருங்குரங்கு எமது நாட்டுக்குரிய
i. முலையூட்டி ii. நகருயிரி iii. ஈருடகவாழி

39. விற்றமின் D குறைபாட்டினால் ஏற்படும் பாதிப்பானது
i. எலும்பு நோய் ii. கண் நோய் iii. தோல் நோய்

40. அவித்து பானம் தயாரிக்கக் கூடிய பூ வகையானது
i. நெல்லி ii. வில்வம் iii. ஆவாரம் பூ

41. இயற்கை வர்ணங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பூவகை
i. வில்வம்பூ ii. நீல அல்லி iii. காக்கணம்பூ

42. சின்னம்மை நோய் ஏற்படக் காரணம்
i. நுளம்பு கடிப்பதனால் ii. அசுத்த நீரினால் iii. வைரசினால்

43. கிணற்றிலிருந்து நீர் அள்ளப் பயன்படுவது
i. கப்பி ii. செக்கு iii. மட்டக்கம்பு

44. உடலில் நீரின் அளவு குறைவதனால் பாதிப்படையும் உறுப்பானது
i. இதயம் ii. சிறுநீரகம் iii. நுரையீரல்

45. ஆணி அரையவும் கழற்றவும் பயன்படுவது
i. சுத்தியல் ii. குறடு iii. வாள்

46. மின் காந்தமொன்றை ஆக்க தேவையற்ற பொருள்
i. மின்குமிழ் ii. செப்புக்கம்பி iii. ஆணி

(11ஆம் பக்கம் பார்க்க)

(10 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

47. 
இக்குறியீடு குறித்துக் காட்டுவது
i. முன்னால் பாதை வளைவு
ii. முன்னால் வழுக்கும் பாதை
iii. முன்னால் வாகனம் நிறுத்தத் தடை

48. பொது வாகனம் ஒன்றாக அமையாதது
i. புகையிரதம் ii. பேருந்து iii. சைக்கிள்

49. அடிப்படைத் தேவைகளுள் அடங்காதது
i. உணவு, உடை ii. உணவு, வீடு iii. உணவு, வாகனம்

50. தேசப்படத்தில் அதிவேக பாதையை குறிக்கும் பிரதான நிறமானது
i. ஊதா ii. பச்சை iii. சிவப்பு

51. குழுவாக விளையாடும் விளையாட்டானது
i. உயரம் பாய்தல் ii. கரப்பந்து iii. ஈட்டி எறிதல்

52. காற்றினால் பரவும் வித்தானது
i. பாக்கு ii. இறப்பர் iii. எண்ணெய் வித்து

53. இலங்கைக்கு கிழக்கு திசையில் அமைந்துள்ள நாடு அல்லாதது
i. ஆபிரிக்கா ii. மலேசியா iii. தாய்லாந்து

54. 
இக்குறியீடு காட்டும்அறிவுறுத்தலானது
i. அபாயம்
ii. அவதானம்
iii. எச்சரிக்கை

55. நீண்ட நாட்கள் உயிர்வாழக்கூடிய பிராணியானது
i. கடலாமை ii. கரப்பான் iii. திமிங்கலம்

56. உணவை உறிஞ்சிக் குடிக்கும் பிராணியானது
i. அட்டை ii. முதலை iii. கோழி

57. பம்பரகந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ள இடமானது
i. நுவரெலியா ii. பதுளை iii. ஹட்டன்

58. இலங்கையின் மிகப்பெரிய வனமானது
i. சிங்கராஜ வனம் ii. யால iii. பின்னவல

59. சனத்தொகை கூடிய மாவட்டமானது
i. கண்டி ii. யாழ்ப்பாணம் iii. கொழும்பு

60. ‘எனது வாழ்வின் குறிக்கோள்’ என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் அமைக்குக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருப்பதோடு எழுவாய், பயனிலை தொடர்பு சரியான முறையில் பேணப்பட வேண்டும்.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

## கடந்த வார (03.11.2023) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 1 | 11. 2 | 21. 1 | 31. 2 |
| 02. 3 | 12. 2 | 22. 3 | 32. 3 |
| 03. 2 | 13. 1 | 23. 1 | 33. 1 |
| 04. 2 | 14. 2 | 24. 2 | 34. 3 |
| 05. 1 | 15. 3 | 25. 3 | 35. 2 |
| 06. 3 | 16. 2 | 26. 3 | 36. 1 |
| 07. 2 | 17. 3 | 27. 1 | 37. 3 |
| 08. 1 | 18. 2 | 28. 2 | 38. 3 |
| 09. 3 | 19. 1 | 29. 1 | 39. 1 |
| 10. 1 | 20. 2 | 30. 1 | 40. 2 |

# மலைச்சாரல்



## காற்றுடன் மழையால் கடை, வீடுகள் சேதம்

**ஊவா சுழற்சி நிருபர்**

மலையகத்தில் தற்போது நிலவிவரும் சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து காற்றுடன் மழை பெய்ததில் வீடுகளும் கடைகளும் சேதமடைந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர் .

ஊவா பரணகம பிரதேச செயலகப் பிரிவில் இரண்டு வீடுகளும் வெலிமடை பிரதேச செயலகப் பிரிவில் இரண்டு கடைகளும் வீடுகள் சிலவற்றின் கூரைகளும் காற்றுடனான மழையால் சேதமடைந்துள்ளதாகவும், பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

தீபாவளிப் பண்டிகை;

## ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில் தமிழ் பாடசாலைகளுக்கு நவ. 13 விடுமுறை

**ஊவா சுழற்சி, காவத்தை தினகரன் நிருபர்கள்**




தீபாவளிப் பண்டிகையை யிட்டு ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் எதிர்வரும் திங்கட்கிழமை (13) தமிழ்ப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (12) தீபாவளிப் பண்டிகை தினமாகையால், மறுநாள் 13ஆம் திகதி தமிழ்ப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குமாறு பெற்றோர் உட்பட பல்வேறு தரப்பினரிடமிருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்நிலையில், ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் மற்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க ஆகியோரின் ஆலோசனைக்கமைய எதிர்வரும் 13ஆம் திகதி விடுமுறை வழங்கப்படுவதாகவும் அறிவிக் கப்பட்டுள்ளது.

ஆகையால், ஊவா மாகாணத்தில் 13ஆம் திகதி விடுமுறை தினத்துக்கு பதிலாக பிறிதொரு தினத்தில் தமிழ்ப் பாடசாலைகள் இயங்கவுள்ளதாக, அம்மாகாண கல்விச் செயலாளர் பாலித்த மஹிந்தபால ஜோபியஸ் தெரிவித்தார்.

இதேவேளை, சப்ரகமுவ மாகாணத்தில் 13ஆம் திகதி விடுமுறை தினத்துக்கு பதிலாக இம்மாதம் 18ஆம் திகதி (சனிக்கிழமை) பாடசாலைகளை நடத்துமாறு சகல தமிழ்ப் பாடசாலை அதிபர்களுக்கும் சப்ரகமுவ மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனு ஆராச்சி அறிவித்துள்ளார்.

## அதிபர் சேவை தரம் – 03க்கு சப்ரகமுவவில் 373 பேர் நியமனம்

### 16ஆம் திகதி முதல் பயிற்சிப்பட்டறை



**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

சப்ரகமுவ மாகாணத்தில் அதிபர் சேவை தரம் 03 க்கு நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ள 373 பேருக்கு எதிர்வரும் 16ஆம் திகதி முதல் ஒரு மாதம் விசேட பயிற்சிப்பட்டறை நடத்தப்படவுள்ளது. சப்ரகமுவ மாகாணத்தில் புதிய அதிபர்கள் 373 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு அம்மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க தலைமையில் கடந்த சனிக்கிழமை (04) கலவான தேசிய பாடசாலையில் நடைபெற்றது.

இதன்போது, 373 பேருக்குமான அதிபர் நியமனக் கடிதத்தை சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க வழங்கி வைத்தார்.

## வான்கதவுகள் திறப்பு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மத்திய மலைநாட்டில் நேற்று புதன்கிழமை (08) மதியம் இடி, மின்னலுடன் பெய்த அடை மழையைத் தொடர்ந்து கென்யோன் நீர்த்தேக்கம் நிரம்பியதால், அந்நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகள் மூன்று அங்குலத்துக்கு திறந்து விடப்பட் டன.

இதனால் தாழ்நிலப் பிரதேசங்களிலுள்ள பொதுமக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு, கென்யோன் நீர்மின் நிலையப் பொறுப்பதிகாரியும் நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபடவும் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரத்தினபுரி நீர்நிலைகளில் நீராடுவதை தவிர்க்கவும்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்வதை தொடர்ந்து இம்மாவட்டத்திலுள்ள ஆறுகள் மற்றும் நீர்த் தேக்கங்கள் வெள்ள நீரால் நிரம்பியுள்ளதால், இவற்றில் நீராடுவதை தவிர்க்குமாறு பொதுமக்களிடம் இரத்தினபுரி மாவட்ட நீர்வீழ்ச்சிகள் பாதுகாப்பு அமைப்பு அறிவுறுத்தியுள்ளது. ஆறுகள், நீர்த் தேக்கங்கள் மற்றும் நீர்வீழ்ச்சிகளில் நீராடுவதையும் பொழுது போக்குவதையும் தவிர்க்குமாறும், பொதுமக்களுக்கு அந்த அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தினூடாக சிவனொளிபாத மலை செல்லும் 3 வீதிகளை அண்டிகளு, வளவை கங்கைளும் இவற்றின் கிளை ஆறுகளும் நீர்வீழ்ச்சிகளும் உள்ளன.

இவற்றில் நீராடும் யாத்திரிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் கவனயீனத்தால் உயிர் ஆபத்தை எதிர்நோக்குவதாகவும், இரத்தினபுரி மாவட்ட நீர்வீழ்ச்சிகள் பாதுகாப்பு அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, இந்நீர்நிலைகள் உள்ள இடங்களில் இடப்பட்டுள்ள அறிவுறுத்தலை பின்பற்றி அவதானமாகச் செயற்பட வேண்டுமெனவும், அந்த அமைப்பு மேலும் தெரிவித்தது.

## மாணவர்களுக்கு பாதணி வழங்கல்

**தலவாக்கலை குறூப் நிருபர்**



லிந்துலை பெயாபீல்ட் மற்றும் தலவாக்கலை பெயாவல் பாடசாலைகளில் கல்வி கற்று வரும் மாணவர்களின் நன்மை கருதி அம்மாணவர்களுக்கு இலவசமாக பாதணிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

சைப்ரஸ் 'ஐடன்' அமைப்பும் சோசலிச வாலிபர் சங்கமும் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்தன.

இந்நிகழ்வில் சோசலிச இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எரங்க குணசேகர, சர்வதேச விவகார செயலாளர் அஞ்சன அமரசிங்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



கொத்மலை கல்வி வலயத்தைச் சேர்ந்த குறைந்த வருமானம் பெறும் 900 பாடசாலை மாணவர்களுக்கு மத்திய மாகாணத்தின் உதவி மாகாண கல்விச் செயலாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.பி.திஸாநாயக்க, தம்சவிய சர்வதேச நிறுவனத் தலைவர் துஷார குணதிலக ஆகியோர் தலைமையில் தம்சவிய சர்வதேச மன்றத்தால் புலமைப்பரிசில் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மாணவியொருவருக்கு புலமைப்பரிசில் வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

மாத்தளையில்

## 'கிராமத்துக்கு நடமாடும் சேவை'

**தம்புள்ளை தினகரன் நிருபர்**



'கிராமத்துக்கு நடமாடும் சேவை' மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ.கமகேயின் தலைமையில் மாத்தளை, பல்லேப்பொல பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

பல்லேப்பொல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடனும் மத்திய மாகாணக் கூட்டுறவுச் சேவைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டிலும் இந்த நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

இதன்போது மருத்துவ பரிசோதனை முகாம், கண் பரிசோதனை முகாம், சமுர்த்தி சந்தை, பயன்தரும் மரக் கன்றுகள் விநியோகம் ஆகிய சேவைகள் மேற்கொள்ளப்பட்டன.

மாத்தளை மாவட்டத்திலுள்ள பாடசாலை அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் கூட்டுறவுத்துறை சங்கத் தலைவர்களின் பிரச்சினைகளும் இதன்போது கவனத்தில் கொள்ளப்பட்டன.

# வடமாகாணத்தில் 25,000 நிரந்தர வீட்டுத்திட்ட வேலை ஆரம்பம்

## ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவிப்பு

**கோப்பாய் குறூப், யாழ். விசேட, யாழ்ப்பாணம் குறூப் நிருபர்கள்**

வடமாகாணத்தில் 25,000 நிரந்தர வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் சூரியசக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தின் முன்னாயத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சால் புதிதாக நியமிக்கப்பட்ட வெளிநாட்டு உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்கள் வடமாகாணத்துக்கு கண்காணிப்பு விஜயம் செய்த போது, வடமாகாண ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடினர்.



இதன்போது, தற்போதைய அரசாங்கத்தின் கீழ் வடமாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வடமாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக நீண்டகால மற்றும் குறுகியகால வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும், ஆளுநர் தெரிவித்தார்.

மன்னார் - இந்தியா படகுசேவை, மீன்பிடி, விவசாயம், நீர்ப்பாசனம், கிராமிய பொருளாதாரம் ஆகியவை தொடர்பாகவும் ஆளுநர் விளக்கமளித்தார்.

வடமாகாண அபிவிருத்தி மற்றும் பொதுமக்களின் வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஆளுநரை பாராட்டிய உயர்ஸ்தானிகர்களும் தூதுவர்களும் தமது அதிகபட்ச ஆதரவை வழங்குவதாகவும் உறுதியளித்தனர்.

# வடக்கின் உதயம்

கிளிநொச்சியில் பெண் கொலை

## குற்றவாளிக்கு 9 வருடங்களின் பின் மரணதண்டனை தீர்ப்பு

**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சி, பிரமந்தனாறு பிரதேசத்தில் பெண் ஒருவரைக் கொலை செய்த குற்றவாளிக்கு ஒன்பது வருடங்களின் பின்னர் நேற்று வியாழக்கிழமை (09) கிளிநொச்சி மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

பிரமந்தனாறு பிரதேசத்தில் கடந்த 2014ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி மாத்தளையைச் சேர்ந்த இராஜசுலோஜனா கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டு, கிணற்றினுள் தள்ளிவிடப்பட்டார். இதன் பின்னர், இவர் சடலமாக மீட்கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணையை முன்னெடுத்த கிளிநொச்சி பொலிஸார், இப்பெண்ணின் காதலான குற்றவாளியைக் கைது செய்திருந்ததுடன், கொலைக்கு பயன்படுத்திய கத்தி, அப்பெண்ணின் கையடக்கத் தொலைபேசி மற்றும் ஆடைகளையும் கைப்பற்றியிருந்தனர்.

இவருக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, பின்னர் சட்ட மாஅதிபர் திணைக்களத்தால் கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டு வந்த நிலையில், இந்த வழக்குத் தொடர்பான தீர்ப்பு கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.ஏ.சகாப்தீன் முன்னிலையில் வழங்கப்பட்டது.

குற்றாவளிக்கு தீர்ப்பு வாசித்துக் காட்டப்பட்டதுடன், இவரது இறுதி விருப்பம் கேட்டறியப்பட்டு, இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பு வழங்கிய போது, அனைவரும் எழுந்து நின்றதுடன் நீதிமன்றத்தின் அனைத்து மின்விளக்குகளும் அணைக்கப்பட்டு நீதிமன்றச் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட முதலாவது மரண தண்டனை தீர்ப்பு இதுவாகும்.

யாழ்ப்பாணத்தில்

## ஐ.டி.ஆர்.பிரான்சின் ஆண்டு நிறைவு விழா

சர்வதேச தமிழ் வானொலி ஐ.டி.ஆர்.பிரான்சின் 27ஆவது ஆண்டு நிறைவு விழா, பூமணி அம்மா அறக்கட்டளையின் அனுசரணையுடன் எதிர்வரும் டிசெம்பர் 2ஆம் திகதி யாழ். பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளதுடன், மாணவர்கள் மற்றும் ஆளுமைகள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத் தலைவர் பா.கு.சண்முகம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக லேக் ஹவுஸ் நிறுவன வெளியீடான தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், தமிழகத்திலிருந்து அரிமா சங்கத்தின் உலகளாவிய துணைத் தலைவர் செந்தமிழ் தேனி இரா.மதிவாணன், தொழிலதிபர் எஸ்.சுந்தரவேலு ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நூற்றாண்டுகால சிறப்புரை நிகழ்வு



யாழ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தேசிய வாசிப்பு மாதத்தை யொட்டிய நூற்றாண்டுகாலச் சிறப்புரை நிகழ்வு அக்கலாசாலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (08) கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, 'ஆசிரியர்களும் வாசிப்புப் பழக்கமும்' எனும் தலைப்பில் ஜீவநதி சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் கலாமணி பரணீதரன் சிறப்புரையாற்றியதுடன், அதிதி அறிமுக உரையை கலாசாலை விரிவுரையாளர் வேல். நந்தகுமார் ஆற்றினார்.

இந்நிகழ்வில் ஜீவநதி சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் கலாமணி பரணீதரன் கலாசாலை முகாமைத்துவக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டதுடன், ஜீவநதி சஞ்சிகை வெளியீடுகளை கலாசாலை நூலகத்துக்கு பரணீதரன் வழங்கி வைத்தார்.

## விபத்தில் இரு சாரதிகள் காயம்

**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், உரும்பிராய் சந்திரோதயா (ஞானபண்டிதர்) பாடசாலைக்கு அருகில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் சாரதிகள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

உரும்பிராய் சந்தியிலிருந்து மருதனார்மடம் செல்லும் வீதியில் பயணித்த டிப்பர் வாகனமும் கன்டர் வாகனமும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த சாரதிகள் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## கிராஞ்சியில் கடலட்டை பண்ணை அமைக்க பலர் விண்ணப்பிப்பு

**யாழ். விசேட நிருபர்**

கிராஞ்சியில் கடலட்டை பண்ணை அமைக்க பலர் விண்ணப்பித்துள்ளதாக, கிராஞ்சி ஸ்ரீமுருகன் கடற்றொழிலாளர் சங்கச் செயலாளர் த.மகேந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாரம்பரிய கடற்றொழில் செய்பவர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் கடலட்டை பண்ணை அமைக்க விண்ணப்பித்தவர்களுக்கு பண்ணை அமைக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த காலத்தில் கிராஞ்சியில் கடலட்டை பண்ணை வழங்க ஒரு சிலர் எதிர்ப்பு தெரிவித்த போதும், அவர்களில் சிலர் தவறை உணர்ந்து கடலட்டைப் பண்ணைக்கு விண்ணப்பித்துள்ளனர்.

கடலட்டை பண்ணை போட்டவர்களுக்கு இலட்சக்கணக்கான பணம் இலாபமாகக் கிடைத்துள்ளது.

இந்நிலையிலேயே, மேலும் பலர் கடலட்டை பண்ணை அமைக்க விண்ணப்பித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

நெடுந்தீவில் கைதான தமிழக மீனவர் 26 பேரில்

## நால்வர் நிபந்தனையுடன் விடுதலை; 22 பேருக்கு விளக்கமறியல் நீடிப்பு

**பருத்தித்துறை விசேட நிருபர்**

எல்லை தாண்டி நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழகக் கடற்றொழிலாளர் 26 பேரில் 4 பேரை நிபந்தனையுடன் விடுதலை செய்த ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஜே.கஜநிதிபாலன், ஏனைய 22 பேரின் விளக்கமறியலை இம்மாதம் 15ஆம் திகதிவரை மீண்டும் நீடித்துள்ளார்.

நெடுந்தீவில் கடந்த 14ஆம் திகதி தமிழகக் கடற்றொழிலாளர் 12 பேர் 3 படகுகளுடனும் கடந்த 28ஆம் திகதி தமிழகக் கடற்றொழிலாளர் 14 பேர் 2 படகுகளுடனும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்களின் வழக்கு விசாரணை நேற்று முன்தினம் புதன்கிழமை (08) நீதிமன்றத்தில் மீண்டும் முன்னெடுக்கப்பட்ட போதே, நீதவான் இவ்வாறு தீர்ப்பளித்தார்.

14ஆம் திகதி கைது செய்யப்பட்ட 12 கடற்றொழிலாளர்களில் ஒருவர் படகொன்றின் உரிமையாளராகையால், அப்படகை பறிமுதல் செய்ய நீதவான் உத்தரவிட்டதுடன், அப்படகிலிருந்த உரிமையாளர் உட்பட 4 பேருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டனையை விதித்து நிபந்தனையுடன் விடுதலை செய்தார்.

## யாழ். கோப்பாயில் மோதல்; 23 பேருக்கு விளக்கமறியல்

**யாழ். விசேட நிருபர்**

கோப்பாய் மத்தி பிரதேசத்தில் இரண்டு தரப்பினருக்கு இடையில் இடம்பெற்ற மோதலைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட 23 சந்தேகநபர்களை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா நேற்று முன்தினம் புதன்கிழமை (08) உத்தரவிட்டார்.

மேற்படி பிரதேசத்தில் இரண்டு தரப்பினருக்கு இடையில் நீடித்து வந்த முரண்பாடு, கடந்த திங்கள் (06) இரவிலிருந்து செவ்வாய் (07) வரை மோதலாக மாறி இடம்பெற்றதுடன், இந்த மோதல் காரணமாக பெறுமதியான சொத்துகளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணையை முன்னெடுத்த போது, இரண்டு தரப்பிலுமாக 3 பெண்கள் உட்பட 23 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில் நபர்களை தாக்கியமை, சொத்துகளுக்கு சேதம் விளைவித்தமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இச்சந்தேகநபர்கள் மீது நீதிமன்றத்தில் முதலாவது அறிக்கையை தாக்கல் செய்து, இவர்களை பொலிஸார் முன்னிலைப்படுத்திய போதே, இந்த விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டது.

தென்மராட்சி

## பண்பாட்டு பெருவிழா







**சாவகச்சேரி விசேட நிருபர்**

வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினதும் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தினதும் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலகமும் தென்மராட்சி பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை (08) தென்மராட்சி கலாசார மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தென்மராட்சி பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான உஷா சுபலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், சிறப்பு விருந்தினராக வடமாகாணக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர் சி.சுரேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, கலை நிகழ்வுகள் நடைபெற்றன. அத்துடன், பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், கலைஞர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் மூக்குக்கண்ணாடி வழங்கல்



**கரவெட்டி தினகரன் நிருபர்**

விபத்தில் விழிப்புலன் பார்வை குன்றிய ஒருவருக்கு யாழ். தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 65,000 ரூபா பெறுமதியான மூக்குக்கண்ணாடி கடந்த திங்கட்கிழமை (06) வழங்கப்பட்டது.

பதுளையைச் சேர்ந்த ஒருவருக்கே பதுளை சிறுவர் இல்லத்தில் வைத்து இந்த உதவி வழங்கி வைக்கப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் அமுத கலாசுரபி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் இந்த உதவியை வழங்கி வைத்தார். இதன்போது சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்களும் கலந்துகொண்டனர்.

## செய்வினை அகற்றுவதாக கூறி இனந்தெரியாத நபர் பண மோசடி

### யாழ். மக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணத்தில் பெரும் பணக்காரர்களை இலக்கு வைத்து, செய்வினையெனக் கூறி இனந்தெரியாத ஒருவர் பண மோசடியில் ஈடுபட்டு வருவதுடன், இது தொடர்பாக வர்த்தகர்கள் உட்பட அனைவரையும் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பணக்காரர்களை இலக்கு வைத்து அவர்களின் தொலைபேசிக்கு அழைப்பு எடுக்கும் இந்நபர், "தனது ஞான திருஷ்டியால் உங்களின் தொலைபேசி இலக்கத்தை அறிந்து கொண்டதாகவும் உங்களுக்கு ஆபத்து வரப் போகிறது" எனக் கூறி அழைப்பை துண்டித்து விடுவார்.

இதனைக் கேட்டவர்கள் குழப்பத்தில் இருக்கும் போது, மறுநாள் மீண்டும் அவர்களுக்கு அந்நபர் அழைப்பை எடுத்து, "உங்களுக்கு பெருநட்டம் ஏற்படப் போவதுடன், உங்கள் வளர்ச்சியில் பொறாமை கொண்டவர்கள் உங்களுக்கு செய்வினை செய்து சூனியம் வைத்துள்ளார்கள். அந்த செய்வினையை உடனே அகற்ற வேண்டும். நான் ஒரு மாந்திரீகவாதி. என்னால் மட்டுமே அதனை அகற்ற முடியும்" எனக் கூறுவதுடன், சில பொதுவான பிரச்சினைகளைக் கூறி அவர்களுக்கு நம்பிக்கை வரும் வகையில் நடந்துகொள்வார்.

ஒருவாறு அவர்களுக்கு நம்பிக்கை வந்ததும், அவர்களிடம் முற்பணமாக பெருந்தொகை பணத்தை அவர் கூறும் வங்கிக்கணக்கில் வைப்பிலிடக் கூறுவார். பணம் வைப்பிலிடப்பட்டதும், அவரது தொலைபேசி இலக்கம் செயலிழந்து விடுவதுடன், அதன் பின்னரே தாம் ஏமாற்றப்பட்ட விடயத்தை பணம் வைப்பிலிட்டவர்கள் அறிவதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நபருக்கு எதிராக முறைப்பாடு செய்ய அந்நபர் பற்றிய விபரம் தெரியாமையாலும், சிலர் தமது பாதுகாப்புக் கருதி முறைப்பாடு செய்ய முன்வராமையாலும் அந்நபரின் ஏமாற்று வேலை தொடருவதால், இது தொடர்பாக பொதுமக்கள் விழிப்பாக இருக்க வேண்டுமெனவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக கல்முனை நூலகத்தில் விசேட செயற்றிட்டம்

**(கல்முனை விசேட நிருபர்)**

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் விசேட செயற்றிட்டம் கல்முனை பொது நூலகத்தில் நேற்று (09) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நூலகர் ஏ.எல்.எம். முஸ்தாக் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி பிரதம அதிதியாகவும் உதவி ஆணையாளர் ஏ.எஸ். எம். அஸீம் கௌரவ அதிதியாகவும் பங்கேற்றிருந்ததுடன் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.சிவப்பிரகாசம் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி சிறப்புரையாற்றினார்.



இந்நிகழ்வில் கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலை, ஆர்.கே.எம். வித்தியாலயம், இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயம், நற்பிட்டிமுனை அல்அக்ஸா மகா வித்தியாலயம் ஆகிய 04 பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மாணவர்கள் கல்முனை பொது நூலகத்தின் அனைத்துப் பிரிவுகளையும் பார்வையிட்டு, அவற்றின் பயன்பாடுகளையும் முக்கியத்துவத்தையும் நேரடியாக கண்டறிந்து கொண்டதுடன் நூலகர் மற்றும் உதவி நூலகர்களினால் இவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களுடன் சமூக மற்றும் நூலக செயற்பாட்டாளர் எஸ்.எம். அபூபக்கர் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

# தௌபீக் எம்.பி யின் ஏற்பாட்டில் கிண்ணியா மத்திய கல்லூரிக்கு நீர்த்தாங்கி கையளிப்பு

**(றொட்டவெவ குறூப், முள்ளிப் பொத்தானை குறூப் நிருபர்கள்)**



தௌபீக் எம்.பியின் ஏற்பாட்டில் கிண்ணியா மத்திய கல்லூரியின் பாவனைக்காக நீர்த்தாங்கி கையளிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை கிண்ணியா மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம் மற்றும் அதிபர் விடுத்த வேண்டுக்கோளுக்கமைய திருகோமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ் தௌபீக்கின் முயற்சியால் ISRC நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட 5000 லீற்றர் நீர்த்தாங்கி பாடசாலை நிர்வாகத்திடம் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.



இந்நிகழ்வில் ISRC நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், பாடசாலை நிர்வாகம் மற்றும் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.



கல்ஹின்னை படகொள்ளாதெனிய பிரதேசத்தின் விவாகப் பதிவாளராக காலிதீன் முஹம்மது மபாஸ் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் படகொள்ளதெனிய ஜமாலியா முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வி முதல் இடைநிலைக் கல்வி வரை கற்றவர். கல்ஹின்னை வை. எம். எம். ஏ. கிளையின் தலைவராக இருந்து பல்வேறு சமூக இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(படம் மாவத்தகம தினகரன் நிருபர்)



'உலகம் வாசிப்பவர்களுக்கே சொந்தமானது' எனும் தொனிப்பொருளில் இறக்காமம் பிரதேச சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரதேசசபை எல்லைக்குட்பட்ட ஆரம்பப் பிரிவு பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வாசிப்புப் போட்டி அண்மையில் பிரதேச சபை நூலக மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் சாபீர்,பிரதம நூலகர் எம்.எம்.முநௌபர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(படம்: பள்ளிக்குடியிருப்பு தினகரன் நிருபர்)

අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය
**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்**
**OFFICE ON MISSING PERSONS**

## பதவி வெற்றிடங்கள்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஸ்தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஓர் அலுவலகமாகும்.

அங்கு பணிகளை நிறைவேற்றுவதற்காக ஆர்வமுள்ள மற்றும் அனுபவமுள்ள தொழில் நிபுணர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது எதிர்பார்க்கின்றது.

நிலவுகின்ற பதவி வெற்றிடங்கள் மற்றும் மேலதிக தகவல்களுக்காக.

https://www.moj.gov.lk என்ற இணைய பக்கத்தை அணுகவும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி**
**2023 நவம்பர் 24**

**தலைவர் / பிரதான நிறைவேற்று பணிப்பாளர்**
**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம், இல.40, புத்கமுவ வீதி, ராஜகிரிய**

**தொலைபேசி: 011-2861431**
**தொலைநகல்: 011-2861450**
**மின்னஞ்சல் - ompsrilanka@gmail.com**

# இந்திய ரோட்டரி கழக அங்கத்தவர்கள் திருமலை விஜயம்

**(தம்பலகாமம் குறூப் நிருபர்)**

இந்திய ரோட்டரி கழக அங்கத்தவர்கள் பின்தங்கிய பகுதியில் வசிக்கும் பாடசாலை மாணவர்களின் மத்தியில் கல்வி தரத்தை மேம்படுத்தும் முகமாக 'கல்வி சக்தி' என்னும் செயற்றிட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக நேற்றுமுன்தினம் திருகோணமலை ரோட்டரிக் கழக அங்கத்தவர்களை சந்தித்தனர்.

'கல்வி சக்தி' திட்டத்தின் மூலம் பின்தங்கிய கிராமப்பகுதியில் கல்வி கற்கும் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்காக இணையம் மூலமாக சிறந்த ஆசிரியர்கள் பாடத்திட்டத்தை கற்பிப்பார்கள். தற்சமயம் இந்தியாவில் 200 நிலையங்களும் இலங்கையில் 3 நிலையங்களும் செயற்படுகின்றன. இதுவரை இச்செயற்பாட்டின் மூலம் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளார்கள். இதன்மூலம் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் நிச்சயம் பயன்பெறுவார்கள்.

## பாலமுனை அல்–ஹிதாயா மகளிர் கல்லூரியில் மாணவர் சந்தை



**(திராய்க்கேணி தினகரன் நிருபர்)**

பாலமுனை அல்ஹிதாயா மகளிர் கல்லூரியில் 2023 ஆம் ஆண்டுக்கான மாணவர் சந்தை பாடசாலை முதல்வர் பி. முஹாஜிரீனின் வழிகாட்டலின் கீழ் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக EPSI இணைப்பாளர் ஏ.எல்.பாயிஸ் ADE பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், நலன்விரும்பிகள், SDEC உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

Sustainable Dvelopment Council of Sri Lanka

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB) – அலுவலக இடத்தை வாடகைக்கு பெறுதல்

**No. SDC/01/75/i – 2023**

1. ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பகுதியைச் சூழ இலங்கை நிலையான அபிவிருத்தி சபையின் (SDCSL) செயற்பாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பிரித்தல்களுடன் அல்லது இன்றி தோராயமாக 2,500ft$^2$ அளவான அலுவலக இடத்தை வாடகைக்கு பெறுவதற்காக SDCSL இனால் முன்மொழிவுகளுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.
2. கட்டடமானது வாகனங்கள் அணுகுவதற்கான வசதியுடன் பஸ் நிலையம் அல்லது பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் 200 மீற்றர் சுற்றளவுக்குள் அமைந்துள்ள, வலுவூட்டப்பட்ட கொங்கிறீட்டை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டிருத்தல் விரும்பப்படுகிறது. அலுவலகம் மற்றும் மாநாட்டு இடங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வெவ்வேறான ஆண் மற்றும் பெண் கழிப்பறை வசதிகள், நீர் விநியோகம், போதுமான ஒளி அமைப்பு, வளிச்சீராக்கி வசதிகள் மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகள் போன்ற அத்தியாவசிய வசதிகள் இருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுடைய தரப்புகள் SDCSL கணக்குப் பிரிவில் 2,000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கணக்கு பிரிவில் இருந்து இறுதி செய்யப்பட்ட விரிவான தேவைகளைச் சேர்த்து விலைமனு ஆவணங்களை பெறலாம். கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் சாதாரண வேலை நாட்களில் 2023.11.10 ஆம் திகதியில் இருந்து இந்த சேவை கிடைக்கப்பெறும்.
4. சமர்ப்பிக்கப்படும் விலைமனுவுடன் சேர்த்து 2024.02.28 ஆம் திகதி வரை செல்லுபடியான 10,000 ரூபா தொகைக்கு விலைமனு பிணை ஒன்று இருத்தல் வேண்டும்.
5. செல்லுபடியான விலைமனு பிணையுடன் சேர்த்து பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணம் ஒற்றை கடித உறையில் முத்திரையிடப்பட்டிருத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகைக் குறிப்பு இலக்கம் மற்றும் பெறுகைப் பெயரை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். பணிப்பாளர் நாயகம், நிலையான அபிவிருத்தி சபை, 5ஆவது மாடி, கோபுரம் - B, 1090, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகரிய என்ற முகவரி இடப்பட்டு 2023.11.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உள்ளூர் நேரப்படி 14:00 மணி தாமதிக்காது கீழுள்ள முகவரியில் குறிப்பிடப்பட்ட அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுவதல் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. விலைமனு ஆவணங்களை குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைப்பதற்கு கைகளால் அல்லது பதிவுத் தபால் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களை ஏற்கும் நேரம் நிறைவடைந்த பின் உடன் நேரடியாக பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது தமது பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதித்து சமர்ப்பிக்கப்படுபவை நிராகரிக்கப்படுவதோடு குறித்த விலைமனுதாரருக்கு திறக்கப்படாது திருப்பி அளிக்கப்படும்.
7. SDCSLஇற்கு தேவையான பிரித்தல்களுடன் அல்லது இன்றி தேவையான வசதிகளுடன் முழுமையாக அலுவலக இடம் 2023.12.12 ஆம் திகதியில் இருந்து கிடைக்கப்பெறுதல் வேண்டும். பிரித்தலுக்கு உட்பட்ட இடங்களை வழங்கும் விலைமனுதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
8. (a) எந்த ஒரு விலைமனுவையும் ஏற்பது அல்லது நிராகரிப்பது; மற்றும் (b) விலைமனு நடைமுறையை இரத்துச் செய்வது மற்றும் விலைமனுதாரர்களை நோக்கி எந்த கடப்பாடு இன்றி ஒப்பந்தம் வழங்களுக்கு முன்னர் எந்த ஒரு நேரத்திலும் அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் உரிமை இலங்கை நிலையான அபிவிருத்தி சபை (SDCSL) வசமானது.

**பணிப்பாளர் நாயகம்,**
**நிலையான அபிவிருத்தி சபை,**
**5ஆவது மாடி, கோபுரம் - B,**
**1090, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,**
**ராஜகரிய**
**தொலைபேசி: 0113607295/0112885164**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 106 கார்கள் விற்பனைக்கு

NP KD-3559 TATA INDIKA CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072768

SG KJ-5734 CHERY QQ CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072777

### 107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

CBB-9067 TOYOTA VITZ, 2018, CAR அதியுயர் விலைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071 4 5 4 2958. 072596

18-9159 TOYOTA COROLLA CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077 010 7270, 077 478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072717

65-6445 TOYOTA CARINA 1996, CAR அதியுயர் விலைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071 4 5 4 2958. 072593

### 109 மிற்சுபிஸி கார்கள் விற்பனைக்கு

64-3798 MITSUBISHI LANCER CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072743

### 111 ஹொண்டா கார்கள் விற்பனைக்கு

NP KK-7418 HONDA FIT CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072770

### 117 வேன்கள் விற்பனைக்கு

250-7432 ISUZU 1997, VAN அதியுயர் விலைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714 5 4 295 8. 072607

252 6 2 43 NISSAN CARAVAN VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077 010 7270, 077 478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072724

57-9683 MAZDA BROWNY VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072734

59-5858 NISSAN SERENA 1994, அதியுயர் விலைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071 4 5 4 2958. 072603

62-3864 TOYOTA HIACE VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077 010 7270, 077 478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072738

### 118 ஜீப்புகள்,பிக்கப்புகள் விற்பனைக்கு

PQ-0534 MAHINDRA BOLERO CAB 2011, அதியுயர் விலைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071 4 5 4 2958. 072588

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

CP LH-4019 HINO DUTRO F/B TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072745

EP LN-7812 TATA 2516 F/B TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072750

EP PY-3071 MAHINDRA MAXXIMO TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072757

NC LA-8865 TATA 207 S/CAB TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072761

NC PT-4882 DFSK UNIMO TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072763

NP DAA-3333 MAHINDRA BOLERO MAXI TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072767

NP LN-3558 LANKA ASHOK LEYLAND 1616 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072772

SG GO-8002 MAZDA BONGO TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072774

SP DAH-2844 MAHINDRA SUPRO TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072779

SP LF-4812 FAW MOTOR TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072780

SP LF-9249 ZIBO ABL TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072784

SP PT-6343 TATA ACE EX TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072788

WP ND-3874 NISSAN CIVILLIAN BUS அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072792

WP PQ-8814 MAHINDRA MAXXIMO TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072795

226-8567 MAZDA TITAN DUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072721

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

AAQ-8420 BAJAJ 2014, QI-9124 BAJAJ 2006, THREEWHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 07 1121081 0. 072574

JT-7050 BAJAJ 2004, THREEWHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 070599916 3. 072599

NC YD-2495 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072765

SP AAH-5915 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072778

UP BIQ-5933 TVS NTORQ BIKE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072789

WP JG-1180 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072790

### 124 டிராக்டர்கள், விவசாய உபகரணங்கள் விற்பனைக்கு

EP RH-8926 SONALIKA DI50RX TRACTOR 4 WHEELER 2021 BLUE கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் இல. 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 081033. 072725

49-9925 MASSEY FERGUSON 135 TRACTOR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 072729

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# 2024ஆம் வருடத்தில் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

## போதனா வைத்தியசாலை – பதுளை

பதுளை போதனா வைத்தியசாலைக்கு, 2024ஆம் வருடத்தில் பின்வரும் உருப்படிகளின் கீழ் உள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், சங்கங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து விண்ணப்பப்பங்கள் கோரப்படுவதாக இத்தால் அறியத்தரப்படுகிறது.

01. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **''2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்''** எனக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்படிவங்கள் 2023-12-07ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் இந்த அலுவலகத்திற்குக் கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் அதற்காகச் செலுத்தப்பட்ட பதிவுக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

02. வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான நிபந்தனைகளை **www.thbadulla.health.gov.lk** எனும் இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை 055-2222261/62 (நீடிப்பு: 1113) எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

| உருப்படி இல. | 1. பொருட்கள் வழங்குதல் |
|---|---|
| 01 | காகிதாதிகள் |
| 02 | கணனிகள் / புகைப்படப்பிரதி இயந்திர ரிபன் வகைகள் / டோனர் / கார்ட்ரிச் |
| 03 | காகிதாதிகள் அற்ற ஏனைய பாவனைக்கான களஞ்சியப் பொருட்கள் (சவர்க்காரம், பெட்டறி வகைகள், ஈர்க்கிள், தும்புத்தடி, கிருமிநாசினிகள் போன்றவை) |
| 04 | துணி வகைகளை வழங்குதல் |
| 05 | அலுவலக உபகரணங்கள் (புகைப்படப்பிரதி இயந்திரம், நகல் பிரதி இயந்திரம், கூட்டல் இயந்திரம் போன்றன) |
| 06 | தளபாட (மரம்/உருக்கு) வகைகள், (மேசைகள், கதிரைகள், கபட், கோவை கபட், பிளாஸ்டிக், நாரிழை போன்றன) |
| 07 | வைத்தியசாலை தளபாட வகைகள் (வைத்தியசாலை கட்டில்கள், சேலைன் ஸ்டேன்ட், வைத்தியசாலை நிலையான பொருட்கள் போன்றன) |
| 08 | மருந்து உறைகள் / எக்ஸ் கதிர் உறைகள் / CT/ MRI உறைகள் |
| 09 | மெத்தை வகைகள் ரெக்சின் இடப்பட்டவை / இடப்படாதவை (ரெக்சின், குஷன், இறப்பர் கலந்த தும்பு மெத்தைகள்) |
| 10 | கணனிகள் மற்றும் கணனி துணைப்பாகங்கள் |
| 11 | டயர்கள், டியூப்கள், ரிம்கள், அலோய் வீல்கள் |
| 12 | வாகன பெட்டறிகள் |
| 13 | வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 14 | கட்டிடப் பொருட்கள், நீர்க்குழாய் துணைப்பாகங்கள் மற்றும் மின்சார துணைப்பாகங்கள் |
| 15 | மின்னணு உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் / இலத்திரனியல் |
| 16 | ஔடத வகைகள் |
| 17 | வைத்தியசாலை மருத்துவ/சத்திரசிகிச்சை உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 18 | வைத்தியசாலை ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 19 | வைத்தியசாலை ஆய்வுகூட உபகரணங்களுக்குத் தேவையான பரிகாரப் பொருட்கள் (Reagents) |
| 20 | எழும்பியல் உபகரணங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்கள் |
| 21 | அரிந்த மரம், பலகை மற்றும் மரங்கள் வழங்குதல் |
| 22 | வெள்ளியிரும்பால் முடிவுறுத்தப்பட்ட பொருட்கள் வழங்குதல் |
| 23 | குப்பை உறைகள் (மஞ்சள், கறுப்பு மற்றும் பச்சை நிறங்களில்) |
| 24 | அனைத்து வகையான காலணிகள் |
| 25 | வளிச்சீராக்கி இயந்திரங்கள் |
| 26 | மின்விசிறி வகைகள் (கூரை மின்விசிறி, சுவர் மின்விசிறிகள்) |

| உருப்படி இல. | 2. சேவைகள் |
|---|---|
| 01 | கட்டிடப் பராமரிப்பு வேலைகள் (சிடாவில் (CIDA) பதிவு செய்திருத்தல் வேண்டும்.) |
| 02 | வாகன திருத்தவேலைகள் |
| 03 | கணனி மற்றும் கணனி அச்சுப்பொறி திருத்தவேலைகள் |
| 04 | மின்சார உபகரணங்கள் / இலத்திரனியல் உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| 05 | எரிவாயு அடுப்பு மற்றும் எரிவாயு உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 06 | அலுமினியம் உபகரணங்கள் மற்றும் பித்தளை உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| 07 | திரைச்சீலைகள், கதவு திரைச்சீலைகள், யன்னல் திரைச்சீலைகளை வழங்கி பொருத்துதல் |
| 08 | இறப்பர் முத்திரைகளைத் தயாரித்தல் |
| 09 | வளிச்சீராக்கி இயந்திரங்கள் / மத்தியமயமாக்கப்பட்ட வளிச்சீராக்கி முறைமைகளின் திருத்தவேலைகள் |
| 10 | புகைப்படப் பிரதி இயந்திரம், டுப்ளோ இயந்திரம் மற்றும் ரோணியோ இயந்திரங்களின் திருத்தவேலைகள் |
| 11 | நீர் மற்றும் சாக்கடை இறைக்கும் இயந்திரங்களின் திருத்தவேலைகள் |
| 12 | இரும்பு மற்றும் உருக்கியொட்டும் வேலைகள் |
| 13 | புத்தகங்கள், கடிதங்கள், ஸ்டிக்கர், பதாகைகள், பெயர்ப் பலகைகள் மற்றும் மாதிரிப் படிவங்களின் அச்சு வேலைகள் |
| 14 | உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளை தயாரித்து வழங்குதல். |
| 15 | குஷன் இடுதல் (கதிரைகள், சோபா போன்றன) |
| 16 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| 17 | வாகனங்களை சேர்விஸ் செய்தல் |
| 18 | எரிபொருள் வழங்குதல் (டீசல், பெற்றோல், பெற்றோலிய உற்பத்திகள்) |
| 19 | எரிவாயு / ஆர்கன் வழங்குதல் |
| 20 | உயிர் காப்பு உபகரணங்கள் மற்றும் ரீ சேர்ட் அச்சிடல் |
| 21 | CCTV / டிரோன் கமரா / இணையதள வசதிகள் / கணனி மென்பொருட்கள் |
| 22 | வளிச் சீராக்கி இயந்திரம் / மத்திய மயமாக்கப்பட்ட வளிச்சிராக்கி முறைமையின் பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 23 | வாடகை அடிப்படையில் வாகனங்கள் வழங்குதல் |
| 24 | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (ஊழியர் அபிப்பிராய நிகழ்ச்சித் திட்டங்கள் / வெளிவாரி செயற்றிறன் பயிற்சி நிகழ்சித் திட்டங்கள் மற்றும் ஏனையவை) |
| 25 | அப்புறப்படுத்தப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல் |
| 26 | உரிமை கோரப்படாத சடலங்கள் மற்றும் உடற் பாகங்களை புதைத்தல். |
| 27 | அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றுதல் |
| 28 | வாகனங்களுக்கான புகை பரீட்சித்தல் அறிக்கைகளை வழங்குதல் |
| 29 | ஆய்வுகூட சேவைகள் |
| 30 | வீல் எலைன்மன்ட் |
| 31 | மின் பிறப்பாக்கி இயந்திரங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் / மின் பிறப்பாக்கி இயந்திரங்களை பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 32 | உற்சவ / பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உணவு வழங்குதல் |
| 33 | வாகனங்களுக்கு வளிச்சீராக்கம் செய்தல் |
| 34 | குளிர்சாதனம் / சலவை இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 35 | வாகனங்களுக்கு குஷனிடும் வேலைகள் |
| 36 | மண், கருங்கல், சிறு கற்கள், மணல் வழங்குதல் |
| 37 | சீமெந்து மற்றும் கொங்கிறீட் சார்ந்த உற்பத்திகள் |
| 38 | மலர்ச் சாடிகள், மலர்க் கன்று வகைகள், தோட்ட அலங்காரப் பொருட்கள் |
| 39 | விறகு வழங்குதல் |
| 40 | CCTV கமரா முறைமைகளின் திருத்தவேலைகள் |
| 41 | வாகன மின்னியலாளர் |
| 42 | முச்சக்கர வண்டி திருத்தவேலைகள் |

**பதிவு செய்து கொள்வதற்கான பொது நிபந்தனைகள்**

01 பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிக்கும் வழங்குநர்கள் உங்களது விபரங்களுடன் பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிக்கும் ஒவ்வொரு உருப்படிக்காகவும் பின்வரும் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் A4 அளவிலான தாளில் தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவத்தில் பதிவு செய்து கொள்ளும் உருப்படி மற்றும் இலக்கத்தைச் சரியாகக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

02. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஒரு உருப்படிக்கு 1000.00 ரூபா வீத பதிவுக் கட்டணத்துடன், தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, பதுளை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். பதிவுக் கட்டணத்தை வங்கியில் வைப்புச் செய்வதானால் மக்கள் வங்கியில் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை எனும் பெயரில் 7040186 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைத்து அதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

03. பதிவு செய்து கொள்ளும் வழங்கல் / சேவை நிறுவனங்கள் வியாபாரப் பதிவுச் சான்றிதழ் மற்றும் வெட் வரிக்கான பதிவு இருக்குமாயின் அச்சான்றிதழின் பிரதியையும்,

I. நீங்கள் ஒரு உற்பத்தியாளர் அல்லது வெளிநாட்டு உற்பத்தி நிறுவனத்தின் அதிகாரம் வாய்ந்த ஏக முகவரானால் உற்பத்தி நிறுவனம் அல்லது ஏக முகவர் நிறுவனம் என்பதை உறுதி செய்யும் சான்றிதழின் புகைப்படப் பிரதி,

II. உள்ளடங்கும் அதிகாரப் பிரதேசங்கள் (இலங்கை முழுவதற்குமா அல்லது விசேட வலயத்திற்காகவா என்பது பற்றிய சான்றிதழின் புகைப்படப் பிரதி)

III. கட்டிடப் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்கள் CIDA பதிவுச் சான்றிதழை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. சகல விண்ணப்பதாரர்களினதும் தகைமைகள் பரீட்சித்துப் பார்த்த பின்பே பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

05. பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் குறிப்பிடப்பட்ட முகவரியில் நிலையாக வியாபாரத்தை நடாத்திக் கொண்டு செல்லுதல் வேண்டும் என்பதுடன் சகல தொடர்பாடல் நடவடிக்கைகளும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான முகவரியுடன் மட்டுமே மேற்கொள்ளப்படும். முகவரியில் மாற்றங்கள் ஏற்பட்டால் உடனடியாக அந்த முகவரியை அறியத்தருதல் வேண்டும். அவ்வாறு செய்யாத வழங்குநர்களின் பதிவை இரத்துச் செய்யும் உரிமையை பதுளை போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

06. சகல வழங்குநர்களிடமும் அல்லது தெரிவு செய்யப்பட்ட 05 வழங்குநர்களிடம் மட்டும் ஒரு தடவையில் விலைகளைக் கோருவதற்கான அதிகாரம் பணிப்பாளருக்கு உண்டு. போதுமான வழங்குநர்கள் இல்லாத வேளையில் அவசியத்திற்கேற்ப வெளி வழங்குநர்களிடமிருந்து விலைகளைக் கோரி கொள்வனவு செய்வதற்கு அல்லது சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான அதிகாரம் பணிப்பாளருக்கு உண்டு.

07. அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு பொருள் மற்றும் சேவை வழங்குநர்கள் பதிவு செய்து கொள்ளப்பட மாட்டார்கள்.

08. விலைகளைச் சமர்ப்பிக்கும் போது இயைபுடைய வழங்கலை பதுளை மாகாண பொது வைத்தியசாலைக்கு கொண்டு வந்து கொடுப்பதற்காக சகல விலைகளையும் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அந்த விலைகள் எதிர்வரும் 03 மாதங்களுக்காவது செல்லுபடியாதல் வேண்டும். கட்டளையின் பிரகாரம் வழங்கல்களை நிர்ணயிக்கப்பட்ட தினத்தில் வைத்தியசாலைக்கு இயைபுடைய பொருள், சேவையை வழங்காதது அந்தக் கட்டளை இரத்தாவதற்கு காரணமாகலாம் என்பதுடன் அந்த வழங்கலை நிராகரிக்கும் வழங்குநர்களின் பதிவு இரத்துச் செய்யப்படும். அதேபோல் ஏதாவது உருப்படியின் மாதிரியை (Sample) பரீட்சித்துப் பார்ப்பதற்குத் தீர்மானித்தால், அந்த மாதிரியை நிர்ணயிக்கப்பட்ட தினத்தில் வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து சமர்ப்பித்தல் வேண்டும்.

09. விலைகளைக் கோருகையில் அடுத்தடுத்து மூன்று (03) முறை விலைகளைச் சமர்ப்பிக்காத நிறுவனங்களிடமிருந்து மீண்டும் விலைகள் கோரப்படமாட்டாது.

10. கட்டிடப் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்யும் போது 200,000.00 ரூபாவுக்கு வர்த்தக வங்கியொன்றில் / காப்புறுதி நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட செயலாற்றுகை பிணை முறியொன்றை அல்லது ரொக்கப் பணமாக வைத்தியசாலையில் வைப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் கட்டிடப் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்கள் உடன்படிக்கை ஒன்றுக்கு வருதல் வேண்டும்.

11. 2023ஆம் வருடத்தில் திருப்திகரமற்ற வழங்கல்களை மேற்கொண்ட வழங்குநர்கள் பதிவு செய்துகொள்ளப்பட மாட்டார்கள்.

12. வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளும் இறுதித் தீர்மானத்தை பதுளை போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை.**
**பதுளை.**

விண்ணப்பப் படிவத்தின் மாதிரி பின்வருமாறாகும்.

### 2024ஆம் வருடத்திற்கான பொருள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்
### போதனா வைத்தியசாலை, பதுளை

| விண்ணப்ப இல. | |
|---|---|

(அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்)

01. பதிவு செய்யும் பொருள் / சேவை வழங்கல் : ..........................................
(சத்திரசிகிச்சை துணைப்பாகங்கள் மற்றும் ஆய்வுகூட பரிகாரப் பொருட்களுக்கு பதிவு செய்யும் நிறுவனங்கள் வழங்கும் துணைப்பாகங்கள் தொடர்பான விபரங்களை இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்)
உருப்படி இலக்கம் :

02. பதிவு செய்யும் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி : ..........................................

03. I. தொலைபேசி இலக்கம் : ..........................................
II. தொலைநகல் இலக்கம் : ..........................................
III. மின்னஞ்சல் முகவரி : ..........................................

04. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் இலக்கம் : ..........................................
(சொந்த நிறுவனம்/ பொது நிறுவனம் / பங்குடைமை வியாபாரம் அல்லது வேறு)

05. கடன் வழங்க முடியுமான கால எல்லை : ..........................................

06. வெட் வரி இலக்கம் :

07. CIDA பதிவிலக்கம் மற்றும் தரம் : ..........................................
(கட்டிட பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டும்)

08. அரச நிறுவனங்களுக்கான வழங்கல் தொடர்பான விபரங்கள்:

09. பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் இலக்கம் : ..........................................

10. நீங்கள் ஏதாவது உற்பத்தியாளர் / வெளிநாட்டு உற்பத்தி நிறுவனத்தின் அதிகாரம் வாய்ந்த ஏக முகவர் நிறுவனமானால்,
I. உற்பத்தி நிறுவனம் அல்லது முகவர் நிறுவனம் என்பது பற்றி:..........................................
II. உள்ளடங்கும் அதிகாரப் பிரதேசம் : ..........................................

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை எனவும், அபகீர்த்தியாளர் பட்டியலில் எமது நிறுவனத்தின் பெயர் உள்ளடங்கவில்லை எனவும் இத்தால் சான்றுப்படுத்துவதோடு, வழங்கும் பொருள் கட்டளைகளை உரிய கால எல்லையினுள் வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து ஒப்படைப்பதாகவும், வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கு இயைபான ஏனைய நிபந்தனைகளுக்கு இணங்குவதாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல் 2024ஆம் வருடத்திற்கான பதிவு செய்யப்பட்ட வழங்குநராக எனது நிறுவனத்தை பதிவு செய்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

..........................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி: 2023.......................................... பெயர்:..........................................

# விலைமனுக்களுக்கான அறிவித்தல்

**வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்**

## BID No.: 078/T/2022

## SUPPLY OF CCTV SYSTEM FOR BIOMETRIC ATTENDANCE SYSTEM AT BIA, MRIA & CIAR

**Supply of CCTV System for Biometric Attendance System at BIA, MRIA & CIAR** என்பதற்காக வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் ஆகியவற்றின் தலைவரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

விலைமனுதாரரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வமான கோரிக்கைக் கடிதத்துடன் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவண கட்டணமாக மூவாயிரம் ரூபாவை (3,000 ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக் கொண்ட ஆவணங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2023.11.13 ஆம் திகதியிலிருந்து 2023.12.04 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படலாம். மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் விலைமனுக்கள் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் அதிகமாக விரும்பின், மேலேயுள்ள முகவரியில் நேரடியாகவே முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ஒப்படைக்கலாம்.

விலைமனுக்கள் 2023 டிசம்பர் 05 ஆம் திகதி செவ்வாய்கிழமையன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன்பின்னர் உடனடியாகவே கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். விமைனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

வரையறுக்கப்பட்ட (தனியார்)(ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் கோரும்போது பெறக்கூடிய வங்கி உத்தரவாதமொன்றின் பாங்கில் ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் இலங்கை ரூபாவிற்கு (180,000 இ. ரூபா) நிகரான விலைமனுப்பிணையொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

எந்தவொரு மேலதிக தகவலையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(ஸ்ரீலங்கா) விமானநிலைய சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து 011-2264103/011-2264106 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாகவும் head.scm@airport.lk என்ற மின்னஞ்சலூடாகவும் அல்லது www.airport.lk என்ற எமது இணையதளத்தை பார்வையிடுவதன் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க.**

**கடற்றொழில் அமைச்சு**
**இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்**

# கொள்முதல் அறிவித்தல்

## தலைமை அலுவகத்தில் இரண்டாம் மாடியில் தரை ஓடுகள் மற்றும் பேன்ரி அலுமாரிகள் நிறுவுதல்

## ஒப்பந்த இலக்கம் : CFHC/PD/T/TILES-PANTY/HO /2023/60

இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவகத்தில் இரண்டாம் மாடியில் தரை ஓடுகள் மற்றும் பேன்ரி அலுமாரிகள் நிறுவுவதற்கு தகமையினையுடைய ஒப்பந்ததாரர்களை தேர்வுசெய்வதற்காக பத்திரிகை விளம்பரம் மற்றும் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஊடாக விளம்பரத்தினை வெளியிடுவதன் மூலமாக விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

விபரங்கள் பின்வருமாறு :

| இல. | ஒப்பந்த இலக்கம் | மதிப்பீட்டு செலவு மற்றும் ஒப்பந்த காலம் | தேவையான தகுதிகள் | மீள் செலுத்தப்படாத மனுக் கட்டணம் (ரூ) | மனுப்பிணைக் கட்டணம் | மனுக்கள் செல்லபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | CFHC/PD/T/ TILES-PANTY/ HO /2023/60 | ரூ.5,729,525.00 மில்லியன் (வட்வரி மற்றும் தற்செயலான செலவுகள் உட்பட) ஒப்பந்த காலம் **60 காலண்டர் நாட்களாகும்** | (1) CIDA பதிவு (C8, C7 மற்றும் C6) விசேடமாக கட்டிட கட்டுமானம் தொடர்பாக) 02) 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் 08 ஆவது பிரிவின்படி பொது ஒப்பந்தப் பதிவேட்டினால் வழங்கப்பட்ட சான்றிதழ் **(05 மில்லியன் ரூபாய்க்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்காக)** | 3,500/- | **ரூ.57,500.00** மதிப்புடைய தொகையினை இலங்கையில் இயங்குகின்ற இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக் கப்பட்ட வங்கியிலிருந்து பெறவேண்டும் மேலும் தலைவர், இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல-15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15 எனும் பெயருக்கு வழங்கப்பட வேண்டும் வழங்கப்பட்ட படிவத்தின் படி மனுப்பிணை வழங்கப்படும் மனுப்பிணை செல்லுபடியாகும் காலம் **2024.03.14** வரையாகும். பண வைப்பு ஏற்றுக்கொள்ளப்படும். | மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி திகதியிலிருந்து **2024.02.15** ஆம் திகதி வரை செல்லுபடியாகும். |

இதற்காக ஆர்வமுள்ள மற்றும் தகுதியான வழங்குனர்கள்/பிரதிநிதிகள் அல்லது நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்காக **2023.11.10** ஆம் திகதி முதல் **2023.11.30** ஆம் திகதி வரை வாரத்தில் வேலை நாட்களில் **மு.ப.9.00** மணி முதல் **பி.ப.3.00** மணி வரை தலைமை அலுவலகத்தில் முகாமையாளரிடம் எழுத்து மூல விண்ணபத்தை சமர்ப்பிதன் மூலம் விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

தலைமை அலுவலகத்தில் கொள்முதல் பிரிவில் குறித்த ஆவணங்களை பரிசீலனை செய்யலாம்.

**இரண்டு பிரதிகளுடன்** முத்திரையிடப்பட்ட மனுக்களை **2023.12.01** ஆம் திகதி **பி.ப.2.00** மணிக்கு முன்னர் தலைமை அலுவலகத்தின் கொள்முதல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும்.

**2023.12.01 அம் திகதி பி.ப.2.00** மணிக்கு கொள்முதல் பிரிவில் மனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் மனுக்கள் திறக்கப்படும்.

எந்தவொரு விண்ணபத்தையும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை கொள்முதல் குழு கொண்டுள்ளது.

**இதற்கான முன்மனுக்கூட்டம் 2023.11.20 ஆம் திகதி மு.ப.10.30** மணிக்கு தலைமை அலுவலகத்தில் இடம்பெறும்.

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக தகவல்களை 011-2529391/011-2525063 இலக்கங்களினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,**
**இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,**
**கொழும்பு 15.**

## பெயர் மாற்றம் - அறிவிப்பு

தன்னார்வ சமூக சேவைகள் அமைப்புகளின் அடிப்படையில், (பதிவு மற்றும் மேற்பார்வை) சட்டம் இல. 1980 இல் 31 திருத்தப்பட்டது. சட்டம் இல.1988 ஆம் ஆண்டின் 8 இன் பிரகாரம் அரச சார்பற்ற அமைப்பின் பெயர் பின்வருவன மாறுவது தொடர்பான அறிவிப்பை வழங்குகிறது.

**அரச சார்பற்ற நிறுவனத்தின் முன்னைய பெயர்:**
தார் கலி∴பா லில் அய்தம் (உத்தரவாதம்) லிமிடெட்.

**நிறுவனத்தின் புதிய பெயர்:**
சிலோன் அனாதைகள் பராமரிப்பு அறக்கட்டளை

பதிவு இல. L-182504

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:**
இல. 1, துருக்கி சிட்டி, தாராபுரம், மன்னார்

## புனித புஹாரி - முஸ்லிம் மஜ்லிஸ் ஆரம்பம்

### கெச்சிமலை தர்ஹா – பேருவளை

**மேற்படி தர்ஹாவில் புனித மஜ்லிஸ் 13.11.2023 திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் ஆரம்பமாகும்.**

### தமாம் பெரிய கந்தூரி மஜ்லிஸ்

**16.12.2023 சனிக்கிழமை**
**17.12.2023 ஞாயிற்றுக்கிழமை**
**ஆகிய இரு தினங்களில் நடைபெறும்.**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**- மௌலவி அல்ஹாஜ் அஷ்ஷெய்க் ஸக்கி அஹமட் பின் அஷ்ஷெய்க் காலிப் அலவி அலவியதுல் காதிரி தலைமையிலான நிர்வாகம்**

## அறிவித்தல்

### 2003ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் தொடர்பான அதிகார சபை சட்டத்தை திருத்துவதற்கு பொதுமக்களின் முன்மொழிவுகள்/கருத்துக்களை அறிதல்

### 2003ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டம்

I. பாவனையாளர் அலுவல்கள் தொடர்பான அதிகாரசபையை ஸ்தாபித்தல்
II. பயனுள்ள போட்டிரீதியிலான மேம்படுத்துதல்
III. பாவனையாளர்களைப் பாதுகாத்தல்
IV. உள்நாட்டு விற்பனைகளை முறைப்படுத்துதல்
V. பாவனையாளர் அலுவல்கள் தொடர்பான சபையொன்றை ஸ்தாபித்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு சுமார் 20 வருடங்களுக்கு முன் உருவாக்கப்பட்ட சட்டமாகும்.

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சினால் மேற்குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்குப் புறம்பாக தற்போதைய வியாபார செயற்பாடுகளுக்குப் பொருத்தமான வகையில் பாவனையாளர்களின் உரிமைகளை பாதுகாக்கும் முகமாக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்பொருட்டு பொதுமக்களின் முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்கள் இருந்தால், பாவனையாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பொருத்தமான விதிமுறைகளை மேற்கூறிய சட்டத்தில் உள்ளடக்குவதற்கு இயலுமான வகையில் 2023-12-31ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரி/ மின்னஞ்சல்/ தொலைநகல் எனும் எந்தவொரு ஊடகத்தின் ஊடாக எழுத்துமூலம் வழங்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**முகவரி** - **வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு, இல. 492, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு-03.**
**தொலைநகல்** - **011 2423979**
**மின்னஞ்சல் முகவரி** - **info@trademin.gov.lk**

**செயலாளர்,**
**வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு.**

**இல. 492, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு-03.**
**07.11.2023**

## மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்

### வீதிப் பயண போக்குவரத்து அதிகார சபை (மேல் மாகாணம்)

## கடை அறைகளை குத்தகைக்கு வழங்குதல்

மேல் மாகாண வீதிப் பயண போக்குவரத்து அதிகார சபைக்குரித்தான பின்வரும் பிரதான பஸ் நிலையங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கடை அறைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கடை அறை | இடம் | கடை அறை இல. | சதுர அடி அளவு | மாதாந்த வாடகை* | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | பொரளை | முதலாம் மாடி | 07 | 120 | 11,500.00 | 138,000.00 |
| 2 | மாலபே | தரை மாடி | 13 | 950 | 75,000.00 | 450,000.00 |
| 3 | தெல்கொட | தரை மாடி | 02 | 60 | 3,100.00 | 37,200.00 |
| | | முதலாம் மாடி | 02 | 121 | 3,675.00 | 44,100.00 |
| | | முதலாம் மாடி | 03 | 132 | 3,675.00 | 44,100.00 |
| | | முதலாம் மாடி | 04 | 132 | 3,675.00 | 44,100.00 |
| 4 | பாணந்துறை | முதலாம் மாடி | 19 | 100 | 7,000.00 | 84,000.00 |
| 5 | அங்கொட | - | 01 | 240 | 32,000.00 | 384,000.00 |
| 6 | ருக்மல்கொட | - | 01 | 40 | 8,000.00 | 96,000.00 |
| 7 | ரத்தொலுகம | - | 01 | 72 | 3,750.00 | 45,000.00 |
| | | - | 03 | 72 | 3,750.00 | 45,000.00 |
| | | - | 04 | 72 | 3,750.00 | 45,000.00 |
| | | - | 06 | 72 | 3,750.00 | 45,000.00 |
| | | - | 07 | 72 | 3,750.00 | 45,000.00 |

❖ மாலபே 13ஆம் இலக்க கடை அறை இரண்டு வருடங்களின் இரண்டிற்கும் ஏனைய சகல கடை அறைகளும் மூன்று வருடங்களில் மூன்றிற்கும் அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் மதிப்பீட்டுப் பெறுமதியின் பிரகாரம் மாதாந்த வாடகையில் திருத்தம் செய்யப்படும். குத்தகை உடன்படிக்கை காலம் பத்து (10) வருடங்களாகும்.

❖ கேள்விப் படிவங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் - 2023-12-01 பி.ப. 01.00 வரை
❖ கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி மற்றும் நேரம் - 2023-12-01 பி.ப. 02.00 வரை

**கேள்விகள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் 2023-12-01 பி.ப. 2.00**

கேள்விக்கு இயைபான நிபந்தனை உள்ளடக்கிய கேள்விப் படிவங்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்குத் தேவையானவர்கள் அதற்கான எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து 2023 நவம்பர் 30ஆம் திகதி வரையில் அலுவலக நேரத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

மீளளிக்கப்படாத 2,000.00 ரூபாவை கேள்விப் படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் 5,000.00 ரூபா கேள்வி வைப்பை ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் கேள்விப் படிவங்களை பின்வரும் முகவரியில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து பிரதான அலுவலகத்தின் தரைத் தளத்தின் நிர்வாகப் பிரிவில் பிரதிப் பொது முகாமையாளரின் (நிர்வாகம்) உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். மேலும் கேள்வியைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "..............இலக்க கடை அறையை குத்தகைக்கு வழங்குதல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**சிறு பெறுகைக் குழு,**
**வீதிப் பயண போக்குவரத்து அதிகார சபை (மே.மா),**
**இல. 89, ரத்மல்யாய, கடுவளை வீதி, பத்தரமுல்ல.**
2023-11-10

## இலங்கை வங்கி

### ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

1. கடன் தொடர்பு இல.82152256 மற்றும் 82152492

மாத்தளை, கைகாவெல, ஈரியகொல்ல இல.2/3 ஐச் சேர்ந்த திரு. ஹேரத் முதியன்சேலாகே நிலந்த பிரதீப் பண்டார ஹேரத் மற்றும் எதிரிசிங்ஹ கொமசாருகே பவித்ரா மனோரி எதிரிசிங்ஹ ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2023 செப்டெம்பர் 27ஆம் திகதி புதன் கிழமை 2352 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023 ஒக்டோபர் 02 ஆம் திகதி திங்கட்கிழமை தினகரன், தினமின, மற்றும் டெய்லிநியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த M/s T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன அவர்கள் 2023 நவம்பர் 27 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை.

1. மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை கிழக்கு பல்லேசிய பத்துவ, இரத்தோட்டை பிரதேச செயலகம், இரத்தோட்டை பிரதேச சபை எல்லைகளில் இகிரியகொல்ல கிராம சேவகர் பிரிவு இல. ஈ 371-டீ இல் பல்லே வேறகமயில் அமைந்த வாரியபொல எஸ்டேற்றின் விகாரகம வத்த பிரிவு என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி.ஆர். என். ஷியாமலி ரத்நாயக்க தயாரித்த 2014.06.25 திகதியிட்ட வரைபடம் இல.1435 இல் காணித்துண்டு இல. 01 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, வடக்கில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஜே.எம். ஜயசேகர தயாரித்த வரைபடம் இல.12062இல் என். பீ.பி. ஹேரத் உரிமை கோரும் காணித்துண்டு 1 உம், கிழக்கில் பாதையும் தெற்கில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஜே.எம். ஜயசேகர தயாரித்த வரைபடம் இல.10788 இல் யூ.பீ.பி. ஹேரத் உரிமை கோரும் காணித் துண்டு 1 உம் மேற்கில் அரசாங்கக் காணியும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் முப்பத்தைந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.1,பே.35)அல்லது ஹெக்டெயார் 0.1897 விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், வீடு பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி மாத்தளை காணிப்பதிவகத்தில் ஜீ 36/126 இல் பதிவு செய்யப்பட்டது.

"மேற்குறிப்பிட்ட ஆதனம் சம்பந்தமான உரித்துரிமை உறுதிகளையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் ஏல விலை கூறுவோர் சுதந்திரமாக பரீட்சிப்பதற்கு நாஉல கிளையில் வைக்கப்பட்டுள்ளது."

தொ.பே.இல. 066-2246280

**திருமதி. ஏ.ஜீ.ஏ.ஐ.ரத்னமாலி**
**கிளை முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**நாஉல.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்
classified@lakehouse.lk

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
077 7 278 948 011 2 129 347
011 2 429 383 011 2 429 342/343

தினகரன் வாரமஞ்சரி

திருமண சேவைகள்

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா

* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200

இலங்கை வங்கி கணக்கிலக்கம் 000000377 (லேக்ஹவுஸ் கிளை)

BOC ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

## பெறுகை அறிவித்தல்

### நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு
### தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

DNCWS

## கேள்வி மனுக்கோரல்

திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவரினால் பின்வரும் பணிகளுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| பெயர் மற்றும் ஒப்பந்தத்தின் பெயர் | தகமைகள் | மீளளிக் கப்படாத கட்டணம் LKR | மனு செல்லுபடியாகும் (நாட்கள்) | மனுப் பாதுகாப்பு LKR | மனுப் பாதுகாப்பு செல்லுபடியாகும் (நாட்கள்) | மனுக்கள் மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| Supply & Delivery of PVC Pipes, Fittings & Specials to Kurunegala, Puttalam & Polonnaruwa District CBOs **Contract No: DNCWS/PRO/2023/PVC/04** | PVC Pipes & Fittings Manufacturers / Suppliers | 30,000 | 91 | 1,850,000 | 2024.03.30 | 2023.12.01 10.00 am |
| Supply & Delivery of GI & DI Pipes, Fittings & Specials to Kegalla,Kurunegala, & Polonnaruwa District CBOs **Contract No: DNCWS/PRO/2023/GI/04** | GI Pipes & Fittings Suppliers | 3,500 | 77 | 110,000 | 2024.03.11 | 2023.11.24 10.00 am |
| Supply, Delivery, Install & Commission of Water Pumps & Accessories to Kurunegala, Puttalam Kalutara, Polonnaruwa,Galle & Colombo District CBOs **Contract No: DNCWS/ PRO/2023/PUMP/04** | Pumps & Accessories Suppliers | 8,000 | 77 | 240,000 | 2024.03.16 | 2023.12.01 10.00 am |
| Supply & Delivery of Water Meters to Puttalam CBOs **Contract No: DNCWS/PRO/2023/WM/04** | Water Meter Suppliers | 10,000 | 91 | 270,000 | 2024.03.30 | 2023.12.01 10.00 am |
| Civil Construction at Colombo District, Seethawaka, Aluthambalama , Jayadiya CBO **Contract No: DNCWS/PRO/2023/CV/CO/02** | ICTAD Grade C8/C7/C6 | 3,500 | 77 | 58,500 | 2024.03.11 | 2023.11.24 10.00 am |
| Civil Construction at Galle District, Niyagama, Porawagama South , Haddegodawatta CBO **Contract No: DNCWS/PRO/2023/CV/GA/03** | ICTAD Grade C8/C7/C6 | 5,000 | 77 | 125,000 | 2024.03.11 | 2023.11.24 10.00 am |
| Civil Construction at Galle District, Akmeemana 175D Hiyare East , Kurudukolaniya CBO **Contract No: DNCWS/PRO/2023/CV/GA/04** | ICTAD Grade C7/C6/C5 | 3,500 | 77 | 55,000 | 2024.03.11 | 2023.11.24 10.00 am |
| Civil Construction at Kandy District ,Madadumbara, Maneluwa,Randiya, Sarani CBO **Contract No: DNCWS/PRO/2023/CV/KA/04** | ICTAD Grade C9/C8 | 4,000 | 77 | 15,000 | 2024.03.11 | 2023.11.24 10.00 am |
| பொதுப் பணிகள் மற்றும் குழாய் பதிக்கும் பணிகளுக்கு, ICTAD தரநிலைகள் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் எனக் கருதப்படுகின்றன. | | | | | | |

**மேல் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கான பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

01. கோள்விப்பத்திரங்களை கடிதத்தலைப்பில் எழுதப்பட்ட கோரிக்கை மற்றும் மீளச்செலுத்தப்படாத கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டினை தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் 2வது மாடியில் உள்ள கொள்முதல் பிரிவில் சமர்ப்பித்து மனு ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம் (மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள கொள்முதல் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்)

02. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்வதுடன் சாதாரண வேலை நாட்களில் (9.00 மணிமுதல் 3.00 மணிவரை) ஆவணங்களை வழங்கும் இடத்தில் மனு ஆவணங்களை இலவசமாகப் பரிசீலனை செய்யலாம்.

03. கேள்வி மனுக்களை திணைக்களத்தின் 2வது மாடியில் (கொள்முதல் பிரிவில்) வைக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் பெட்டியினுள் இடல் அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுதபால் மூலமாக அல்லது விரைதூதர் மூலமாக அனுப்பிவைக்க வேண்டும்.

04. மேலதிக தகவலுக்கு, பணிப்பாளரை (கொள்முதல்) தொடர்பு கொள்ளவும் - தொலைபேசி **011 2 774927.**

05. கேள்வி மனுக்கள் கேள்வி மனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அதே முகவரியில் 2023.11.24 ஆம் திகதி மு.ப.10.15 மணி மற்றும் 2023.12.01 ஆம் திகதி மு.ப.10.15 மணிக்கு மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கலந்துகொள்ளத் தேர்ந்தெடுக்கும் ஏலதாரரின் பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான ஏலங்கள் திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும்.

06. மனுப் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இல-1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொடைக்கு முகவரியிடப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகை குழு,
**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,**
இல-1114, பன்னிபிட்டிய வீதி,
தலவத்துகொட.

SELACINE MEDIA SOLUTIONS

# உலகக் கிண்ணத்தில் ஆடிய கடைசி போட்டியிலும் இலங்கைக்கு தோல்வி

## சம்பியன்ஸ் கிண்ண வாய்ப்பையும் இழந்தது




நியூசிலாந்துக்கு எதிரான உலகக் கிண்ணத்தின் தனது கடைசி போட்டியிலும் இலங்கை அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது.

இதன்மூலம் உலகக் கிண்ணப் புள்ளிப் பட்டியலில் 9ஆவது இடத்திற்கு தள்ளப்பட்ட இலங்கை அணி 2025 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணத்திற்கான தகுதியையும் பெரும்பாலும் இழந்துள்ளது. சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கு தகுதி பெற உலகக் கிண்ணத்தில் முதல் 8 இடங்களுக்குள் முன்னேற வேண்டி இருந்தது.

அதேபோன்று இந்தப் போட்டியில் இலகு வெற்றியீட்டியதன் மூலம் நியூசிலாந்து அணி 10 புள்ளிகளை பெற்று புள்ளிப் பட்டியலில் நான்காவது இடத்தை தக்கவைத்துக் கொண்டதோடு நிகர ஓட்ட விகிதத்தையும் உயர்த்தி அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பையும் அதிகரித்துள்ளது.

இதனால் தலா 8 புள்ளிகளுடன் தொடர்ந்தும் அரையிறுதி வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த இரு அணிகளும் தனது கடைசி போட்டியில் வெற்றியீட்டினாலும் நியூசிலாந்தை பின்தள்ள அதிக இடைவெளியுடன் மிகப்பெரிய வெற்றி ஒன்றை பெற வேண்டி ஏற்பட்டுள்ளது.

உலகக் கிண்ண புள்ளிப் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் இருக்கும் இந்தியா, தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் ஏற்கனவே அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

பெங்களூர், எம். சின்னசுவாமி அரங்கில் நேற்று (09) நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுக்க 46.6 ஓவர்களில் 171 ஓட்டங்களுக்கு சுருண்டது.

ஆரம்ப வீரர் குசல் பெரேரா 28 பந்துகளில் 51 ஓட்டங்களை விளாசிய போதும் மற்ற துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்கத் தவறினர். பின்வரிசையில் வந்த மஹீஷ் தீக்ஷன நின்றுபிடித்து ஆடியதால் இலங்கையால் கௌரவமான ஓட்டம் ஒன்றை பெற முடிந்தது.

இந்நிலையில் பதிலெடுத்தாட களமிறங்கிய நியூசிலாந்து அணி நெருக்கடி இன்றி ஓட்டங்களை குவித்தது. அந்த அணி 23.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 172 ஓட்டங்களை எட்டியது.

இலங்கை அணி இம்முறை உலகக் கிண்ணத்தில் ஆடிய ஒன்பது போட்டிகளில் நெதர்லாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான போட்டிகளில் மாத்திரமே வெற்றியீட்டியதோடு மற்ற 7 போட்டிகளிலும் தோல்வியை சந்தித்தது.

### மத்தியூஸின் ‘டைம் அவுட்’ விவகாரம்:

# பங்களாதேஷ் நீதிமன்றில் வக்காருக்கு எதிராக தீர்ப்பு



அஞ்சலோ மத்தியூஸுக்கு டைம் அவுட் முறையில் ஆட்டமிழப்பு வழங்கப்பட்ட விவகாரத்தில் பங்களாதேஷ் அணித் தலைவர் ஷகீப் அல் ஹசன் மீது அவதூறு கூறிய குற்றச்சாட்டில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வக்கார் யூனிஸுக்கு எதிராக பங்களாதேஷ் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

டெல்லியில் இலங்கைக்கு எதிரான அந்தப் போட்டியில் மத்தியூஸுக்கு டைம் அவுட் ஆட்டமிழப்பு வழங்கப்பட்டபோது ரசல் ஆர்னலுடன் தொலைக்காட்சி வர்ணனையாளராக வக்கார் யூனிஸ் செயற்பட்டிருந்தார்.

அப்போது இதனை விளையாட்டுத் தன்மையற்ற செயல் என விமர்சித்த வக்கார் யூனிஸ், ஷகீபின் நடத்தை மற்றும் பங்களாதேஷின் மூலோபாயம் பற்றியும் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் வலியுர் ரஹ்மான் கான் தாக்கல் செய்த மனு மீது கடந்த புதனன்று (8) நீதிபதி முஸ்தபா சமான் மற்றும் நீதிபதி எம். டி ஆயதுல்லா அடங்கிய அமர்வு விசாரணை நடத்தியது. இதில் தற்போது நடைபெற்று வரும் உலகக் கிண்ணத்தில் வர்ணனையாளராக செயல்படும் வக்கார் யூனிஸை நீக்குவதற்கு சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலுக்கு முறைப்பாடு செய்யாதது குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபை மற்றும் அதன் தலைவர் 10 நாட்களுக்குள் விளக்கம் அளிக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.



கெகிராவ திப்பட்டுவெவ மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சம்பியன்ஸ் கிண்ணத்தை வென்ற நிவ் ஸ்டார் விளையாட்டுக் கழக கிரிக்கெட் அணியை படத்தில் காணலாம். *(படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர்)*

## சர்வதேச செய்திகள்

# வடக்கு காசாவில் போர் உக்கிரம்: பல்லாயிரம் பலஸ்தீனர்கள் தெற்கை நோக்கி வெளியேற்றம்

## தொடர்ந்தும் இடைவிடாது வான் தாக்குதல்



காசாவில் இஸ்ரேலிய போர் விமானங்கள் நேற்றும் (09) சரமாரி குண்டுமழை பொழிந்ததோடு தரைப்படையினர் ஹமாஸ் போராளிகளுடன் வீதி வீதியாக உக்கிர சண்டையில் ஈடுபட்டு வரும் நிலையில் வடக்கு காசாவில் இருந்து ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் பாதுகாப்பைத் தேடி தமது வீடுகளை விட்டு தெற்கை நோக்கி வெளியேறி வருகின்றனர்.

ஒரு மாதத்திற்கு மேலாக இஸ்ரேல் இடைவிடாது தாக்குதல் நடத்தி வரும் நிலையில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் போர் வலயங்களில் போதுமான உணவு மற்றும் நீர் இன்றி மோசமான மனிதாபிமான நெருக்கடியை சந்தித்து வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

வடக்கு காசாவின் ஜபலியா அகதி முகாமில் உள்ள இரு வீடுகள் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதல்களில் சிறுவர்கள், பெண்கள் உட்பட 30 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வாபா தெரிவித்துள்ளது.

இந்த வான் தாக்குதல்களில் பல டஜன் பேர் காயமடைந்திருப்பதோடு மேலும் பலர் இடிபாடுகளில் சிக்கி இருப்பதாக அந்த செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. காசா நகரின் அல் சப்ரா பகுதியில் இருக்கும் மற்றொரு வீட்டின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் மேலும் எட்டுப் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மத்திய கான் யூனிஸில் இருக்கும் அல் இக்லாஸ் பள்ளிவாசலுக்கும் அங்கிருக்கும் அல் முஸ்தபா பள்ளிவாசலுக்கும் இஸ்ரேல் நேற்று குண்டு வீசியது. இஸ்ரேலிய வான் தாக்குதல்களில் இதுவரை நான்கு பள்ளிவாசல்கள் தகர்க்கப்பட்டிருப்பதாக வாபா குறிப்பிட்டது.

இஸ்ரேல் கடந்த மூன்று நாட்களில் எட்டு மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்தி இருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த முற்றுகை பகுதியில் போர் வெடித்த கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதிக்குப் பின்னர் 18 மருத்துவமனைகள் செயலிழந்திருப்பதாகவும் அது கூறியது.

வடக்கு காசா பகுதியில் உள்ள பெயித் லஹியா சிறு நகரில் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்திருப்பதாக ஏ.பீ. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவிலும் தாக்குதல்கள் தீவிரமடைந்திருந்ததோடு வடக்கு காசாவை மையப்படுத்தியே போர் தீவிரம் அடைந்துள்ளது.

காசாவில் உயிரிழப்பு 11 ஆயிரத்தை நெருங்கி இருப்பதோடு மேற்குக் கரையிலும் வன்முறைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலிய இராணுவம் நேற்று நடத்திய துப்பாக்கிச் சூடுகளில் எட்டுக் பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதன்படி கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் வெடித்தது தொடக்கம் அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 171 உயர்ந்துள்ளது.

ஜெனின் நகரில் நேற்று அதிகாலை இஸ்ரேல் இராணுவம் நடத்திய சுற்றுவளைப்பிலேயே பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 13 பேர் காயமடைந்திருப்பதோடு காயமடைந்த சிலர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

**தரைவழி மோதல்**

மறுபுறம் தரைவழி மோதலும் தீவிரம் அடைந்துள்ளது. ஹமாஸின் கோட்டையாக கருதப்படும் காசா நகரின் மையப் பகுதியை நோக்கி முன்னேறுவதாக இஸ்ரேல் கூறியிருப்பதோடு எதிரிகளுக்கு கடும் சேதத்தை ஏற்படுத்தியதாக ஹமாஸ் போராளிகள் தெரிவித்துள்ளனர்.

காசா நகரில் குண்டு வீச்சுக்கு மத்தியில் வீதிகளில் கடும் மோதல் இடம்பெறுவதை காட்டும் வீடியோவை ஹமாஸ் ஆயுதப் பிரிவு கடந்த புதனன்று (08) வெளியிட்டது. நிலத்தடி சுரங்கப்பாதைகளை பயன்படுத்தி அதிரடி தாக்குதல்களை நடத்தும் பலஸ்தீன போராளிகளின் எதிர்ப்பை இஸ்ரேலிய டாங்கிகள் சந்தித்து வருவதாக ஹமாஸ் மற்றும் மற்றொரு போராட்டக் குழுவான இஸ்லாமிய ஜிஹாத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

வடக்கு காசாவின் ஜபலியாவில் உள்ள ஹமாஸ் புறக்காவல் நிலையத்தை 10 மணி நேர சண்டைக்குப் பின் கைப்பற்றியதாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படை எக்ஸ் சமூகதளத்தில் தெரிவித்துள்ளது.

வடக்கு காசாவில் ஹமாஸ் கட்டுப்பாட்டை இழந்துள்ளதாக இஸ்ரேலிய தலைமை இராணுவப் பேச்சாளர் ரியர் அட்மிரல் டனியோல் ஹகரி தெரிவித்துள்ளார். இஸ்ரேலிய போர் நிலை பொறியியலாளர்கள் வெடிபொருட்களை பயன்படுத்தி பல நூறு கிலோமீற்றர் நீண்ட சுரங்கப் பாதைகளை அழித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு இதுவரை 130 சுரங்கப்பாதைகள் அழிக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.



இந்நிலையில் இஸ்ரேலிய துருப்பினர் கடந்த புதனன்று காசா நகர விளிம்புப் பகுதிக்கு செய்தியாளர்களை அழைத்துச் சென்றிருந்தனர். அந்த நகரம் பேரழிவை சந்தித்திருப்பதை கண்டதாக அங்கு சென்ற செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கட்டடங்களின் சுவர்கள் தகர்ந்து அனைத்து இடங்களிலும் துப்பாக்கி குண்டுகளின் துளைகள் தெரிவதோடு பனை மரங்களும் துண்டாடப்பட்டு காணப்படுவதாக அவர்கள் விபரித்துள்ளனர்.

பணயக்கைதிகள் விடுவிக்கப்படும் வரை போர் நிறுத்தம் ஒன்றை செயற்படுத்துவதை இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தொடர்ந்து மறுத்து வருகிறார்.

இந்நிலையில் 6 அமெரிக்கர்கள் உட்பட 12 பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாக ஹமாஸ் அமைப்புக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

ஹமாஸுடன் தொடர்பு கொள்ள வழி இருப்பதாக குறிப்பிட்டிருக்கும் அமெரிக்க தேசிய பாதுகாப்பு சபை பேச்சாளர் ஜோன் கிர்பி, முயற்சிகளை சீர்குலைக்கும் என்பதால் விபரத்தை வெளியிட மறுத்துள்ளார்.

“அவர்களை (பணயக்கைதிகள்) அவர்களின் குடும்பங்களுடன் இணைப்பதற்கு எம்மால் முடியுமான அனைத்தையும் செய்வோம்” என்றும் அவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தத்தை மறுக்கும் இஸ்ரேலுக்கு அமெரிக்காவும் ஆதரவு வழங்குவதோடு ஜப்பானில் புதன்கிழமை கூடிய ஜி7 வெளிநாட்டு அமைச்சர்கள் கூட்டத்திலும் “மனிதாபிமான போர் நிறுத்தம் மற்றும் பாதைகளுக்கே” அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

**ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றம்**

சுரங்கப் பாதைகளை இலக்கு வைத்து இஸ்ரேலிய தரைப் படை தாக்குதல்களை நடத்தி வான் தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருக்கும் அதேநேரம் வடக்கு காசாவில் இருந்து மக்களை தெற்கை நோக்கி வெளியேறும்படி கூறி இஸ்ரேல் துண்டுப் பிரசுரங்களையும் வீசி வருகிறது.

வடக்கு காசாவின் போர் வலயத்தில் இருந்து கடந்த புதன்கிழமை சுமார் 50,000 பேர் வெளியேறியதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது. இது இந்த வார ஆரம்பத்தை விடவும் பெரும் அதிகரிப்பாக உள்ளது. ஏற்கனவே 2.3 மில்லியன் மக்கள் தொகை கொண்ட காசாவின் பாதிக்கும் அதிகமான 1.5 மில்லியன் மக்கள் அந்தக் குறுகிய நிலப்பகுதியின் தெற்குப் பக்கமாக அடைக்கலம் பெற்றிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய வாதி காசா மாவட்டத்தின் வடக்கு போர் வலயங்களில் நிலைமை மோசமடைந்திருப்பதாக ஐ.நா மனிதாபிமான விவகார ஒருங்கிணைப்பு அலுவலகம் எச்சரித்துள்ளது.

“இடம்பெயர்ந்தவர்கள் உட்பட காசாவின் வடக்கில் தொடர்ந்து தங்கியுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் மோசமான மனிதாபிமான நிலையை எதிர்கொண்டிருப்பதோடு உயர்வாழ்வதற்கான குறைந்த அளவான உணவு மற்றும் நீரை பெறுவதற்கும் போராடி வருகின்றனர்” என்று தெரிவித்துள்ளது.

வடக்கு காசாவின் பெயித் லஹியாவில் உள்ள இந்தோனேசிய மருத்துவமனையில், வான் தாக்குதலில் கொல்லப்பட்ட தனது இரண்டு வயது மகன் முஹமது அபூ கமரின் உடலை கட்டிப்பிடித்தபடி தந்தை ஒருவர் அழுதுகொண்டிருப்பாதை காணமுடிந்தது.

“அவனை பிரேத அறையில் வைக்க வேண்டாம், எனக்கு வீட்டுக்கு எடுத்துச்செல்ல தாருங்கள். நாளை அவனை நான் அடக்கம் செய்கிறேன்” என்று தந்தையான நிதால் அழுதபடி கூறியதோடு அருகில் அவரது மனைவியும் அழுதபடி காணப்பட்டார்.

காசா மீதான குண்டுவீச்சு மற்றும் அங்குள்ள மக்களை வெளியேற உத்தரவிட்டிருக்கும் இஸ்ரேலுக்கு ஐ.நா மனித உரிமை உயர்ஸ்தானிகர் வோல்கர் துர்க் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

“பொதுமக்களை சட்டவிரோதமாக வலுக்கட்டாயமாக வெளியேற்றுவது போன்று பலஸ்தீன பொதுமக்கள் மீதான இஸ்ரேலின் கூட்டுத் தண்டனையும் ஒரு போர் குற்றமாகும்” என்று காசாவுடனான ரபா எல்லையில் எகிப்தில் இருந்து செய்தியாளர்களிடம் பேசிய துர்க் தெரிவித்தார்.

இஸ்ரேலின் எச்சரிக்கையை அடுத்து இஸ்ரேலிய வான் தாக்குதல்களால் அழிவடைந்திருக்கும் கட்டட இடிபாடுகள் மற்றும் அதற்குக் கீழ் தொடர்ந்து சிக்கி இருக்கும் சடலங்களைத் தாண்டி பலரும் தெற்கை நோக்கி பயணித்தபோதும் மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் தொடர்ந்தும் வடக்கில் தங்கியுள்ளனர்.

காசாவின் தென் பகுதி பாதுகாப்பானது என இஸ்ரேல் வாக்குறுதி அளித்தபோதும் அந்தப் பகுதியும் இஸ்ரேலின் தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு இலக்காகி வருகிறது. தெற்கு மற்றும் மத்திய காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்களில் இதுவரை 3,600க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் தெற்கை நோக்கி வெளியேறும் மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் குறைந்தது 100 பேர் கொல்லப்பட்டிருப்பதாக அமெரிக்காவை தளமாகக் கொண்ட மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

## அமெரிக்க ட்ரோனை வீழ்த்தியது ஹூத்தி



காசாவில் இஸ்ரேலின் போருக்கு ஆதரவாக உளவு பார்க்கும் அமெரிக்காவின் எம்.கியூ.–9 உளவு விமானத்தை யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் சுட்டுவீழ்த்தியுள்ளனர்.

யெமன் கடற்கரைக்கு அப்பால் இந்த ட்ரோன் சூட்டுவிழ்த்தப்பட்டாக அமெரிக்காவின் மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். முன்னதாக யெமனுக்கு சொந்தமான கடற்பகுதியில் கண்காணிப்பு மற்றும் உளவு வேலையில் ஈடுபட்ட அளில்லா விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக ஈரான் ஆதரவு ஹூத்திக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரங்களில் இஸ்ரேலை இலக்கு வைத்து ஹூத்திக்கள் பல முறை தாக்குதல்களை நடத்தி இருந்தனர். அவ்வாறான பல ஏவுகணைகளை அமெரிக்க கடற்படை இடைமறித்திருந்தது. யெமன் தலைநகர் சானாவை 2014 ஆம் ஆண்டு கைப்பற்றிய ஹூத்திக்கள் அந்நாட்டின் பெரும் பகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 நவம்பர் மாதம் 10ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# அறிவித்தல்

## இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தின் பின்வரும் வெற்றிடங்களுக்காக இலங்கை விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

### 01. உதவிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) - சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி - (HM 1-1) – 01 பதவி

**சம்பள அளவு:**

HM – 1-1 - ரூபா 80, 295 – 15 x 2270 – 114,345/- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும். (2023-01-01) திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 80,295.00 ரூபாவாகும்.

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / வியாபார முகாமைத்துவம் / வர்த்தகமானி பாடங்களில் பெற்றுக்கொண்ட பட்டம்

**அத்துடன்**

இயைபுடைய பாடத்துறையில் பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது பதவிக்கு இயைபான பாடத்துறைக்குப் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனம் சார்ந்த அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ சேவை வகுதியில் (MM) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் இயைபுடைய விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:**

35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

### 02. உதவிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்) - சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (HM 1-1) – 01 பதவி

**சம்பள அளவு:**

HM – 1-1 - ரூபா 80, 295 – 15 x 2270 – 114,345/- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும். (2023-01-01) திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 80,295.00 ரூபாவாகும்.

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வள முகாமைத்துவம் / சட்டம் / வியாபார முகாமைத்துவம் / அரச நிர்வாகம் / வியாபார நிர்வாகத்தில் பெற்றுக்கொண்ட பட்டம்

**அத்துடன்**

இயைபுடைய பாடத்துறையில் பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது பதவிக்கு இயைபான பாடத்துறைக்குப் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனம் சார்ந்த அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ சேவை வகுதியில் (MM) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் இயைபுடைய விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:**

35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

### 03. உதவிப் பொது முகாமையாளர் (நிதி) - சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (HM 1-1) – 01 பதவி

**சம்பள அளவு:**

HM – 1-1 - ரூபா 80, 295 – 15 x 2270 – 114,345/- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும். (2023-01-01) திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 80,295.00 ரூபாவாகும்.

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார நிர்வாகம் / வியாபார முகாமைத்துவம் / கணக்கியல் / நிதி முகாமைத்துவம் / வர்த்தகமானி பட்டம்

**அத்துடன்**

இயைபுடைய பாடத்துறையில் பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது பதவிக்கு இயைபான பாடத்துறைக்குப் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனம் சார்ந்த அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ சேவை வகுதியில் (MM) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் இயைபுடைய விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:**

35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

### 04. முகாமையாளர் (தொழிற்சாலை) - முகாமைத்துவ சேவை வகுதி (MM 1-1) – 01 பதவி

**சம்பள அளவு:**

MM – 1-1 - ரூபா 53175 - 10x1375 - 15x1910 - 95,575.00

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

(2023-01-01) திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 53,175.00 ரூபாவாகும்.

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் இயந்திரப் பொறியியல் / பொறியியல் / உற்பத்தி முகாமைத்துவம் / மின்சாரப் பொறியியல் போன்ற பாடங்களில் பெற்றுக்கொண்ட பட்டம்

**மற்றும்**

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச அல்லது ஓரளவு அரச சார்புடைய நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் உற்பத்தியகமொன்றில் பதவிநிலை மட்டத்தில் இயைபுடைய துறைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 03 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

02. மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தொழில்நுட்ப/ தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) ஏழாவது (07) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

இந்தத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச அல்லது ஓரளவு அரச சார்புடைய நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஔடத உற்பத்தியகமொன்றில் பதவிநிலை மட்டத்தில் ஆகக் குறைந்தது 03 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. ''கனிஷ்ட முகாமைத்துவம்" (JM 1-1) சேவை வகுதியில் இயைபுடைய துறைப் பதவியில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

### 05. முகாமையாளர் (கிரயம் - COST) - முகாமைத்துவ சேவை வகுதி (MM 1-1) – 01 பதவி

**சம்பள அளவு:**

MM – 1-1 - ரூபா 53175 - 10x1375 - 15x1910 - 95,575.00

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

(2023-01-01) திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 53,175.00 ரூபாவாகும்.

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் கணக்கியல் / வர்த்தகம் / பொருளியல் / நிதி முகாமைத்துவம் போன்ற பாடங்களில் பெற்றுக்கொண்ட பட்டம்

**மற்றும்**

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச அல்லது ஓரளவு அரச சார்புடைய நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் உற்பத்தியகமொன்றில் பதவிநிலை மட்டத்தில் இயைபுடைய துறைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 03 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

02. இலங்கை பட்டய தொழில்சார் நிறுவனமொன்றின் இடைநிலைப் பரீட்சையில் (Intermediate Level) சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

இந்தத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச அல்லது ஓரளவு அரச சார்புடைய நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஔடத உற்பத்தியகமொன்றில் பதவிநிலை மட்டத்தில் ஆகக் குறைந்தது 03 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. ''கனிஷ்ட முகாமைத்துவம்" (JM 1-1) சேவை வகுதியில் இயைபுடைய துறைப் பதவியில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

### 06. முகாமையாளர் (திட்டமிடல்) - முகாமைத்துவ சேவை வகுதி (MM 1-1) – 01 பதவி

**சம்பள அளவு:**

MM – 1-1 - ரூபா 53175 - 10x1375 - 15x1910 - 95575.00 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும். (2023-01-01) திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 53,175.00 ரூபாவாகும்.

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் வர்த்தகம் / சந்தைப்படுத்தல் பொருளியல் / வியாபார நிர்வாகம் / பொது நிர்வாகம் / வியாபார முகாமைத்துவம் போன்ற பாடங்களில் பெற்றுக்கொண்ட பட்டம்

**மற்றும்**

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச அல்லது ஓரளவு அரச சார்புடைய நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் வழங்கல்கள் அல்லது பொருள் முகாமைத்துவம் அல்லது பெறுகை துறைக்கு இயைபான பதவிநிலை மட்டப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. ''கனிஷ்ட முகாமைத்துவம்" (JM 1-1) சேவை வகுதியில் இயைபுடைய துறைப் பதவியில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

### 07. பாதுகாப்பு அதிகாரி - கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (JM 1-1) – 01 பதவி

**சம்பள அளவு:**

JM – 1-1 - ரூபா 42600 -10 x755– 18x 1135– 70,580.00 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும். (2023-01-01) திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 42,600.00 ரூபாவாகும்.

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் முப்படை, பொலிஸ், அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் இரண்டு வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத (MA 1-1) சேவை வகுதியில் IIஆந் தர பாதுகாப்புத் துறையில் ஆகக் குறைந்தது ஐந்து வருட (05) திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

### 08. நிர்வாக அதிகாரி - கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (JM 1-1) – 01 பதவி

**சம்பள அளவு:**

JM – 1-1 - ரூபா 42600 -10 x755– 18x 1135– 70,580.00 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும். (2023-01-01) திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 42,600.00 ரூபாவாகும்.

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வளங்கள் / வியாபார நிர்வாகம் / முகாமைத்துவம் / அரச நிர்வாக பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் மனிதவள முகாமைத்துவம் அல்லது நிர்வாக துறையில் இரண்டு வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத (MA 1-1) சேவை வகுதியில் IIஆந் தர மனிதவளம் / நிர்வாகத் துறையில் ஆகக் குறைந்தது ஐந்து வருட (05) திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

### 09. வழங்கல் அதிகாரி - கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (JM 1-1) – 02 பதவிகள்

**சம்பள அளவு:**

JM – 1-1 - ரூபா 42600 -10 x755– 18x 1135– 70,580.00 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும். (2023-01-01) திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 42,600.00 ரூபாவாகும்.

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் / சந்தைப்படுத்தல் / பொருளியல் / வியாபார நிர்வாகம் / அரச நிர்வாகம் / வியாபார முகாமைத்துவம் போன்ற விடயங்களில் பெற்றுக்கொண்ட பட்டம் அல்லது பதவிக்கு இயைபான விடயத்துறையில் வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத (MA 1-1) சேவை வகுதியில் IIஆந் தர மனிதவளம் / நிர்வாகத் துறையில் ஆகக் குறைந்தது ஐந்து வருட (05) திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

### 10. நிலையப் பொறுப்பதிகாரி (களஞ்சியசாலை / விற்பனை நிலையம்) - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) (MA 1-1) – 01 பதவிகள் (நாடெங்கிலுமுள்ள இலங்கை ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்கள் மற்றும் களஞ்சியசாலைகளுடன் இணைக்கப்படுவர்)

**சம்பள அளவு:**

MA – 1-1 - ரூபா 27910 - 10x300 - 7x350 - 4x495 - 20x660 - 48,540.00 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

(2023-01-01) திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 27,910.00 ரூபாவாகும்.

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (கட்டாயமான பொதுத் தகைமை)**

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்
   i. சிங்களம் / தமிழ்
   ii. கணிதம்
   iii. ஆங்கில மொழி (பணிகளுக்கேற்ப தேவையானால் மட்டும்)
   போன்ற பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர்) தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மற்றும்**

(கணனி சொல்லாக்கம் / தட்டச்சு தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல் அல்லது வேறு அதற்குச் சமமான மட்டத்திலான திறன் இயைபுடைய வேளையில் தகைமையொன்றாக உள்ளடக்கப்படலாம்)

(இ) பதவிக்குரித்தான ஏனைய விசேடத்துவ தகைமைகள்:

நிலையப் பொறுப்பதிகாரி (விற்பனை நிலையம்) - சந்தைப்படுத்தல் தொடர்பில் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஒரு வருட கால அனுபவம்

நிலையப் பொறுப்பதிகாரி (களஞ்சியசாலை) - அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் களஞ்சியப்படுத்தல் தொடர்பில் கற்கை நெறியொன்றை கற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இயைபுடைய துறையில் ஒரு வருடகால அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்**

(அ) ஆரம்ப தரம் - தேர்ச்சியற்ற, அரைத் தேர்ச்சியுள்ள, தேர்ச்சிபெற்ற சேவை வகுதியில் பின்வரும் 'ஆ', 'இ' மற்றும் 'ஈ' என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட பணியாளர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்
   i. சிங்களம் / தமிழ்
   ii. கணிதம்
   iii. ஆங்கில மொழி (பணிகளுக்கேற்ப தேவையானால் மட்டும்)
   போன்ற பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) சேவையில் நிரந்தர நியமனத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த நியமனத்தில் நிரந்தமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) குறித்த தினத்திற்கு முன்னர் நிரந்தர நியமனத்தில் ஆகக் குறைந்தது தொடர்ச்சியான 05 வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

ஏதாவது பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவற்கு முன் சேவையாற்றியுள்ள அல்லது ஏதாவது பதவியொன்றின் நிரந்தர நியமனத்திற்கான நிபந்தனையாக சேவையாற்றியுள்ள பயிற்சிக் காலம் மேற்படி ''ஈ'' பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமை பெறுவதற்கான ஐந்து வருட காலத்திற்கான கணக்கில் சேர்க்கப்பட மாட்டாது. ஏதாவது பதவியொன்றில் நிரந்தர நியமனம் பெறுவதற்கு முன் சேவையாற்றியுள்ள தற்காலிக /சமயாசமய சேவைக் காலம் மேற்படி ''ஈ'' பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமை பெறுவதற்கான ஐந்து வருட காலத்திற்கான கணக்கில் சேர்க்கப்பட மாட்டாது.

**வயது:**

18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

### 11. நிலையப் பொறுப்பதிகாரி (மூலிகைத் தோட்டம்) - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) (MA 1-1) – 02 பதவிகள் (நாடெங்கிலுமுள்ள ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தின் மூலிகைத் தோட்டத்திற்காக இணைக்கப்படுவர்)

**சம்பள அளவு:**

MA – 1-1 - ரூபா 27910 - 10x300 - 7x350 - 4x495 - 20x660 - 48,540.00 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

(2023-01-01) திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 27,910.00 ரூபாவாகும்.

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (கட்டாயமான பொதுத் தகைமை)**

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்
   i. சிங்களம் / தமிழ்
   ii. கணிதம்
   iii. ஆங்கில மொழி (பணிகளுக்கேற்ப தேவையானால் மட்டும்)
   போன்ற பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர்) தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மற்றும்**

(கணனி சொல்லாக்கம் / தட்டச்சு தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல் அல்லது வேறு அதற்குச் சமமான மட்டத்திலான திறன் இயைபுடைய வேளையில் தகைமையொன்றாக உள்ளடக்கப்படலாம்)

(இ) பதவிக்குரித்தான ஏனைய விசேடத்துவ தகைமைகள்:

கமத்தொழில் தொடர்பான கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல் (உயர்தரத்தில் கமத்தொழில் பிரிவில் சித்தியடைந்தவர்களுக்கு ஏற்புடையதல்ல)

**உள்ளக விண்ணப்பதாரிகள்**

(அ) ஆரம்ப தரம் - தேர்ச்சியற்ற, அரைத் தேர்ச்சியுள்ள, தேர்ச்சிபெற்ற சேவை வகுதியில் பின்வரும் 'ஆ', 'இ' மற்றும் 'ஈ' என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட பணியாளர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்
   i. சிங்களம் / தமிழ்
   ii. கணிதம்
   iii. ஆங்கில மொழி (பணிகளுக்கேற்ப தேவையானால் மட்டும்)
   போன்ற பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) சேவையில் நிரந்தர நியமனத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த நியமனத்தில் நிரந்தமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) குறித்த தினத்திற்கு முன்னர் நிரந்தர நியமனத்தில் ஆகக் குறைந்தது தொடர்ச்சியான 05 வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

ஏதாவது பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவற்கு முன் சேவையாற்றியுள்ள அல்லது ஏதாவது பதவியொன்றின் நிரந்தர நியமனத்திற்கான நிபந்தனையாக சேவையாற்றியுள்ள பயிற்சிக் காலம் மேற்படி ''ஈ'' பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமை பெறுவதற்கான ஐந்து வருட காலத்திற்கான கணக்கில் சேர்க்கப்பட மாட்டாது. ஏதாவது பதவியொன்றில் நிரந்தர நியமனம் பெறுவதற்கு முன் சேவையாற்றியுள்ள தற்காலிக / சமயாசமய சேவைக் காலம் மேற்படி ''ஈ'' பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமை பெறுவதற்கான ஐந்து வருட காலத்திற்கான கணக்கில் சேர்க்கப்பட மாட்டாது.

**வயது:**

18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

### 12. முகாமைத்துவ உதவியாளர் - முகாமைத்துவ உதவியாளர் (தொழிற்நுட்பம் அல்லாத) (MA 1-1) – 02 பதவிகள்

**சம்பள அளவு:**

MA – 1-1 - 27910 - 10x300 - 7x350 - 4x495 - 20x660 - 48,540.00 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

(2023-01-01) திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 27,910.00 ரூபாவாகும்.

**தகைமைகள்:**

வெளிவாரி விண்ணப்பதாரிகள் (கட்டாயமான பொதுத் தகைமை)

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்
   i. சிங்களம் / தமிழ்
   ii. கணிதம்
   iii. ஆங்கில மொழி (பணிகளுக்கேற்ப தேவையானால் மட்டும்)
   போன்ற பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர்) தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மற்றும்**

(கணனி சொல்லாக்கம் / தட்டச்சு தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல் அல்லது வேறு அதற்குச் சமமான மட்டத்திலான திறன் இயைபுடைய வேளையில் தகைமையொன்றாக உள்ளடக்கப்படலாம்)

**உள்ளக விண்ணப்பதாரிகள்**

(அ) ஆரம்ப தரம் - தேர்ச்சியற்ற, அரைத் தேர்ச்சியுள்ள, தேர்ச்சிபெற்ற சேவை வகுதியில் பின்வரும் 'ஆ', 'இ' மற்றும் 'ஈ' என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட பணியாளர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்
   i. சிங்களம் / தமிழ்
   ii. கணிதம்
   iii. ஆங்கில மொழி (பணிகளுக்கேற்ப தேவையானால் மட்டும்)
   போன்ற பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) சேவையில் நிரந்தர நியமனத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த நியமனத்தில் நிரந்தமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) குறித்த தினத்திற்கு முன்னர் நிரந்தர நியமனத்தில் ஆகக் குறைந்தது தொடர்ச்சியான 05 வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

ஏதாவது பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவற்கு முன் சேவையாற்றியுள்ள அல்லது ஏதாவது பதவியொன்றின் நிரந்தர நியமனத்திற்கான நிபந்தனையாக சேவையாற்றியுள்ள பயிற்சிக் காலம் மேற்படி ''ஈ'' பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமை பெறுவதற்கான ஐந்து வருட காலத்திற்கான கணக்கில் சேர்க்கப்பட மாட்டாது. ஏதாவது பதவியொன்றில் நிரந்தர நியமனம் பெறுவதற்கு முன் சேவையாற்றியுள்ள தற்காலிக / சமயாசமய சேவைக் காலம் மேற்படி ''ஈ'' பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமை பெறுவதற்கான ஐந்து வருட காலத்திற்கான கணக்கில் சேர்க்கப்பட மாட்டாது.

**வயது:**

18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஏனையவை:**

**அனைத்து விண்ணப்பதாரர்களும்**

a. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
b. பதவிக்குரித்தான வேலைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் வேலை செய்வதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
c. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்க்கும் முறை:**

நியமன அதிகாரியானால் நியமிக்கப்படும் குழுவொன்றினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு சேர்த்துக்கொள்ளும் விதிமுறைக்கமைய சேர்த்துக்கொள்ளப்படுவர். ஊழியர் சேமலாப நிதிக்கு நியமனம் பெறுபவர் 8%, பணிகொள்வோர் 12% எனும் வகையில் பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு நியமனம் பெறுபவரின் சம்பளத்தின் 3% இற்குச் சமமான தொகை செலுத்தப்படும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தானங்கள் மற்றும் நியாயாதிக்கச் சபைகளில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களை தமது நிறுவனத்தின் பிரதானியின் ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரரின் முழுமையான சுய தரவுகள் மற்றும் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட புகைப்படப் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தம்மால் சுயமாகத் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவங்களை தலைவர், ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனம், இல. 94, பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம எனும் முகவரிக்கு 2023-11-23ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது **sladcvacancies@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். உங்களது தொலைபேசி இலக்கம் மற்றும் உங்களைப் பற்றி விசாரிக்கக் கூடிய உறவினரல்லாத இருவரின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்தை விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பதவிகள் பலவற்றுக்கு விண்ணப்பிப்பதானால் வெவ்வெறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தபாலில் தொலைந்து போகும் மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் கூட்டுத்தாபனம் பொறுப்புக்கூற மாட்டாது.

**தலைவர்,**
**இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனம்.**

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

**மாவட்ட பொது வைத்தியசாலை - மொனராகலை**

## 2024ம் வருடத்துக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு உற்பத்தியாளர்கள்/முகவர்கள்/பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்/கூட்டுத்தாபனங்கள் உட்பட அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து பதிவு செய்து கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஊவா மாகாணத்திலுள்ள வழங்குநர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும். பதிவு செய்து கொள்ளும் நிறுவனங்கள் கட்டாயம் வியாபாரப் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனைத்து விண்ணப்பங்களும் மருத்துவ அத்தியட்சகர், மாவட்ட பொது வைத்தியசாலை, மொனராகலை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் '2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

| (அ) பொருட்கள் வழங்கல் | (ஆ) சேவைகள் |
|---|---|
| 1. பொதுவான காகிதாதிகள் | 24. வளிச்சீராக்கிகள், குளிர்சாதனப் பெட்டிகள், உறைநிலை குளிர்சாதனங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரித்தல் மற்றும் சர்விசுகள் |
| 2. அலுவலக உபகரணங்கள்/ தளபாடங்கள்/ மின் உபகரணங்கள் | 25. தட்டச்சுப் பொறிகள், கணிக்கும் பொறிகள், ரோணியோ இயந்திரங்கள் மற்றும் புகைப்படப் பிரதி இயந்திர திருத்தவேலைகள் டுப்ளோ இயந்திரங்கள், அச்சுப் பொறிகள் கணனிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் தொலைநகல் இயந்திரங்கள் |
| 3. பாவனைப் பொருட்கள், துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் (சவர்க்காரம், பெட்டரி வகைகள், விளக்குமாறு, தும்புத்தடி, கிருமிநாசினிகள் போன்ற பாவனைப் பொருட்கள்) | 26. ஒட்சிசன் உற்பத்தி இயந்திரங்கள் சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல் |
| 4. கட்டிடப் பொருட்கள் மற்றும் நீர்க்குழாய் பகுதிகள் (Hardware/ Electronic) | 27. கட்டிடங்கள் மற்றும் நிர்மாணப் பராமரிப்பு வேலைகள் |
| 5. கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள் டோணர்கள் மற்றும் ரிபன் வகைகள் | 28. எயார் கம்பிரசர், வெகூம் இயந்திரங்கள் சேர்விஸ் மற்றும் பராமரித்தல் |
| 6. ஆய்வுகூட சிகிச்சைமுறை மற்றும் பொருட்கள், எக்ஸ்கதிர் படங்கள், மற்றும் இரசாயனப் பொருட்கள் | 29. பிரேத அறையின் வளிச்சீராக்கி மற்றும் சடலங்களை வைக்கும் இழுவைப் பெட்டிகளின் திருத்தவேலைகள் /பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 7. சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் | 30. மின்பிறப்பாக்கியை சேர்விஸ் மற்றும் பராமரித்தல் |
| 8. பிளாஸ்டிக் அலுமினியப் பொருட்கள் உட்பட உலோகப் பொருட்கள் | 31. குழாய்கிணறு திருத்தவேலைகள், நீர்ப்பம்பி நிலைய Panel Board சுத்திகரிப்பு வேலைகள் மற்றும் நீர்ப் பம்பி திருத்தவேலைகள் |
| 9. வாகனங்களுக்கான பெட்டரிகள், டயர்கள் மற்றும் டியூப்கள் வழங்குதல் வாகனங்களிற்கான உதிரிப்பாகங்களை வழங்கல் | 32. வாகனங்களை சேர்விஸ் செய்தல்<br>வாகனங்களின் சகலவகையான திருத்தவேலைகள்<br>I. வாகன சகல வகையான இயந்திர பாகங்கள் திருத்தவேலைகள்<br>II. மின்முறைமை மற்றும் உபகரணங்கள்<br>III. வளிச்சீராக்கி முறைமை<br>IV. வாகனங்களின் டிங்கரிங் மற்றும் பெயிண்டிங் வேலைகள்<br>V. வாகன குசன் வேலைகள்<br>VI. முச்சக்கரவண்டி திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் |
| 10. பலகை மற்றும் மெல்லிய பலகை | 33. மின்னியல் இயக்க முறைமை திருத்தவேலைகள், மின் உபகரண திருத்தவேலைகள் மற்றும் மூன்று சுற்று மின் இணைப்பு வழங்கல் |
| 11. உணவு வகைகள் வழங்கல் | 34. மருத்துவ வாயு குழாய் தொகுதிகளின் திருத்தம் |
| 12. இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள் மற்றும் பெயர்ப் பலகைகள் | 35. தீயணைப்பு உபகரணங்களின் திருத்தவேலைகள், மீள் நிரப்புதல் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 13. திணைக்கள அடையாள அட்டைகள் | 36. மலத்தை அப்புறப்படுத்தும் முறைமைக்குரிய சேவைகள் |
| 14. மருந்துகள் | 37. தொ.பே முறைமை சேர்விஸ் மற்றும் திருத்தவேலைகள் |
| 15. சகல வகையான துணிகள் மற்றும் நுளம்பு வலைகள் | 38. மின் உயர்த்தி சேர்விஸ் மற்றும் பராமரித்தல் |
| 16. காலணிகள் | 39. அலுமினியம் கதவு, ஜன்னல், கூரை திருத்தவேலைகள் |
| 17. எல்பி கேஸ் மற்றும் அடுப்புகள், வாயு அடுப்பு குழாய்த் தொகுதிகளின் திருத்த வேலைகள் | 40. பரிசோதனைக்காக வழங்கப்பட்ட உடற்பாகங்கள் மற்றும் உரிமை கோரப்படாத சடலங்களை அடக்கம் செய்தல் |
| 18. குப்பைகளைச் சேகரிக்கும் பைகள் மற்றும் பொலித்தீன் | 41. வைத்தியசாலையிலிருந்து அப்புறப்படுத்தப்படும் பொருட்கள் (சேலைன் போத்தல்கள், பிளாஸ்டிக் போத்தல், சிரட்டை, காகித அட்டைகள், கண்ணாடி போத்தல்கள் (பெரியவை/சிறியவை), பிளாஸ்டிக் கொள்கலன்கள்) |
| 19. ட்ரோலிகளுக்குத் தேவையான அனைத்து வகை சக்கரங்கள் | 42. வெல்டிங் வேலைகள் |
| 20. வைத்தியசாலை உபகரணங்கள் | 43. ஆய்வுகூட பரிசோதனைகளை மேற்கொள்ளல் |
| 21. வளிச்சீராக்கிகள், பிரேத அறைக்கான வளிச் சீராக்கிகள் | 44. ஊடுகதிர் படப்பிரதிகளை வழங்குதல் |
| 22. மருந்து உறைகள், CT உறைகள் மற்றும் எக்ஸ்ரே உறைகள் வழங்குதல் | |
| 23. சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் | |

**நிபந்தனைகள்:**

- மீளளிக்கப்படாத பதிவு செய்வதற்கான கட்டணமாக ஒரு உருப்படிக்கு 500.00 ரூபாவை செலுத்துதல் வேண்டும் என்பதுடன் ''மருத்துவ அத்தியட்சகர், மாவட்ட பொது வைத்தியசாலை, மொனராகலை'' என்ற முகவரிக்கு காசுக்கட்டளைகள் மூலம் அல்லது வைத்தியசாலையின் கணக்குப் பிரிவிற்கு வந்து ரொக்கப் பணமாக கட்டணங்களைச் செலுத்தலாம். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை பணம் ஏற்றுக்கொள்ளப்படும்.
- வழங்கல் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலைகளைக் கோரும் உரிமை வைத்தியசாலையின் தலைவரைச் சார்ந்து
- வழங்கப்படும் பொருட்களும் சேவைகளும் உரிய தரத்திலும், மாதிரிகளுக்கு ஒத்ததாகவும் இருத்தல் அவசியம். ஒப்பந்தத்தின் பிரகாரம் வழங்கல் மற்றும் சேவைகளை வழங்காத வழங்குநர்களின் பெயர்களை 2024 வருட வழங்குநர் பதிவேட்டிலிருந்து நீக்கிவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சகல விண்ணப்பங்களையும் 2023.11.28ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**மருத்துவ அத்தியட்சகர்,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மொனராகலை.**

**தொடர்புகள்**
**0552276261(104)**

### வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான மாதிரி விண்ணப்பப்பத்திரம்

01. விண்ணப்பதாரியின் பெயர்:
02. வியாபாரத்தின் பெயரும் விலாசமும்:
03. பதிவு செய்ய விரும்பும் பொருட்கள்/ சேவை இலக்கம்:
04. வியாபாரப் பதிவு இலக்கமும் திகதியும்:
05. தொலைபேசி இலக்கம்:
06. 2023ஆம் ஆண்டினுள் இவ்வகையான பொருட்களும் சேவைகளும் வழங்கியுள்ளீர்களா?
07. வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் பொருட்களும் சேவைகளும் பற்றிய விபரம்:

| பொருள் வழங்கல் | சேவை வழங்கல் | விடய இலக்கம் | காசுக் கட்டளை/பற்றுச்சீட்டு இல. |
|---|---|---|---|
| | | | |

08. மேற்படி நிறுவனத்திற்கு கடன் வசதி செய்து கொடுக்கும் போது பத்திரிகை விளம்பரத்தில் உள்ள நிபந்தனைகளுக்கு அமைய குறிப்பிட்ட சேவைகளையும், வழங்கல்களையும் செய்வதற்கு கட்டுப்படுகிறேன் என இத்தால் உறுதியளிக்கின்றேன்.

**திகதி:** ............................ ..................................................

**பணிப்பாளர்/முகாமையாளர்**

---

## தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

## பெறுகை அறிவித்தல்

### சமைத்த உணவு வழங்குவதற்கான விலைமனுக்கோரல் சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்கள்

01. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களில் தங்கியிருந்து சேவை பெறுபவர்களுக்கான சமைத்த உணவை வழங்குவதற்காக பதிவுசெய்யப்பட்ட மற்றும் அனுபவம் வாய்ந்த உணவு வழங்குனர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. உரிய மனு ஆவணங்களை **2023.11.13 ஆம் திகதி முதல் 2023.12.01 ஆம் திகதி** வரை பின்வரும் நிலைங்களில் வேலை நாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை** ஆவணக் கட்டணமாக **ரூ.1,000.00 (மீள்ச் செலுத்தப்படாத)** பணமாக அல்லது **கணக்கு இலக்கம் 1643,** ல் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் சார்பாக, இலங்கை வங்கி, கோட்டையில் வைப்பீடு வெய்வதன் மூலமாக பின்வரும் நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

    1. மேல் மாகாண தடுப்புப் பிரிவு, சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம், 173/2, சாந்தி மாவத்தை, தலங்கம, கொஸ்வத்தை.
    2. நவதிகன்ன தடுப்புப் பிரிவு, சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம், மஹேனவத்தை, நிட்டபுவ, ஊராபொல.
    3. மத்திய மாகாண தடுப்புப் பிரிவு, சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம், மாம்பிட்டியவத்தை, ஹன்ஸெஸ, கண்டி.
    4. தென் மாகாண தடுப்புப் பிரிவு, சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம், உனவட்டுன, காலி.

03. மனு ஆவணங்கள் இடப்பட்டுள்ள ஒவ்வொரு கடித உறையிலும் இடது மூலையில் பக்க மேல் மூலையில் "சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களுக்கு சமைத்த உணவை வழங்குவதற்கான விலைமனுக்கோரல்" எனக் குறிப்பிட்டு, முத்திரையிடப்பட்ட மனு ஆவணங்களின் பிரதிகளுடன் **2023.12.04 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு** முன்னர் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள மனுக்கள் சேகரிக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும் அல்லது இல.383, கோட்டே வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை எனும் முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு அல்லது அதன் நகல் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

04. நகல் பிரதி மூலப்பிரதியுடன் சான்றளிக்கப்பட்ட நகலாக இருத்தல் வேண்டும்.

05. முழுமையடையாத அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் உணவு வழங்குவதற்காக வழங்குனர்களை தேர்ந்தெடுக்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை கொண்டுள்ளது.

தவிசாளர்,
கொள்முதல் குழு,
தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை,
இல 383, கோட்டே வீதி,
இராஜகிரிய.

SELACINE

---

## வரையறுக்கப்பட்ட புத்தளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடங்கள்

வரையறுக்கப்பட்ட புத்தளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் வெற்றிடங்களுக்கு வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (புத்தளம் மற்றும் வணாத்தவில்லு பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவிடவாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

1. உள்ளக கணக்காய்வாளர் (கிராமிய வங்கி / பலநோக்கு)
2. முகாமையாளர் (மனித வள அபிவிருத்தி)
3. முகாமையாளர் (வியாபார அபிவிருத்தி)
4. முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)
5. கணக்காய்வு உதவியாளர்

- இந்தப் பதவிகள் பங்களிப்பு ஓய்வூதியம் சகிதமான நிரந்தர பதவிகளாகும் என்பதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் உரிமை உண்டு.
- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் நாளில் 18-45 வயதிற்கிடைப்பட்டவராகவிருத்தல் வேண்டும். தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல.
- சகல பதவிகளுக்குமுரித்தான கல்வி, தொழில்சார் மற்றும் ஏனைய தகைமைகள் தொடர்பில் வரையறுக்கப்பட்ட புத்தளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது வடமேல் மாகாணத்தின் எந்தவொரு கூட்டுறவுச் சங்கத்திலும் அல்லது வடமேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவில் விசாரித்தறியலாம்.
- தம்மாலேயே தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் உங்களின் தேசிய அடையாள அட்டை / செல்லுபடியாகும் சாரதி உரிமம் அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணத்தின் பிரதி மற்றும் ஏனைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் (பிறப்பத்தாட்சிப் பத்திரம், கிராம சேவையாளரின் சான்றிதழ், கல்வி, தொழில்சார், விளையாட்டுத் திறமைகள் மற்றும் ஏனைய தகைமைகளை உறுதி செய்வதற்கு இயைபான சான்றிதழ்கள்) கௌரவ தலைவர், வரையறுக்கப்பட்ட புத்தளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மஸ்ஜித் வீதி, புத்தளம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரிக் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.
- விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 2023-11-30ஆம் திகதியாகும். அன்றைய தினத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**தலைவர்,**
**வ/ப புத்தளம் ப.நோ.கூ. சங்கம்,**
**மஸ்ஜித் வீதி, புத்தளம்.**

**விசாரணை - மனித வள முகாமையாளர் - 032-2265270 / 070-3296572**




# இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## சுத்திகரிப்பு பிரிவு

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் — 2024

2024ஆம் வருடத்தில் சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பிரிவிற்கு கீழே வழங்கப்பட்டுள்ள உருப்படிகளின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் என்பவற்றிற்காக தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை 2023.12.15 ஆம் திகதி வரையும் www. ceypetco.gov.lk என்ற இணையதளத்திலிருந்து அல்லது கீழ்க் குறிப்பிடப்பட்டவரிடமிருந்து 9"x4" என்ற அளவுடைய முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட தபாலுறையொன்றை கீழேயுள்ள முகவரிக்கு அனுப்புவதன் மூலமும் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2023-12-28ஆம் திகதிக்கு முன் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தலின் பிரகாரம் அனுப்புதல் வேண்டும். (தபாலுறையின் வெளிப்புற இடது பக்க மேல் மூலையில் “வழங்குநர்களை பதிவு செய்தல் - 2024” என்று குறிக்கப்படல் வேண்டும்).

**வழங்கல்கள்:**

01. பொதுவான இரும்பு பொருட்கள்/குழாய்கள் மற்றும் இணைப்புகள்/உருக்கு தட்டுகள்/ Tarpaulin இன்னும் பலவும்.
02. சீமெந்து/அஸ்பெஸ்டொஸ் கூரைத்தகடுகள்/கொன்கிறீட் உற்பத்திகள்
03. பிட்டுமென்னை நிரப்புவதற்காக பாவிக்கப்பட்ட வெற்று ட்ரம்கள்.
04. Decorative Paint/Tank Coating Paint/Primer
05. சீருடைப் பொருட்கள் (காற்சட்டை/சேர்ட்) பருத்தி காலுறைகள், முகத்துவாய்கள்
06. மழை அங்கிகள்/ பாதுகாப்பு உறைகள்/ குடைகள்/ பாதுகாப்பு சப்பாத்துகள்/Gum Boots/ சப்பாத்துகள் இன்னும் பலவும்
07. கட்டிடப் பொருட்கள் (ஆற்று மணல், கற்கள் மற்றும் செங்கற்கள்)
08. காகிதாதி/போல் பொயின்ற் பேனாக்கள்/அலுவலக உபகரணங்கள் இன்னும் பலவும்
09. வேலைத்தள கருவிகள்/Cutting Disc/Grinding Wheels
10. உருக்கியொட்டும் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் / உருக்கியொட்டும் இலெக்ட்ரோட் முதலியன.
11. தீயணைப்பு மற்றும் பத்திரத்தன்மை உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் / பாதுகாப்புப் பொருட்கள் இன்னும் பலவும்
12. உயர் அழுத்த ஹோஸ்கள்
13. மின்சார சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் / வாகனங்களுக்கான பட்டறிகள் / வளிச் சீராக்கிகள்
14. Motor Terminal Mounting Plates/Motor Cooling Fans
15. இரசாயனங்கள்/ஆய்வுகூட உபகரணங்கள்/மருத்துவ உபகரணம் இன்னும் பலவும்
16. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் / டயர்கள் மற்றும் டியூப்கள்
17. கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் / ரிப்பன்கள் / மை கார்ட்ரிச்கள் இன்னும் பலவும்
18. பாத்திரங்கள் / வெட்டும் கருவிகள் / சமையல் உபகரணங்கள் / துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் / கழுவும் திரவங்கள் / சவர்க்காரம் முதலியன.
19. ஒட்டுப் பலகை சீட்கள் / பலகைகள் (உள்ளூர் / இறக்குமதி)
20. Ball & Roller bearings
21. இறப்பர் பொருட்கள் / நீர்த் தாங்கிகள் / PVC முலாமிடப்பட்ட வலைகள்
22. கண்ணாடி சீட்கள் / கண்ணாடிப் பொருட்கள்
23. பொதியிடல் மற்றும் காப்பீட்டுப் பொருட்கள் / பருத்திக் கழிவுகள் இன்னும் பலவும்
24. இரும்பு வார்ப்புகள் (Castings)
25. அச்சு வேலைகள்
26. மருந்து வகைகள்
27. பாதுகாப்பு உருப்படிகள்
28. பல்வகையான வாயுக்கள்
29. அலுமினியம் கதவுகள் மற்றும் பொருத்தல் கட்டமைப்புகள்/Vertical & Venetian Blinds
30. பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்துக்குத் தேவையான வாகனம் மற்றும் இலகு வாகனம்
31. பால்மா/ சீனி/ தேயிலை
32. போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர்
33. ஏனைய உருப்படிகள்

**முகாமையாளர் (பொருள்வளம்)**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்பு பிரிவு,**
**த.பெட்டி 11, களனி, தொலைபேசி : 011 - 2400110.**

# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

கடன் தொடர்பு இல. 82708655, 82708782

சீதுவை, லியனகேமுல்ல, நீர்கொழும்பு வீதி இல. 584 இல் அமைந்த நிவ் தயாரத்ன அன்ட் கம்பனி (பிரைவேற்) லிமிடெற் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை. பணிப்பாளர்கள்: சீதுவை, லியனகேமுல்ல, நீர்கொழும்பு வீதி, இல. 584 ஐச் சேர்ந்த

(1) விஜேசுந்தர முதியான்சேலாகே செனரத் தயா விஜேசுந்தர,
(2) கருணாநாயக்க லியனகே பிரியங்கனீ குமாரி விஜேசுந்தர.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2023.10.13 ஆம் திகதி 2354 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 2023.10.13 ஆம் திகதி தினகரன், தினமின, மற்றும் டேய்லிநியூஸ் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்‌ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன அவர்கள் 07.12.2023 ஆம் திகதி **1.30 p.m.** மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை.

மேற்குறிப்பிட்ட அட்டவணை.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை பல்லே பற்றுவில் விஜேராம கிராம சேவகர் பிரிவு மற்றும் மஹரகம பிரதேச செயலகப் பிரிவில் மஹரகம பட்டின சபை எல்லைகளுள் கங்கொடவில கிராமத்தில் அமைந்த “தாவத்கஹலந்த” என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். ஏன் ஜயவர்தன தயாரித்த 2006 மே 10 திகதியிட்ட வரைபடம் இல. 349 இல் காணித்துண்டு 6A2 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, அதாவது மேற்கூறிய காணித்துண்டு 6A2 இன் எல்லைகளாவன: வடக்கில் 15 அடி அகலப் பாதையும், கிழக்கில் பாசல் மாவத்தை வரிமதிப்பு இல.160/5 ஐக் கொண்ட நிலமனையும் தெற்கில் பாதை மற்றும் பாசல் மாவத்தை வரிமதிப்பு இல. 152 ஐக் கொண்ட நிலமனையும் மேற்கில் காணித்துண்டு 6 A1 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 349 இன் பிரகாரம் பத்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0,பே.10) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மண், மரங்கள், பயிர்கள், மற்றும் சகலதும் ஆகும். இக்காணி நுகேகொட, தெல்கந்த காணிப்பதிவகத்தில் **B448/06** இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய காணித்துண்டு உத்தரவுபெற்ற நில அளவையாளர் B.U.S. பெர்ணாண்டு தயாரித்த 2011 ஏப்ரல் 1 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 1998 இல் பின்வருமாறு விபரித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட கங்கொடவில கிராமத்தில் அமைந்த பாசல் மாவத்தை வரி மதிப்பு இல. 154/6 ஐக் கொண்ட “தாவத்கஹலந்த” என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் B.U.S. பெர்ணாண்டு தயாரித்த 2011 ஏப்ரல் 1 திகதியிட்ட மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1998 இல் காணித்துண்டு A என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, அதாவது மேற்கூறிய காணித்துண்டு A இன் எல்லைகளாவன: வடக்கில் பாசல் மாவத்தை வரிமதிப்பு இல. 154/6A ஐக் கொண்ட நிலமனையும், கிழக்கில் பாதையும் பாசல் மாவத்தை வரிமதிப்பு இல.155 ஐக் கொண்ட நிலமனையும் தெற்கில் பாசல் மாவத்தை வரிமதிப்பு இல. 155 ஐக் கொண்ட நிலமனையும் பாதையும் மேற்கில் பாதையும் பாசல் மாவத்தை வரிமதிப்பு இல. 154/6A உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 1998 இன் பிரகாரம் ஒன்பது தசம் ஒன்பது பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0,பே.9.90) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மண், மரங்கள், பயிர்கள், மற்றும் சகலதும் ஆகும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

“ஏலவிலை கூறுவோர் தொலை பேசி இல. 0112887637 / 0112887344 ஊடாக இராஜகிரிய மேற்தரக் கிளை சிரேஷ்ட முகாமையாளருடன் தொடர்பு கொண்டு மேற்குறிப்பிட்ட ஆதனம் சம்பந்தமான உரித்துரிமை உறுதிகளையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் சுதந்திரமாக பரீட்சிக்கலாம்.”

**திரு எஸ்.ஆர். ஜயசிங்ஹ**
**சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மேற்தரக் கிளை**
**இராஜகிரிய.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

**For classified advertisements and for replies**

received in response to advertisements published under Lake House box numbers

+94 112429342
+94 112429343

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் பிரிவு 29D இன் கீழான விற்பனை.

# மக்கள் வங்கி

## (நிறுவன வங்கியியல் பிரிவு)

### பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளே கங்கபட பற்று, இந்தொலமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள **தெல்கெக்குனே முக்கலான, பங்களாவேதெனிய** எனவும் தெல்கெக்குனே தெனிய எனவும் அழைக்கப்படும், தொம்பே பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இந்தொலமுல்ல 404ஆம் இலக்க கிராம சேவை அதிகாரி பிரிவில், தொம்பே பிரதேச சபை எல்லைகளுக்கு உட்பட்ட, அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் **பீ.ஆர்.என். சியாமலி ரத்நாயக்க** அவர்களால் வரையப்பட்ட, 2011 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதியிடப்பட்ட, **231/A** ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு **01** எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்: ஏ-11 : றூ-02 : பே-18.50**
**அதிலுள்ள கட்டடங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக**

**231/A ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணி, பின்வரும் நில ஒதுக்கீட்டின் மீள் அளவையாகும்.**

மேற்கூறப்பட்ட இந்தொலமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள **தெல்கெக்குனே முக்கலான மற்றும் பங்களாவேதெனிய** எனவும் **தெல்கெக்குனே தெனிய** எனவும் அழைக்கப்படும், அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் டீ.ஏ. விஜேசிங்க அவர்களால் வரையப்பட்ட, 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் திகதியிடப்பட்ட, **W1685** ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு **02** எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்: ஏ-12 : றூ-00 : பே-1.50**
**அதிலுள்ள மண், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக மற்றும் G607/123 என்ற இலக்கத்தில் அத்தனகல்ல காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி**
**2023 நவம்பர் 29ஆம் திகதி புதன்கிழமை**
**மு.ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்**

**லக் ஸ்டீல் எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினால் மக்கள் வங்கிக்கு அடகு வைக்கப்பட்ட சொத்து**

**தீர்மான அறிவித்தலுக்கு**
தீர்மான அறிவித்தலுக்கு தயவு செய்து 2023 செப்டம்பர் 01ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், டெயிலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் ஆகிய செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**ஆதனத்தைச் சென்றடைவதற்கான வழி**
கொழும்பு கோட்டையிலிருந்து, கொழும்பு - கண்டி “A1” நெடுஞ்சாலை சென்று 4வது மைல் போஸ்ட் சந்தியில் வலதுபுறமாக பியகம வீதிக்கு திரும்பவும். அங்கிருந்து, பண்டாரவத்தை சந்தி வழியாக வெலிவேரிய நோக்கி பியகம வீதியில் சுமார் 50 மீற்றர் பயணித்து, 20/3 மதகின் இடதுபுறமாக பூகொட வீதிக்கு திரும்பி ஜம்புகஸ் சந்தியை அடைய தெக்கடனவைக் கடந்து சுமார் 400 மீற்றர் வரை பயணிக்கவும். அங்கிருந்து கிந்திவெல வீதியில் பயணித்து வோல்டர் பெரேரா விளையாட்டு மைதானத்தில் இருந்து சுமார் 3.5 கி.மீ கோர்ணல் சமந்த ரணதுங்க மாவத்தைக்கு (வானலுவாவ வீதி) வலப்புறம் திரும்பி வானலுவாவ வீதியில் சுமார் 1 கிலோ மீற்றர் தூரம் வரை பயணித்து வலப்புறமாக இந்தோலமுல்ல வீதியை அடையலாம். இந்த வீதியில் சுமார் 100 மீற்றர் தொலைவில் இடதுபுறத்தில் சொத்து அமையப்பெற்றுள்ளது. சொத்து அமைந்துள்ள இடத்திலிருந்து தெக்கடன சுமார் 5.5 கி.மீ, தெல்கொட 9.4 கி.மீ மற்றும் கொழும்பு கோட்டை சுமார் 32.9 கி.மீ (மாகொல வழியாக) தூரமாகும்.

**கொடுப்பனவு செய்யும் முறை:**
ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி - விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2½% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500/-
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரை வரி

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் உதவிப் பொதுமுகாமையாளர்-அறவீடுகள், மக்கள் வங்கி தலைமை அலுவலகம், 10வது மாடி, இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்பவரிடம் செலுத்தப்பட வேண்டும்.

தொலைபேசி இலக்கங்கள் : 011-2481613, 011-2481514

காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் மேற்கூறப்பட்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும், உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

**“முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது”**

**ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம**

*ஒரே நாடு, ஒரே ஏல விற்பனையாளர்*

**131 வருடகால மகோன்னத சேவை அனுபவம்**

**தலைமை அலுவலகம்**
**24, டொரிங்டன் வீதி, கண்டி.**
**தொலைபேசி : 081-2227593**
**தொலை/.்.பக்ஸ் : 081-2224371**
**மின்னஞ்சல்:** schokmankandy@sltnet.lk

**நகர அலுவலகம்**
**6A, பெயார் பீல்ட் கார்ட்டன்,**
**கொழும்பு-08.**
**தொலைபேசி : 011-2671467, 011-2671468**
**தொலை/பக்ஸ் : 011-2671469**
**மின்னஞ்சல்:** schokman@samera1892.com

**இணையதளம்:** www.sandslanka.com

# பெறுகை அறிவித்தல்

## வெகுசன ஊடக அமைச்சு

### சுத்திகரிப்பு சேவை – 2024

2024 ஆம் ஆண்டிற்காக சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள நிறுவனங்களிலிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை வெகுசன ஊடக அமைச்சு அழைக்கின்றது.

02. அமைச்சினால் வழங்கப்படும் ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இதே துறையில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவத்தைக் கொண்டுள்ள நிறுவனங்களுக்கு விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும். சீரான வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் இந்த அமைச்சின் சிறாப்பரிடம் 1000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர் வியாபார பதிவு சான்றிதழின் பிரதியொன்றுடன் பணக் கொடுப்பனவிற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டையும் சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனுக்கோரல் ஆவணங்கள் கணக்கிடல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளப்படலாம்.

03. விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2023.11.30 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் வழங்கப்படும்.

04. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரியை வந்தடையும் வகையில் 2023.12.01 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக அனுப்பப்படல் வேண்டும் அல்லது பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வெகுசன ஊடக அமைச்சு,**
**அசிதிசி மெதுர,**
**இல.: 163, கிருளப்பொன அவென்யு,**
**பொல்ஹேன்கொட,**
**கொழும்பு-05.**

05. விலைமனுக்கோரலானது 2023.12.01 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு விலைமனுக்கள் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் நிகழ்விற்கு சமுகமளிக்கலாம்.

06. விலைமனுக்கோரல் ஆவணங்கள் தேவைப்படின், இந்த அமைச்சின் கணக்கிடல் பிரிவில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

07. மேலதிக விபரங்களுக்கு, 011-2513464 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக வெகுசன அமைச்சின் பிரதான கணக்காளருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வெகுசன ஊடக அமைச்சு.**

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**

# கலென்பிந்துனுவெவ பிரதேச சபை

## வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் — 2024

2024ஆம் ஆண்டில் கலென்பிந்துனுவெவ பிரதேச சபைக்குத் தேவையான பதார்த்தங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக ஆர்வமுள்ள வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ரூபா 100.00 இற்கான மீளளிக்கப்படாத தொகையைச் செலுத்தி இப் பிரதேச சபையின் அலுவலகத்தில் இதற்கான விபரக்குறிப்புகளுடன் கூடிய விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| உருப்படி இலக்கம் | வழங்க வேண்டிய பண்டங்கள் மற்றும் சேவைகள் | தொகை ரூபா. ச. |
|---|---|---|
| 01 | அலுவலக உபகரணங்கள் வழங்குதல் | 500.00 |
| 02 | அலுவலக நுகர்வோர் பதார்த்தங்கள் வழங்குதல் | 500.00 |
| 03 | அலுவலக சேவைகள் வழங்குதல் | 500.00 |
| 04 | நூலகப் புத்தகங்கள் மற்றும் கிரந்தங்கள் வழங்குதல் | 500.00 |
| 05 | உணவுப் பதார்த்தங்கள் வழங்குதல் | 500.00 |
| 06 | விழாக்களிற்கான பண்டங்கள் வழங்குதல் | 500.00 |
| 07 | வாகன திருத்த வேலைகள் மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்குதல் | 500.00 |
| 08 | போக்குவரத்துச் சேவைகள் வழங்குதல் | 500.00 |
| 09 | கட்டிடப் பொருட்கள் வழங்குதல் | 500.00 |
| 10 | கணனிகள் மற்றும் துணை உறுப்புக்கள் வழங்குதல் | 500.00 |
| 11 | நீர்க் குழாய் துணை உறுப்புக்கள் வழங்குதல் | 500.00 |
| 12 | மின் துணை உறுப்புக்கள் வழங்குதல் | 500.00 |
| 13 | நீர்ச் சுத்திகரிப்பு இயந்திரம் சேர்விசு மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்குதல் | 500.00 |

விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி - 2023.12.20
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி - 2023.12.23

ஒவ்வொரு பண்டங்கள் மற்றும் சேவைகளிற்காக, முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுக் கட்டணத்தை, ‘செயலாளர், பிரதேச சபை, கலென்பிந்துனுவெவ’ என வரையப்பட்ட காசோலையொன்றின் மூலம் அல்லது காசுக்கட்டளையொன்றின் மூலம் செலுத்தலாம். காசாகச் செலுத்துவதாயின் வார வேலை நாளொன்றில் மு.ப. 8.30 - பி.ப. 2.30 இடைப்பட்ட நேரத்தில் இப்பிரதேச சபை அலுவலகத்தில் நேரில் செலுத்தலாம்.

**எம்.எம்.என்.எஸ்.பண்டார**
**செயலாளர் (அலுவலக காப்பீடு)**
**கலென்பிந்துனுவெவ பிரதேச சபை**
**கலென்பிந்துனுவெவ.**
**தொ.பே. இல. 025-2258232**

# கொலன்னாவ நகர சபை

## 2024 வருடத்திற்கான சோலை வரியை விதிப்பு அறிவித்தல்

கொலன்னாவ நகர சபையின் செயலாளர் மற்றும் அதிகாரம், கடமை வேலைகளை நிறைவேற்றும் அதிகாரி ஹேவா மாரம்பகே நெலும் குமாரி ஆகிய நான் 255ஆம் அதிகாரமாகிய நகர சபை சட்டத்தின் 184(அ)ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கொலன்னாவ நகர சபையின், 255ஆம் அதிகாரமான நகர சபைச் சட்டத்தின் 160(1)ஆம் அத்தியாயத்தில் கொலன்னாவ நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கொலன்னாவ நகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் 2024ஆம் வருடத்திற்கான சோலை வரியை விதித்து அறவிடப்படல் வேண்டும் என 2023ஆம் வருடம் நவம்பர் மாதம் 01ஆம் திகதிய 1598ஆம் இலக்க தீர்மானத்தில் பின்வரும் தீர்மான எடுக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**2023 நவம்பர் மாதம் 01ஆம் திகதி,**
**கொலன்னாவ நகர சபை அலுவலகத்தில்.**

**எச்.எம். நெலும் குமாரி,**
**செயலாளர் மற்றும்**
**அதிகாரம், கடமை**
**வேலைகளை நிறைவேற்றும்**
**அதிகாரி**
**கொலன்னாவ நகர சபை.**

**2023 நவம்பர் மாதம் 01ஆம் திகதி,**
**கொலன்னாவ நகர சபை,**
**கொலன்னாவ.**

**2024 வருடத்திற்கான சோலை வரியை விதித்தல்**

கொலன்னாவ நகர சபையின் செயலாளர் மற்றும் அதிகாரத்தை செயற்படுத்தும், கடமை வேலைகளை நிறைவேற்றும் அதிகாரியாகிய ஹேவா மாரம்பகே நெலும் குமாரி ஆகிய நான் 255ஆம் அதிகாரமாகிய நகர சபை சட்டத்தின் 184(அ)ஆம் அத்தியாயத்தின் விதிமுறையின் பிரகாரம் கொலன்னாவ நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் 2024ஆம் வருடத்திற்குரித்தான சோலை வரி விதிப்பானது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரமாக இருத்தல் வேண்டும் என நான் தீர்மானித்துள்ளேன்.

255ஆம் அதிகாரமான நகர சபை சட்டத்தின் 160ஆம் அத்தியாயத்தின் (I) வது உப அத்தியாயத்தின் கீழ் கொலன்னாவ நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பிரதேசத்தினுள் அமைந்துள்ள வீடுகள், கட்டிடங்கள், காணிகள், மண் குடிசைகளின் 2024ஆம் வருடத்திற்கான வருடாந்த பெறுமதியின் பொருட்டு 2023ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளை 2024ஆம் வருடத்தில் ஏற்றுக்கொள்வதற்கு 255ஆம் அதிகாரமான நகர சபை சட்டத்தின் 184(அ) உப அத்தியாயத்தில் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மேற்கூறப்பட்ட ஆதனங்களுக்கான மேற்கூறிய மதிப்பீடுகளின் பொருட்டு வதிவிடங்களுக்கு 8% சதவீதமும், வர்த்தக ஆதனங்களுக்கு 22% சதவீதம் சோலை வரியாக விதித்து அறவிடப்படல் வேண்டும் எனவும்,

மேலும் 2024ஆம் வருடத்தில் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டின் பொருட்டும் எதிரில் காட்டப்பட்டுள்ள தினத்திற்கு முன் அவ்வாறு விதிக்கப்பட்ட வருடாந்த சோலை வரியை நகர சபை நிதியத்திற்கு செலுத்த வேண்டும் என்பதுடன் அதேபோல் 2024ஆம் வருடத்திற்கான சோலை வரியை அந்த வருடத்தின் ஜனவரி மாதம் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன் செலுத்துவதானால் வருடாந்த சோலை வரியின் பத்து விகிதக் (10%) கழிவும், அந்த அட்டவணையின் ஒவ்வொரு காலாண்டிற்கும் எதிரில் மூன்றாம் நிரலில் காட்டப்பட்டுள்ள திகதிக்கு முன் குறித்த சோலை வரி தொகையை நகர சபை நிதியத்திற்குச் செலுத்துவதானால் ஒரு காலாண்டிற்கு இயைபான தொகையில் 5% கழிவை கொலன்னாவ நகர சபை வழங்குதல் வேண்டும் என்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

| காலாண்டு | செலுத்த வேண்டிய திகதி | 5% கழிவுக்காக உரிமைத்துவம் பெறும் இறுதி திகதி |
|---|---|---|
| 1ஆம் காலாண்டு | 2024 மார்ச் 31ஆம் திகதிக்கு முன் | ஜனவரி 31 |
| 2ஆம் காலாண்டு | 2024 ஜுன் 30ஆம் திகதிக்கு முன் | ஏப்ரல் 30 |
| 3ஆவது காலாண்டு | 2024 செப்டெம்பர் 30ஆம் திகதிக்கு முன் | ஜுலை 31 |
| 4ஆவது காலாண்டு | 2024 டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன் | ஒக்டோபர் 31 |

**எச்.எம். நெலும் குமாரி,**
**செயலாளர் மற்றும் அதிகாரம் வாய்ந்த கடமை,**
**வேலைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**கொலன்னாவ நகர சபை.**

# மக்கள் வங்கி

## கொழும்பு வெளி -11 பிராந்திய தலைமைக் காரியாலயம்

## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏலவிற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/சேவை மையங்களில் 31.08.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 08.12.2023 வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க் காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் திகதிகள் - 19.12.2023 & 10.12.2023**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | ஹோமாகம - 049 | தெஹிவளை - 019 | பிலியந்தலை - 103 |
|---|---|---|---|
| கிளைகள் | ஹோமாகம அவிசாவளை ஹங்வல்ல | தெஹிவளை, தெஹிவளை காலி வீதி, கல்கிசை, இரத்மலானை | மொறட்டுவ மொறட்டுமுல்ல கட்டுபெத்த கெஸ்பேவ பிலியந்தலை பொறலஸ்கமுவ |
| சேவை மையங்கள் | ஹோமாகம நகரம், பாதுக்க, மீகொட, கொடகம, பனாகொட, இராணுவ தலைமையக படைப்பிரிவு, கொஸ்கம, தல்துவ, ஹங்வல்ல நகரம், கஹஹேன | அத்திடிய, நெதிமால, களுபோவில, இரத்மலானை பொருளாதார மையம் (Economic Centre) | ராவதாவத்தை கட்டுக்குருந்த புவக்அரம்ப சொய்சா கஹதுடுவ பிலியந்தலை நகரம் |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர் (கொழும்பு வெளி -11),**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**இல. 71, மொறட்டுவ வீதி, பிலியந்தலை.**
**தொலைபேசி இல. 011-2180408, 011-2180432, 011-2180478**

1961 PEOPLE'S BANK Pride of the Nation

# நீர்ப்பாசன அமைச்சு

## இலங்கை

## காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை (CResMPA)

## ஆர்வ வெளிப்பாட்டுக்கான கோரிக்கை

**நாடு:** இலங்கை

**கடன் இல.:** IBRD-89960

**ஒப்படைத் தலைப்பு: காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறைக்கான (CResMPA) இணைய அடிப்படையிலான முகாமைத்துவ தகவல் அமைப்பு மற்றும் GIS பயன்பாட்டின் வடிவமைப்பு, மேம்பாடு, நிறுவுதல் மற்றும் பராமரித்தலுக்கான ஆலோசனை சேவை**

**குறிப்பு இல.: SLMOI/CRES/PCT/C/QCBS/31**

1. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறையின் (CResMPA) செலவை நோக்கி புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான (IBRD - உலக வங்கி) சர்வதேச வங்கியில் இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறைக்கான (CResMPA) இணைய அடிப்படையிலான முகாமைத்துவ தகவல் அமைப்பு மற்றும் GIS பயன்பாட்டின் வடிவமைப்பு, மேம்பாடு, நிறுவுதல் மற்றும் பராமரித்தலுக்கான ஆலோசனை சேவையை செயற்படுத்துவதற்கு இந்த நிதிகளின் பகுதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. மேலுள்ள ஆலோசனை சேவையை வழங்குவதில் தமது ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கு தகுதியுடைய ஆலோசனை நிறுவனங்களுக்கு காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறை சார்பில் அமைச்சு ஆலோசனை பெறுகைக் குழு, தலைவரினால் தற்போது அழைப்பு விடுக்கப்படுகிறது.
3. பயனாளர் நட்பு மற்றும் ஊடாடும் இணைய அடிப்படையிலான முகாமைத்துவ தகவல் அமைப்பு மற்றும் திட்டத்தின் மூன்று கட்டங்களில் செயற்படுத்தப்பட்ட அனைத்து CResMPA செயல்பாட்டு நடவடிக்கைகளின் முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக்கு GIS பயன்பாடு ஒன்றை வடிவமைத்தல், மேம்படுத்தல், நிறுவுதல், செயற்படவைத்தல் மற்றும் பராமரித்தலுக்கு சேவை வழங்குநர் பொறுப்பாவார். கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் கற்றல் நோக்கம் மற்றும் திட்ட செயலாக்கலை திறம்படவும் திறமையாகவும் நிர்வகிப்பதற்காக நிறுவன மட்டம் மற்றும் திட்ட மட்ட அமுலாக்கலில் சிவில் வேலைகள் ஒப்பந்தங்கள், ஆலோசனைகள், நில கையப்படுத்தல், மீள் குடியேற்றம், குறை தீர்த்தல், பிரஜைகள் ஈடுபாடு, ஒப்பந்த முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம் மற்றும் ஒட்டுமொத்த திட்ட முகாமைத்துவத்தின் அமுலாக்கலுக்காக CResMPA மூலம் மேற்கொள்ளப்படும் அழைப்புகளுக்கான திட்டத்தின் வேலைத் திட்டத்தை நோக்கி தகவலை சேகரிக்கவும், சேமிக்கவும், பகுப்பாய்வு செய்யவும், விளக்கவும், காட்சிப்படுத்தவும் மற்றும் அறிக்கைகளை உருவாக்கவும் திட்ட அமுலாக்கல் நிறுவனங்களை அனுமதிப்பதற்கு பொருத்தமான நெகிழ்வான ஊடாடும் பயனர் நட்பு தீர்வொன்றை இந்த இணைய அடிப்படை MIS/GIS வழங்க வேண்டும். இந்த GIS பயன்பாடு தரவு முகாமைத்துவ மற்றும் காட்சிப்படுத்தல் பயன்பாடு ஒன்றாக அவ்வப்போது முக்கிய திட்ட தலையீடுகளை திட்டத்தின் பௌதீக திட்டம் மேலெழுவதற்கு சிறப்பு தகவல்களின் முகாமைத்துவத்திற்காக ICT தீர்வை அதிகரிக்க வேண்டும். திட்ட முகாமைத்துவம் மற்றும் மற்ற பங்குதாரர்களினால் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளை உருவாக்குவதற்காக திட்ட அமுலாக்கல் முடிவு ஒன்றாக அனைத்து முக்கிய உள்ளீடுகள், செயல்பாடுகள், வெளியீடுகள் மற்றும் விளைவுகளை கண்காணிப்பதற்கு இந்த இணைய அடிப்படையிலான MIS மற்றும் GIS பயன்பாடுகள் உதவும்.
4. மொத்தத் தொகை ஒப்பந்தம் ஒன்றாக ஆலோசனை ஒப்பந்தம் இருக்கும். சேவையின் நோக்கினை குறிப்பு விதிகளில் (TOR) விரிவாகத் தரப்பட்டிருப்பதோடு அதனை pdcresmpa@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியின் வழியாக பெற முடியும்.
5. ஆர்வமுடைய ஆலோசகர்கள் தம்மிடம் தேவையான தகைமைகள் மற்றும் சேவைகளை மேற்கொள்வதற்கு தொடர்புடைய அனுபவம் இருப்பதை குறிப்பிடும் விபரங்களை வழங்குதல் வேண்டும்.
6. தேர்வு அளவுகோல் பின்வருமாறு:
   a) பதிவு செய்யப்படும் நிறுவனம் கம்பனிப் பதிவாளர் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட திகதியின் கீழ் ஒரு மென்பொருள்/ IT மேம்பாட்டு நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
   b) மேம்படுத்தல்/ வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களுக்காக மென்பொருள்/ MIS மற்றும் GIS பயன்பாடுகள் மேம்பாட்டில் 8 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம்.
   c) கடந்த 6 ஆண்டு காலத்தில் வெளிநாட்டு நிதி அளிக்கப்பட்ட திட்டங்கள் குறிப்பாக உலக வங்கி நிதியளித்த திட்டங்களுக்காக 5க்கு மேற்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட MIS/GIS பயன்பாடுகளை மேம்படுத்தியதில் அனுபவம் மற்றும் ஆவண அத்தாட்சியுடன் ஒவ்வொரு ஒப்படையின் கீழும் மேற்கொண்ட ஒப்பந்தங்களின் பெறுமதியை குறிப்பிடுதல் வேண்டும்.
   d) கடந்த 6 ஆண்டு காலத்தில் அரச துறை திட்டங்கள் (05) உட்பட அரச துறை/ தனியார் துறையின் கீழ் செயல்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள்/ வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களுக்காக குறைந்தது 10 இதனையொத்த வகை ஒருங்கிணைக்கப்பட்ட MIS/GIS பயன்பாடுகளை மேம்படுத்தியதில் அனுபவம் மற்றும் ஆவண அத்தாட்சியுடன் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு திட்டத்தின் தொகையை குறிப்பிடுதல் வேண்டும்.
   e) இணைய அடிப்படை MIS/GIS பயன்பாட்டை மேம்படுத்துவதற்கு நிறுவனத்தில் முழு நேர IT நிபுணர்கள் மற்றும் GIS நிபுணர்கள் இருத்தல் வேண்டும்.
   f) நிறுவனத்தின் நிதி நிலைத்தன்மை மற்றும் கடந்த 4 ஆண்டுகளுக்காக (கணக்காய்வுக்கு உட்பட்ட) நிதிக் கணக்குகள் இருத்தல் வேண்டும்.
   g) தேவையான விபரங்கள் தவிர, ஆலோசகர்கள் ஏற்கனவே மேம்படுத்திய மற்றும் செயற்படும் MIS இற்கான பிரசுரங்கள், இணையதளங்கள், wb-link மற்றும் ஏனைய அது சார்ந்த ஆவணங்களை வழங்கலாம்.
7. ஆலோசகர்கள் தமது தகைமை மற்றும் அனுபவத்தை உயர்த்துவதற்கு கூட்டு முயற்சி அல்லது துணை ஆலோசனை உட்பட கூட்டிணைவுகளுக்கு அனுமதிக்கப்படமாட்டாது.
8. 2020 நான்காவது பதிப்பின் IPF கடன் பெற்றவர்களுக்கான உலக வங்கியின் பெறுகை ஒழுங்குமுறைகளில் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளின் பிரகாரம் ஆலோசகர்கள் தேர்வுசெய்யப்படுவார்கள் என்பதோடு தேர்வு முறை தரம் மற்றும் செலவு அடிப்படை தேர்வாக (QCBS) அமையும்.
9. ஆர்வமுடைய நிறுவனங்கள் மேல் கோரப்பட்டவாறு தேவையான விபரங்கள்/ தகவல்களை வழங்குதல் வேண்டும் என்பதோடு அது அதிகபட்சம் 100 பக்கங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும். தேர்வு செய்வதற்காக அதனை 01 அசல் மற்றும் 03 பிரதிகளாக சமர்ப்பித்தல் வேண்டும்.
10. அலுவலக வேலை நேரங்களில் அதாவது சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்கள் தவிர்த்து 0900 தொடக்கம் 1600 மணி வரை கீழுள்ள முகவரியில் மேலதிக விபரங்களை பெற முடியும்.
11. ஆர்வ வெளிப்பாடுகளை 2023 நவம்பர் 23 ஆம் திகதி 1300 மணி அல்லது அதற்கு முன்னர் (தபால் மூலம் அல்லது நேரடியாக) கீழுள்ள முகவரிக்கு எழுத்து வடிவத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**திட்ட பணிப்பாளர் - காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை**
**இல. 11, ஜாவத்த வீதி, கொழும்பு 05**
**தொ.: 011-2058451 / 011-2507855**
**தொலைநகல்: 011-2058451**
**மின்னஞ்சல்: pdcresmpa@gmail.com**

JCT

# ஜயா கொண்டேனர் டெர்மினல்ஸ் லிமிட்டெட்

## துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## 2024 ஆம் ஆண்டிற்காக பாதுகாப்பு சேவைகளை வழங்கல்

கொழும்பு-15, வோல்ஸ் ஒழுங்கை, 69 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கொழும்பு ஒயில் பாங்க் இடப்பரப்பிற்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சுடன் பதிவு பெற்றுள்ள தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஜயா கொண்டேனர் லிமிட்டெட் (இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையினால் முழுவதுமாக உரித்தாக்கப்பட்டுள்ளது) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றது.

2023.11.10 ஆம் திகதியிலிருந்து 2023.12.01 ஆம் திகதியன்று வரையும் அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் வரிகள் அடங்கலாக மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக 5000 ரூபாவை செலுத்திய பின்னர், கொழும்பு-15, வோல்ஸ் ஒழுங்கை, 69 ஆம் இலக்கத்திலுள்ள ஜயா கொண்டேனர் டெர்மினல்ஸ் லிமிட்டெட்டின் நிதிப் பிரிவினால் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். விலைமனுவானது 200,000 ரூபா (இரண்டு இலட்சம் ரூபா) பெறுமதியானதும் விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 90 நாட்கள் கால எல்லைக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணமானது 2023.12.04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஜயா கொண்டேனர் லிமிட்டெட், இல. 69, வோல்ஸ் ஒழுங்கை, கொழும்பு-15'' என முகவரியிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும் அல்லது JCT Ltd இன் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடியபின்னர் 2023.12.04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு திறக்கப்படும். விலைமனு முன்னோடிக் கூட்டம் மற்றும் தளவிஜயம் ஆகியன 2023.11.21 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும். விலைமனுவை அடக்கியுள்ள உரித்தான தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Provision of Security Services - 2024" என குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஜயா கொண்டேனர் டெர்மினல்ஸ் லிமிட்டெட்,**
**இல.: 69, வோல்ஸ் ஒழுங்கை,**
**கொழும்பு-15.**
**தொடர்பெண்கள்: 2540045/6**
**0701327648**

# கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்

## 2024 ஆம் ஆண்டிற்கு வழங்குநர்கள் பதிவு செய்தல்

1. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் மாளிகாவத்தை, கொழும்பு - 10 இல் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திற்குத் தேவையான கீழே அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்காக 2023 ஆம் ஆண்டிற்கு பதிவு செய்து கொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடம் இருந்து விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன.
2. அட்டவணை 01 மற்றும் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு உருப்படிக்கும் வெவ்வேறு மீளச் செலுத்தப்படாத ரூபா 1000/= தொகை திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுடன் கீழ்க் காணும் அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தம்மாலே தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவமொன்று வீதம் சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கு மேலதிகமாக அந்த விண்ணப்பப் படிவம் **www.coastal. gov.lk** இணையத்தளத்திற்கு நுழைந்து பதிவிறக்கம் செய்து கொள்ளவும் முடியும்.
3. பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்கல் சார்பாக பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் நிறுவனம் மற்றும் தனிநபர்கள் தமது வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றும், தமது நிறுவனம் பெற்றுள்ள தகைமை / அனுபவம் உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் உரித்துடைய விண்ணப்ப ப்படிவம் 2023.12.08 ஆம் திகதி ந.ப. 12.00 க்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், 4 ஆம் மாடி, புதிய செயலக கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு - 10 க்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அல்லது கீழே முகவரியில் அமைந்துள்ள திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்பட்டு அனுப்பும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்கள் பதிவு செய்தல் 2024" மற்றும் தாம் வழங்க எதிர்பார்க்கும் பண்டங்கள் அல்லது சேவைகள் பற்றி தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
4. பதிவு செய்துள்ள வழங்குநர்களிடம் இருந்து 2024 ஆம் ஆண்டிற்கு உரித்துடைய பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன், வேறு வழங்குநர்களிடம் இருந்தும் விலைமனுக்கள் கோரல் அல்லது கொள்வனவு செய்யும் உரிமையும் இந்த திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்துடையதாகும்.
5. கோரப்படும் போது விலைமனுக்கள் சமர்ப்பிக்காதவர்கள், கட்டளையிடப்பட்டதும் உரிய நேரத்திற்கு பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்காதவர்கள், உரிய தரத்திற்கு இல்லாமல் பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்கும், வழங்குநர்களின் பெயர்கள் முன் அறிவித்தல் எதுவுமின்றி பதிவு ஆவணத்தில் இருந்து வெட்டி விடப்படும்.
6. கொழும்பு மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள சேவை வழங்கும் நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.
7. உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
8. இதுபற்றிய மேலதிக தகவல்கள் தேவைப்படின் தொ.பே.இல-0112449754 மூலம் உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை 01**

1. அனைத்து வகையான வாகன உதிரிப் பாகங்கள் வழங்கல்.
2. அனைத்து வகையான வாகன புதுப்பித்தல் ( மின்சாரம் மற்றும் இயந்திர)
3. அனைத்து வகையான வாகனங்கள் வளிச்சீராக்கி புதுப்பித்தல்.
4. அனைத்து வகையான வாகனங்கள் சேவை செய்தல்.
5. அனைத்து வகையான வாகனங்கள் வர்ணம் தீட்டுதல் மற்றும் டிங்கரிங் செய்தல்.
6. வாகன குசன் வேலைகள் மற்றும் விரிப்பு வேலை.
7. ஆவணங்கள் மொழி பெயர்ப்புச் செய்தல்.
8. வாகனங்களுக்கு டயர், டியுப் மற்றும் பெட்டறி வழங்கல்.
9. அலுவலக எழுது பொருட்கள் வழங்கல்.
10. பருவ சஞ்சிகைகள், சிறிய புத்தகங்கள் மற்றும் அழைப்பிதழ் அச்சிடல்.
11. பொலிசெக் பேக் (polysacc bag) வழங்குதல்

**நிர்மாண இயந்திரங்களுக்கான உதிரிப்பாகங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல்**
**அட்டவணை 02**

01. 2023-12-20ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| உருப்படி இல. | உருப்படி | குறிப்பீட்டிலக்கம் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | Ice Flaker Machine | SG-II/71/2020/04 | 01 | 3,000.00 |
| 02 | Laparoscopic System | SG-II/71/12020/13 | 01 | 10,000.00 |
| 03 | Electrical Nerve Stimulator | SG-II/2023/03/NS | 01 | 1,000.00 |

02. இலங்கைச் சந்தைக்கு உபகரணங்களை உற்பத்தி செய்து வழங்குவதற்காக உற்பத்தியாளர்களாக பெயரிடப்பட்ட அல்லது அதிகாரபூர்வமான முகவர்கள் மட்டுமே இவ்விலைமனு கோரலில் பங்குபற்றுவதற்குத் தகைமை பெறுவர்.

03. விலைமனு ஆவணங்களை வாரத்தின் வேலை நாட்களில் 2023-11-10ஆம் திகதி முதல் 2023-12-20ஆம் திகதி வரை மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து மேற்குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. இல. 011-2691111 – நீடிப்பு-2722)

04. மேற்கூறிய 01 மற்றும் 02ஆம் உருப்படிகளுக்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2023-12-05ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இடம்பெறும்.

05. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைக்கோரல்களை 2023-12-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு ஒப்படைப்பதானால் இலங்கை தேசிய வைத்தியசாலையின் தலைமைக் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனடுத்து அவை திறக்கப்படும்.

05. மேலதிக விபரங்கள் தேவையானால் இலங்கை தேசிய வைத்தியசாலையின் தலைமைக் கணக்காளரிடம் விசாரித்தறிந்துகொள்ளலாம். (தொலைபேசி இல. 011-2694595)

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை,**
**கொழும்பு 10.**

## சுகாதார அமைச்சு

# அஷ்ர::ப் ஞாபகார்த்த வைத்தியசாலை - கல்முனை

## பிராந்திய வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2024

2024ஆம் ஆண்டிற்கான கீழே குறிப்பிடப்படும் பொருட்களை வழங்குவதன் பொருட்டு அஷ்ர.:.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை, கல்முனை வழங்கல் பிரிவில் பதிவு செய்து கொள்வதற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம், கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் உட்பட ஏனைய பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள், அங்கீகரிக்கப்பட்ட பிரசித்தமான வர்த்தக நிறுவனங்கள், அமைப்புகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| Item No. | பொருட்கள் வழங்குதல் | Non-Refundable Fee - Rs. |
|---|---|---|
| G - 1 | எல்லா வகையான காகிதாதிகள், ஆவணங்கள் மற்றும் அலுவலக கடிதங்கள் என்பவற்றிற்கு தேவையான பொருட்கள் கணனிகளுக்கான காகிதாதிகள், நிழற்பிரதி செய்யும் இயந்திரத்திற்கான மை, கொள்கலன்கள் (Cartridges), இலத்திரனியல் அச்சு இயந்திரத்திற்கான மை கொள்கலன்கள் (Toners), கணனி அச்சு இயந்திரத்துக்கான பட்டிகள் (Ribbons) மற்றும் ஏனைய தேவையான பொருட்கள் | 1,000.00 |
| G - 2 | மேசைகள், கதிரைகள், அலுமாரிகள் மற்றும் எல்லா வகையான அலுவலக தளபாடங்கள் (இரும்பு, மரம், பிளாஸ்டிக்) | 1,000.00 |
| G - 3 | அலுவலக கணனிகள், அச்சு இயந்திரங்கள் (Printers), பிரதிகளெடுக்கும் இயந்திரங்கள் (Duplication), நிழற்பிரதி செய்யும் இயந்திரங்கள் (Photocopiers), தொலைநகல் இயந்திரங்கள் (Fax) மற்றும் இயந்திரப்பாகங்கள் | 1,000.00 |
| G - 4 | காபட் விரிப்புக்கள் மற்றும் ரப்பர் விரிப்புக்கள் (Mats, Carpets and Doormats) | 1,000.00 |
| G - 5 | கட்டிடப் பொருட்கள் மற்றும் ஹாட்வெயார் பொருட்கள் (Building Materials such as Metal, Sand, Cement Bricks, Iron, Roofing Sheets, Wiring Wires and Accessories, Electric Bulbs, Parts for Plumbing, Wash Basins, Water Taps) | 1,000.00 |
| G - 6 | மெத்தைகள் (mattresses-Rubberiz Coir and Other) | 1,000.00 |
| G - 7 | மரப்பலகை மற்றும் ஒட்டுப்பலகை (Timber and Plywood) | 1,000.00 |
| G - 8 | பிளாஸ்டிக் மற்றும் அலுமினியப் பொருட்கள் (Plasticware, Aluminiumware) | 1,000.00 |
| G- 9 | ஆரோக்கிய நுகர்வுப் பொருட்கள் (Sanitary Goods such as Soap, Dish wash Liquid, Washing Powder, Toilet Cleaning Liquid, Methylated Spirits, Boxes of Matches, Blades, Batteries, Handwash and Other General Store Items and gabbage Bags) | 1,000.00 |
| G - 10 | வாகன பெற்றரிகள் (Supply of Batteries relevant items) | |
| G -11 | டயர்கள், டியூப்லெஸ் டயர்கள் (Supply of Tyre, Tubes and relevant items) | |
| G - 12 | வாகன உதிரிப்பாகங்கள் (Supply of vehicle spare parts) | |
| G - 13 | சீருடை துணிகள், ரெக்சின் மற்றும் நுளம்பு வலைகள் (Uniforms, Rexine, Mackintosh, Mosquito Nets) எல்லா வகையான துணிகள் திரைச் சீலைகள் (All Linos Aand curtain Material) | 1,000.00 |
| G - 14 | உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரைகள், பிளாஸ்டிக் பெயர் பலகைகள் (Rubber Stamps, Date Stamps, Plastic Name Boards and Departmental Identity Cards) | 1,000.00 |
| G - 15 | மருந்துகள் (Drugs and Consumable Items) | 1,000.00 |
| G - 16 | எல்லா வகையான சப்பாத்துக்கள் (Shoes and Surgical Shoes) | 1,000.00 |
| G - 17 | எரிவாயு மற்றும் வாயு அடுப்பு (Gas Cooker, Gas Burner Regulator, Burner Sparing, Cooking Gas Cylinders and Other Kitchen Equipment) | 1,000.00 |
| G - 18 | வைத்தியசாலை கட்டில்கள் மற்றும் உபகரணங்கள் (Hospital Beds, Lockers, Trolleys, Iv Stands and Similar Equipment for Wards) | 1,000.00 |
| G - 19 | குளிர்சாதனப் பெட்டி மற்றும் குளிரூட்டிகள், மற்றும் சலவை இயந்திரம் (Air Conditioners, Refrigerators & Washing Machines) | 1,000.00 |
| G - 20 | மின்சார உபகரணங்கள் (Electrical Goods such as Televisions, Electrical Fans, Electrical Kettles and Torches etc.) | 1,000.00 |
| G - 21 | சிற்றுண்டிச் சாப்பாடு வழங்குதல் (Supply of Food for Official Ceremonies - Short Eats, Tea, Lunch and Desserts, etc. on Buffet Basis and Boxes) | 1,000.00 |
| G - 22 | வைத்திய உபகரணங்கள் மற்றும் வைத்திய உபகரண நுகர்வு பொருட்கள் (Medical Equipment & Consumable Items) | 1,000.00 |
| G - 23 | எண்பு முறிவு வைத்திய உபகரணங்கள் (Orthopeadic Equipment & Consumable Items) | 1,000.00 |
| G - 24 | இரசாயன கூட இரசாயனப்பொருட்கள் (Laboratory Reagents) | 1,000.00 |
| G - 25 | குளிசைப் பக்கற்றுக்கள் (Drug Envelopes) | 1,000.00 |
| G -26 | எரிபொருள் (Fuel) | 1,000.00 |
| G -27 | எரிவாயு (Gas) | 1,000.00 |
| G -28 | ஏனையவைகள் (Other Items) | 1,000.00 |

| Item No. | பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் | Non-Refundable Fee - Rs. |
|---|---|---|
| S - 1 | தளபாடங்கள் திருத்துதல் (Weaving Chairs, Painting, Polishing, Varnishing, Repair work of Furniture) | 1500.00 |
| S - 2 | குளிர்சாதனப்பெட்டி மற்றும் குளிரூட்டி திருத்த வேலைகள் (Maintenance and Repairing of Air Conditioners, Refrigerator Coolers, Deepfreezers and Washing Machines) | 1500.00 |
| S - 3 | காரியாலய உபகரணங்கள் பராமரித்தலும் திருத்துதலும் (Repairs and Services of Computers, Fax Machines, Printers, Roneo Machines, Sewing Machines, Photocopiers and Televisions) | 1500.00 |
| S - 4 | மின் உபகரணங்கள் திருத்துதல் (Repairing of Electric Motors, Transformers, Generators and Electrical Equipment) | 1500.00 |
| S - 5 | எரிவாயு மற்றும் வாயு அடுப்பு பராமரித்தல் மற்றும் திருத்துதல் வேலை (Repairing of Gas Burners, Gas Cookers, etc.) | 1500.00 |
| S - 6 | அலுமினியப் பொருட்கள் பொருத்துதல் (Aluminium Fittings) | 1500.00 |
| S - 7 | வாகனம் சுத்தம் செய்தல் (Servicing of Vehicles) | 1500.00 |
| S - 8 | வாகனம் திருத்துதல் (Repairing of Vehicles) | 1500.00 |
| S - 9 | வைத்தியசாலை உபகரணங்கள் திருத்துதலும் பெயின்ட் பூசுதல் (Repairing, Painting and Polishing of Iron/ Metal Implement - Trolleys, Chairs, Beds, Screens) | 1500.00 |
| S - 10 | அச்சு வேலைகள் (Printing Works) | 1500.00 |
| S - 11 | வைத்தியசாலை கட்டிடங்கள் மற்றும் கழிவுத்தொகுதி பராமரித்தலும் திருத்துதல் வேலை (Repairing & Maintenance work of all Hospital Buildings, Sewerage and Drainage Systems) | 1500.00 |
| S - 12 | கட்டிட நிர்மாண வேலைகள் (Construction of Buildings) | 1500.00 |
| S - 13 | உள்ளக மின் இணைப்பு வேலைகள் (Internal Electrical Supply & Electrical Fixing Work) | 1500.00 |
| S - 14 | கணனி உள்ளக இணைப்பு வேலைகள் (Computer Networking Services) | 1500.00 |
| S - 15 | உரிமை கோராத பிரேதங்களை அகற்றுதல் (Removal of Unclaimed Bodies, Maternal Delivery Wastage and Operation Theater Wastages) | 1500.00 |
| S - 16 | CCTV கமரா திருத்துதல் மற்றும் பராமரிப்பு வேலை (CCTV Camera Repairs and Maintenance) | 1500.00 |
| S - 17 | மின்பிறப்பாக்கி திருத்துதல் மற்றும் பராமரித்தல் வேலை (Repairing & Maintenance of 05 Nos.gemerators Work) | 1500.00 |
| S - 18 | உள்ளக தொலைத்தொடர்பு சாதனங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல் வேலை (Annual service and maintenance of intercommunication System (PABX) | 1500.00 |

| Item No. | Purchases | Non-Refundable Fee - Rs. |
|---|---|---|
| P - 01 | வைத்தியசாலையிலிருந்து பாவனைக்குதவாதென ஒதுக்கப்பட்ட பொருட்களான கண்ணாடிகள், பிளாஸ்டிக் போத்தல்கள், சேலைன் போத்தல்கள், சிரட்டைகள், எக்ஸ்ரேபட அட்டைகள், படச்சுருள் கழுவும் தண்ணீர், பிளாஸ்டிக் மற்றும் மரத்துண்டுகளும் உபகரணங்களும் | 1,000.00 |

### ASHRAFF MEMORIAL HOSPITAL - KALMUNAI

**Application for Registration of Suppliers - 2024**

01. Name of the Applicant:- ..................................................
02. Name of Business and Address:- ..................................................
03. Date and Number of Business Registration:- ..................................................
(Should attach the Certified Business Registration Copy)
04. Telephone Number:- ..................................................
05. Fax Number ..................................................
06. Mobile Number:- ..................................................
07. Number of the Items: (Goods/ Services/Purchases) Registration is sought

| Registration No. | | | Deposit Slip/ Receipt No. |
|---|---|---|---|
| GOODS | SERVICE | PURCHASE | |
| G - | S - | P - | |

I hereby certify that I am bound by, under the rules and conditions when extending credit facilities, supplying goods and providing services to this Hospital.

Date:- ...................

..................................................
Managing Director

**நிபந்தனைகள்**

01. ஒவ்வொரு இனங்களின் சார்பாகவும் வெவ்வேறான மீளப் பெறப்படாத கட்டணத்தை கல்முனை அஷ்ர.:.ப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் நிதிப்பிரிவில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை அல்லது அஷ்ர.:.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை எனும் பெயரில் உள்ள 023100119025208 எனும் இலக்க மக்கள் வங்கிக் கணக்கில் வைப்பில் இடப்பட வேண்டும். வைப்பில் இடப்பட்ட பணத்திற்கான வைப்புச்சீட்டு விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். 15.12.2023 ஆந் திகதிவரை வார வேலை நாட்களில் மு.ப.9.30 மணி முதல் பி.ப.3.30 மணி வரை ஏற்புடைய விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்.
02. காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
03. முறைப்படி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதிகள் இணைப்பிரதிகள் எனக்குறிப்பிட்டு இரண்டு பிரதிகளை 15.12.2023ஆம் திகதி அல்லது அதற்கு முன்பு பெறக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பதுடன் அல்லது கல்முனை அஷ்ர.:.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை நிதிப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரில் வந்தும் இடலாம்.
04. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி **‘‘வைத்திய அத்தியட்சகர், அஷ்ர.:.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை கல்முனை’’** விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **‘‘வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024’’** எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
05. பொருட்கள், சேவைகள் வழங்கல்கள் வைத்தியசாலையால் குறிப்பிடப்படும் மாதிரிக்கமைவானதாகவும் தரமானதாகவும் இருக்க வேண்டும்.
06. சம்பந்தப்பட்ட நிறுவனம் செல்லுபடியான வியாபாரப் பதிவு பத்திர பிரதியினையும் இணைக்க வேண்டும்.
07. பொருட்கள், சேவைகள் விநியோகிக்கும் நிறுவனமானது ஏக விநியோகஸ்தர்களாக இருக்கும் பட்சத்தில் அதற்கான அங்கீகாரக் கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
08. பொருட்கள், சேவைகள் வேலைகளை வழங்கும் நிறுவனமானது குறித்த வேலையில் 2 வருட கால அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். வைத்திய உபகரணங்களின் 5 வருட கால அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.
09. உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட VAT பதிவுப் பத்திரப் பிரதி இணைக்கப்படல் வேண்டும். அன்றேல் VAT விதி விலக்கு சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்.
10. அனைத்து வழங்குநர்களும் 30 நாட்களுக்கான கடன் வசதியை வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
11. தேவை ஏற்படுமிடத்து பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களைத் தவிர வேறு தாபனத்திடமிருந்து பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரம் நிறுவனத் தலைவருக்கு உண்டு.
12. உடன்படிக்கைக்கமைவாக பொருட்கள் சேவைகளை வழங்கத் தவறிய நிறுவனங்கள் வழங்குநர்களுக்கான பதிவுப் பட்டியலிலிருந்து நீக்கப்படுவர்.
13. இது தொடர்பான மேலதிக விபரங்களை கல்முனை அஷ்ர.:.ப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் நிதிப்பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். **(067-2229496, 067-2223481)**
14. 15.12.2023 ஆம் திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**வைத்திய கலாநிதி ஏ.எல்.எப். றஹ்மான்**
**வைத்திய அத்தியட்சகர்,**
**அஷ்ர.:.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை, கல்முனை.**

## 2024 ஆண்டுக்கான வரவு – செலவு வரைவு முன்மொழிவு ஆவணம் பரிசீலனை செய்தல் லுணுகலை பிரதேச சபை

லுணுகலை பிரதேச சபையின் 2024 ஆண்டுக்கான வரவு - செலவு வரைவு பொது மக்கள் பரிசீலனை செய்வதற்காக லுணுகலை பிரதேச சபை பிரதான காரியாலயத்தில் 2023.11.06 ஆம் திகதி தொடக்கம் 2023.11.14 ஆம் திகதி வரை வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.

www.lunugala.ps.gov.lk இணையதளத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.

**சபை செயலாளர்**
**பிரதேச சபை - லுணுகலை**

## வில்கமுவ பிரதேச சபை

# 2024ம் ஆண்டிற்காக வழங்குநர்கள் மற்றும் தகைமையுள்ள கலைஞர்களைப் பதிவு செய்தல்

வில்கமுவ பிரதேச சபைக்குத் தேவையான கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக 2024ம் ஆண்டிற்கு வழங்குநர்களை பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் இவ் அறிவித்தல் பிரசுரமாகும் தினத்தில் இருந்து 2023.12.31 வரை ஏற்கப்படும்.

குறித்த விடயத்தின் பிரகாரம் பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் தம்மால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பத்தை பதிவுக் கட்டணத்திற்காக காசுக்கட்டளை அல்லது காசோலையுடன் செயலாளர், வில்கமுவ பிரதேச சபை, வில்கமுவ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டியதுடன், கையோடு கொண்டுவந்தும் ஒப்படைக்கலாம். விண்ணப்பங்களை உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் “ வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024” என்று குறிப்பிடுதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 066 - 2250075 தொ.பே. இலக்கத்தில் விசாரியுங்கள்.

**2023.11.07ம் திகதி**
**வில்கமுவ பிரதேச சபையில்**

**செயலாளர்,**
**வில்கமுவ பிரதேச சபை**

| தொடர் இல | வழங்குநர்கள் | பதிவுக் கட்டணம் ரூ. |
|---|---|---|
| 01 | கட்டிடப் பொருட்கள் (கருங்கல், மணல், சீமெந்து, செங்கல், நெலிந்த தகடு, சின்க் அலுமினியதகடு, அஸ்பெஸ்டஸ் சீட் வேறு நிர்மாணப் பொருட்கள்) | 1000.00 |
| 02 | சுகாதார உபகரணங்கள், குப்பை வண்டி, வில்பெரோ, சவல், மண்வெட்டி, முள்ளு, தாச்சி, கத்தி, தும்புத்தடி, விளக்குமாறு மற்றும் வேறு | 1000.00 |
| 03 | கணனி மற்றும் அச்சு இயந்திரம், போட்டோப் பிரதி இயந்திரம், சகல கணனி துணைப்பாகங்கள் வழங்குதல் | 1000.00 |
| 04 | மரத்தளபாடங்கள், பிளாஸ்டிக் மற்றும் உருக்கு உபகரணங்கள் வழங்குதல் | 1000.00 |
| 05 | அலுவலக உபகரணங்கள், விளையாட்டு மற்றும் பொருட்கள் சிறுவர் பூங்கா உபகரணங்கள் | 1000.00 |
| 06 | வீதி விளக்கு மற்றும் சகல வகையான மின் உபகரணங்கள் | 1000.00 |
| 07 | நீர் உபகரணங்கள் | 1000.00 |
| 08 | காகிதாதிகள் | 1000.00 |
| 09 | சகல வகையான அச்சு விடயங்கள் | 1000.00 |
| 10 | புளொக் , இறப்பர் சீல் போன்றன. | 1000.00 |
| 11 | பெயர் பலகை, இலக்கத்தகடு, பதாகை, நினைவுப்படிவம் (பித்தளை / கருங்கல்) | 1000.00 |
| 12 | பைசிக்கிள், வண்டி, வரிக்கட்டண இலக்கத் தகடு | 1000.00 |
| 13 | சீருடை தைத்தல் மற்றும் வேறு துணி வகைகள் | 1000.00 |
| 14 | டயர் மற்றும் டயர், டீயூப், இறப்பர் பொருட்கள், ரெயின்கோட் | 1000.00 |
| 15 | கம்பூட்ஸ், பாதணி, மற்றும் லெதர் பொருட்கள் | 1000.00 |
| 16 | நாமினிஒய தகனசாலைக்கு தேவையான காஸ் | 1000.00 |
| 17 | இருப்பு, உருக்கு, முருக்குக்கம்பி, ஜி.ஐபைப் போன்ற சகல உலோகப் பொருட்கள் | 1000.00 |
| 18 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் | 1000.00 |
| 19 | கொங்கிறீட் உற்பத்திகள் | 1000.00 |
| 20 | சிறுகற்கள் வழங்குதல் | 1000.00 |
| 21 | வாகன பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் (நிறுவனங்கள் மற்றும் கலைஞர்கள்) | 1000.00 |
| 22 | டயர் டீயூப் பழுதுபார்த்தல் டயர் பொருத்துதல், கழற்றுதல் (வொல்கனைசிங் போன்ற சேவை செய்யக்கூடிய நிறுவனங்கள்) | 1000.00 |
| 23 | ரோனியோ இயந்திர பழுதுபார்த்தல் நிறுவனங்கள் மற்றும் தகைமையுடைய தொழில்நுட்பக் கலைஞர்கள் | 1000.00 |
| 24 | போட்டோப் பிரதி இயந்திரம் பழுதுபார்த்தல் | 1000.00 |
| 25 | தச்சுத் தொழில் நிறுவனங்கள் மற்றும் பலகை ஆலை அனுபவம் உள்ள தச்சுக் கலைஞர்கள் | 1000.00 |
| 26 | உலோகப் பொருட்கள், உருக்கு பயன்படுத்தி பொறியியல் வேலைகள் செய்யக்கூடிய நிறுவனங்கள், தகைமையுள்ள கலைஞர்கள் | 1000.00 |
| 27 | கட்டிடமின் அமைப்பு வழங்குதல் தகைமையுள்ள கலைஞர்கள் | 1000.00 |
| 28 | வெல்டின் தொழில்நுட்ப, நிறுவனங்கள் மற்றும் அவ்வாறான கலைஞர்கள் | 1000.00 |
| 29 | கணனி பழுதுபார்த்தல் மற்றும் சேவை நிறுவனங்கள் மற்றும் அவ் அனுபவமுள்ள தகைமையான கலைஞர்கள் | 1000.00 |
| 30 | டயர் மீள் நிரப்பும் நிறுவனங்கள் | 1000.00 |
| 31 | கனரக வாகனம் வழங்குதல் (பெக்கோ இயந்திரம், புல்டோசர், மோட்டார் கிரேடர் இயந்திரம்) | 1000.00 |
| 32 | தகனசாலை பற்றிய விடயங்களை மேற்கொள்ளக்கூடிய நிறுவனங்கள் மற்றும் அனுபவமுள்ள, தகைமையான கலைஞர்கள் | 1000.00 |
| 33 | காணி அளவையிடல் பற்றிய தகைமையுள்ள கலைஞர்கள் | 1000.00 |
| 34 | நீர்மோட்டர் பழுதுபார்த்தல் நிறுவனங்கள் மற்றும் தகைமையுள்ள கலைஞர்கள் | 1000.00 |
| 35 | மதிப்பிடப்பட்ட மாதிரிகளுக்கு அமைவான நிர்மாணம் மற்றும் சேவை வழங்கக் கூடிய தகைமையுள்ள கலைஞர்கள் | 1000.00 |
| 36 | ஒலி பெருக்கி இயந்திரம், மின்பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் தொடர்பாடல் உபகரணங்கள் வழங்குதல் | 1000.00 |
| 37 | வாடகை அடிப்படையில் வாகனங்கள் (வேன், முச்சக்கரவண்டி, கெப், லொறி போன்றன) | 1000.00 |
| 38 | மேசன்மார், பயிற்சி பெற்ற, பயிற்சி பெறாத தொழிலாளர்கள் | 1000.00 |
| 39 | உணவு பானங்கள் மற்றும் உபசரணை சேவை வழங்குநர்கள் | 1000.00 |
| 40 | நீர்க்குழாய் மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல் | 1000.00 |

The Housewives’ companion
Classifieds on
Daily News

Daily News Classifieds, the Housewives’ companion

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 நவம்பர் மாதம் 10ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# தொழில் திணைக்களம்

## 1942ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்திற்கமைய தொழிற்சாலைகளைப் பதிவு செய்தல்

- 1942ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அனைத்து தொழிற்சாலைகளும் கட்டாயமாகப் பதிவு செய்தல் அவசியமாகும்.
- அதற்கமைய தங்கள் தொழிற்சாலையையும் அப்பிரதேசத்திற்குரிய மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகத்தில் தாமதிக்காது பதிவு செய்து கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.
- இதற்குரிய விண்ணப்பப்படிவத்தை தொழில் திணைக்களத்திற்குரிய www. labourdept.gov.lk எனும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்.

**தொழில் ஆணையாளர் நாயகம்,**
**தொழில் திணைக்களம்**

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.09.12 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு B.B. ரணசிங்க அத்தாட்சிப்படுத்திய 2009.01.22ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 5880, பிரசித்த நொத்தாரிசு B.B. ரணசிங்க அத்தாட்சிப்படுத்திய 2010.11.22ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 6222, பிரசித்த நொத்தாரிசு S.T. பெரேரா அத்தாட்சிப்படுத்திய 2014.09.04ஆம் திகதிய ஈட்டுமுறி இல.1428, பிரசித்த நொத்தாரிசு D. வீரசூரிய அத்தாட்சிப்படுத்திய 2017.05.18ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 3391 என்பவற்றின் பேரில் இல. 104, எல்லீ ஹவுஸ் வீதி, கொழும்பு 15 என்ற முகவரியிலுள்ள M/S ஷலோம் என்ரபிறைசஸ் என்ற பெயரிலான நிறுவனத்தின் பங்காளர்களான திரு. யேசு சேவியர் ஸ்பெல்மன் பெனான்டோ, திருவாட்டி. அந்தோனி ஷெல்மா பெனான்டோ ஆகியோர் பெற்றுக்கொண்ட 9,000,000.00 ரூபாயிலான (ஒன்பது மில்லியன் ரூபாய்) தவணைக்கடன், 20,807,170.86 ரூபாயிலான (இருபது மில்லியன் எண்ணூற்று ஏழாயிரத்து நூற்று எழுபது ரூபாய் எண்பத்தாறு சதம்) மறுசீரமைப்புக் கடன் A, ரூ.1,200,000.00 (ஒரு மில்லியன் இருநூறாயிரம் ரூபாய்), ரூ. 600,000.00 (அறுநூறாயிரம் ரூபாய்) ரூ. 1,150,000.00 (ஒரு மில்லியன் நூற்றியைம்பதாயிரம் ரூபாய்). ரூ. 360,000.00 (முந்நூற்றறுபதாயிரம் ரூபாய்), ரூ. 720,000.00 (எழுநூற்று இருபதாயிரம் ரூபாய்) 4,947,000.00 (நான்கு மில்லியன் தொள்ளாயிரத்து நாற்பத்தேழாயிரம் ரூபாய்) முதலான தொகைகளிலான தொடர் கடன்கள் (ரூ. 9,000,000.00 (ஒன்பது மில்லியன் ரூபாய்) என்ற கடன் வரம்புக்குள் வழங்கப்பட்ட (துணைக்கடன்கள்) - சுழற்சிமுறையிலான கடன் வசதி) என்பவற்றின் மீது 2023.08.14 வரையான வட்டியும் முதலுமாக முறையே ரூ. 14,386,297.81 (பதினான்கு மில்லியன் முந்நூற்று எண்பத்தாறாயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றேழு ரூபாய் எண்பத்தொரு சதம்), ரூ. 33,490,770.71 (முப்பத்துமூன்று மில்லியன் நானூற்றுத் தொண்ணூறாயிரத்து எழுநூற்று எழுபது ரூபாய் எழுபத்தொரு சதம்), ரூ. 16,238,273.35 (பதினாறு மில்லியன் இருநூற்று முப்பத்தெட்டாயிரத்து இருநூற்று எழுபத்து மூன்று ரூபாய் முப்பத்தைந்து சதம்) போன்ற தொகைகளும் அத்துடன் 9,000,000.00 ரூபாயிலான (ஒன்பது மில்லியன் ரூபாய் ) தவணைக்கடனின் முதல் நிலுவை மீது ஆண்டுக்கு AWPLR +4% (நான்கு) வீதப்படியும் 20,807,170.86 ரூபாயிலான (இருபது மில்லியன் எண்ணூற்று ஏழாயிரத்து நூற்று எழுபது ரூபாய் எண்பத்தாறு சதம்) மறுசீரமைப்புக் கடன் Aஇன் முதல் நிலுவை மீது ஆண்டுக்கு பதினெட்டு (18%) வீதப்படியும் ரூ. 1,200,000.00 (ஒரு மில்லியன் இருநூறாயிரம் ரூபாய்), ரூ. 600,000.00 (அறுநூறாயிரம் ரூபாய்), ரூ. 1,150,000.00 (ஒரு மில்லியன் நூற்றியைம்பதாயிரம் ரூபாய்), ரூ. 360,000.00 (முந்நூற்றறுபதாயிரம் ரூபாய்), ரூ. 720,000.00 (எழுநூற்று இருபதாயிரம் ரூபாய்), 4,947,000.00 (நான்கு மில்லியன் தொள்ளாயிரத்து நாற்பத்தேழாயிரம் ரூபாய்) முதலான தொகைகளிலான (9,000,000.00 (ஒன்பது மில்லியன் ரூபாய்) என்ற கடன் வரம்புக்குள் வழங்கப்பட்ட துணைக்கடன்கள்) சுழற்சிமுறையிலான கடன் வசதி) தொடர் கடன்களின் முதல் நிலுவை மீது ஆண்டுக்கு முப்பத்துமூன்று தசம் இரண்டு ஐந்து (33.25%) வீதப்படியும் 2023.08.15ஆம் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை திரட்டப்படவேண்டிய மேலதிக வட்டியும் வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. மேற்குறித்த ஈட்டுமுறி இலக்கங்கள் 5880, 6222, 1428, 3391, 3785 என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட மேற்குறித்த கடன்கள் மீதான 64,115,341.87 ரூபாயையும் (அறுபத்து நான்கு மில்லியன் நூற்றுப் பதினையாயிரத்து முந்நூற்று நாற்பத்தொரு ரூபாய் எண்பத்தேழு சதம்) 2023.08.15ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்ற முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. MHT கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி புறக்கோட்டைக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணை

இல. 104, எல்லீ ஹவுஸ் வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் R.F குணசேகர தயாரித்த 1947.10.31ஆம் திகதிய 2625B[1] என்ற இலக்கத்தையுடைய வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு B1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளுக்குட்பட்ட லுணுபொக்குண கிராம சேவகர் பிரிவின் ஐந்தாம் வட்டாரத்திலுள்ள (லுணுபொக்குண, முகத்துவாரம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. வடகிழக்கில் 108ஆம் இலக்க காணி மற்றும் கட்டடத்தையும் தென்கிழக்கில் இல. 102/1 - 7 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட காணித்துண்டு B2ஐயும் தென்மேற்கில் 3 அடிகள் அகலங்கொண்ட ஒற்றையடிப் பாதையையும் வடமேற்கில் எல்லீ ஹவுஸ் வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 2625B' என்ற இலக்கத்தையுடைய வரைபடத்தின்படி பதினாறு மற்றும் நூறின் மேல் நாற்பத்தெட்டு பேர்ச்சுகள் (AO.R0.P16, 48/100) பரப்பளவையும் அதில் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளதோடு கொழும்புக் காணிப்பதிவகத்தில் D 94/74 எனும் இலக்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த காணியானது உரிமம் பெற்ற நில அளவையாளர் S. ஜெகதீசன் தயாரித்த 1968.04.28ஆம் திகதிய 674ஆம் இலக்க வரைபடத்திலும் உரிமம் பெற்ற நில அளவையாளர் W.J.M.G. டயஸ் தயாரித்த 1984.07.20ஆம் திகதிய 509/84 என்ற இலக்கத்தையுடைய வரைபடத்திலும் கீழ்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

509/84 என்ற இலக்கத்தையுடைய வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள இல. 104, என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட காணித்துண்டு மேற்குறிப்பிடப்பட்டவாறு முகத்துவாரம் எல்லீ ஹவுஸ் வீதியில் அமைந்துள்ளது. வடகிழக்கில் ஒழுங்கையையும் தென்கிழக்கில் G 102/1, எல்லீ ஹவுஸ் வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனையையும் தென்மேற்கில் 3 அடிகள் அகலங்கொண்ட ஒற்றையடிப் பாதையையும் வடமேற்கில் எல்லீ ஹவுஸ் வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 509/84 என்ற இலக்கத்தையுடைய வரைபடத்தின்படி பதினாறு தசம் நாற்பது பேர்ச்சுகள் (AO. RO.P16.40) பரப்பளவையும் அதில் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளது.

குறித்த காணியானது உரிமம் பெற்ற நில அளவையாளர் H. அனில் பீரிஸ் தயாரித்த 1984.10.31ஆம் திகதிய 3450ஆம் இலக்க மீளளவை வரைபடத்தில் கீழ்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

3450 என்ற இலக்கத்தையுடைய வரைபடத்தில் காணித்துண்டு 3A என விபரிக்கப்பட்டுள்ள இல. 104 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்டுள்ள காணி மேற்குறித்தவாறு முகத்துவாரம் எல்லீ ஹவுஸ் வீதியில் அமைந்துள்ளது. வடக்கில் எல்லீ ஹவுஸ் வீதியையும் கிழக்கில் ஒற்றையடிப் பாதையையும் தெற்கில் காணித்துண்டு 3Bஐயும் மேற்கில் ஒற்றையடிப் பாதையையும் (3443ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 2) எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 3450ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினாறு தசம் நாற்பது பேர்ச்சுகள் (A0.RO.P16.40) பரப்பளவையும் அதில் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளது.

307/2004ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு A என விபரிக்கப்பட்டுள்ள இல. 104 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்டுள்ள காணி மேற்குறித்தவாறு முகத்துவாரம் எல்லீ ஹவுஸ் வீதியில் அமைந்துள்ளது. வடக்கில் எல்லீ ஹவுஸ் வீதி, ஒழுங்கை என்பவற்றையும் கிழக்கில் G 102/1 எல்லீ ஹவுஸ் வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனை, ஒழுங்கை என்பவற்றையும் தெற்கில் ஒற்றையடிப் பாதை, G 102/1, எல்லீ ஹவுஸ் வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனை என்பவற்றையும் மேற்கில் ஒற்றையடிப் பாதை, எல்லீ ஹவுஸ் வீதி என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 3450ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினாறு தசம் நாற்பது பேர்ச்சுகள் (A0.RO.P16.40) பரப்பளவையும் அதில் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளது.

**இலங்கை வங்கி புறக்கோட்டைக் கிளை**
**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**
**R.M.D. ரத்நாயக்க**
**சிரேஷ்ட முகாமையாளர் (அறவிடல்)**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும் தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1. இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



## பொது அறிவித்தல்

இந்தியா - zipcode: 628001 india - தமிழ்நாடு, தூத்துக்குடி, காமராஜ் நகர், பாளை வீதி வடக்கு, 26C/1H என்ற முகவரியை சேர்ந்தவரும் W9603337 என்ற கடவுச்சீட்டு இலக்கத்தைக் கொண்டவரும் தற்போது இலங்கை, வத்தளை, ஹெந்தளை, கொஸ்பட்டதெனிய வீதி 7/1/1 என்ற இலக்கத்திலுள்ள யேசு ராஜன் நிர்மல் தினகரன் என்பவர் EESAN GLOBALS (PVT) LTD என்ற வியாபாரம் மற்றும் தாபனத்துடன் 2023.11.01 ஆம் திகதியிலிருந்து இணைந்திருக்கவில்லையென பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இதுமுதற்கொண்டு மேலேயுள்ள நபரினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கையாளுதல்கள் மற்றும்/ அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கு எமது நிறுவனமானது பொறுப்பாகவோ அல்லது கடப்பாட்டையுடையதாகவோ இருக்க மாட்டாதென தயவு செய்து அறிந்து கொள்ளவும்.

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.10.18 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு டீ.என். குமாரசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2018.02.09 திகதியிட்ட ஈட்டு முறி இல. 549 இன் பேரில் தலவத்துகொட, ஹோகந்தர றோட், சிறிபுர, இல. 21 என்னும் முகவரியில் அமைந்த றிரெண்டி இம்போர்ட்ஸ் (பிரைவேற்) லிமிடெற்றிடமிருந்து (பணிப்பாளர்: மாவரல, கோமில, எரல்லவல, வட்டவலகாவ, இல. 55/1c என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. சுத்தச்சாரிகே ஹாஷ நிரோஷன் பிரேமரத்ன என யாவரும் அறிந்த சுத்தச்சாரிகே பிரேமரத்ன) தவணைக் கடன் மீது 2023.09.06 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 28,882,496.44 (இருபத்தெட்டு மில்லியன் எண்ணூற்று எண்பத்திரெண்டு ஆயிரத்து நானூற்று தொண்ணூற்றாறு ரூபாய் நாற்பத்து நான்கு சதம்) அத்துடன் ரூ. 15,333,338.00 (பதினைந்து மில்லியன் முந்நூற்று முப்பத்து மூன்று ஆயிரத்து முந்நூற்று முப்பத்தெட்டு ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்தேழு தசம் ஏழு ஐந்து (27.75%) வீதத்தில் **2023.09.07** தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், மற்றும் நிரந்தர மேலதிகப் பற்று வசதி மீது 2023.09.06 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 15,116,986.30 (பதினைந்து மில்லியன் நூற்றுப் பதினாறு ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தாறு ரூபாய் முப்பது சதமும்) அத்துடன் ரூ. 10,000,000.00 (பத்து மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்தெட்டு தசம் ஏழு ஐந்து (28.75%) வீதத்தில் **2023.09.07** தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. மேற்குறிப்பிட்ட 2018.02.09 திகதியிட்ட ஈட்டு முறி இல. 549 இன் பேரில் தவணைக் கடன் மீது ரூ. 28,882,496.44 (இருபத்தெட்டு மில்லியன் எண்ணூற்று எண்பத்திரெண்டு ஆயிரத்து நானூற்று தொண்ணூற்றாறு ரூபாய் நாற்பத்து நான்கு சதம்) மற்றும் நிரந்தர மேலதிகப் பற்று வசதி மீது ரூ. 15,116,986.30 (பதினைந்து மில்லியன் நூற்றுப் பதினாறு ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தாறு ரூபாய் முப்பது சதமும்) அத்துடன் 2023.09.07 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T.&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகமுவே துசித் கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி நுகேகொடை மேற்தரக் கிளை பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை.

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோரளை பல்லே பற்றுவில் மகரகம பிரதேச செயலகப் பிரிவில் மகரகம பட்டின சபை எல்லைகளுள் தலவத்துகொட மேற்கு . 493/ஏ இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் தலவத்துகொடயில் அமைந்த வலி றோட் வரி மதிப்பு இல. 24/19 ஐக் கொண்ட "அம்பகஹவத்த அல்லது பட்டதொம்பகஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி.கே.எஸ். பமுனுசிங்ஹ தயாரித்த 2016 ஜனவரி 18 திகதியிட்ட வரைபடம் இல. 3375 இல் விபரித்த காணித்துண்டு A1 A என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, அதாவது மேற்கூறிய காணித்துண்டு A1A , வடக்கில் நந்தலால் பெரேரா, பி.ஓ.ஆர். தர்மநெத் மற்றும் பாலித்த ஆகியோர் உரிமை கோரும் காணிகளும், கிழக்கில் பாலித்த உரிமை கோரும் காணியும், (15 அடி அகலப்) பாதையும், தீபலதா பெரேரா உரிமை கோரும் காணியும், தெற்கில் (15 அடி அகலப்) பாதையும், தீபலதா பெரேரா மற்றும் அடிலின் உரிமை கோரும் காணிகளும, மேற்கில் அடிலின் நந்தலால் பெரேரா மற்றும் பி.ஓ. ஆர். தர்மநெத் உரிமை கோரும் காணிகளும் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 3375இன் பிரகாரம் இருபத்திரெண்டு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.22) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடங்கள், மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி ஹோமாகம காணிப்பதிவகத்தில் C262/109 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆத்துடன் மேற்கூறிய வரைபடம் இல. 3375 இல் காட்டப்பட்ட மேற்குறிப்பிட்ட விபரித்த காணித்துண்டின் தெற்கு எல்லைப் பகுதியில் ஆரம்பிக்கும் (15 அடி அகலம்) பாதை மீதான வழி உரிமையும் ஆகும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**திருமதி. ஐ.றீ.எல். கீகனகே**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**பாராளுமன்றக் கட்டிடத்தொகுதிக்கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும் தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1. இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

The Housewives' companion
Classifieds on
Daily News

## புத்தளம் நகர சபை
## கேள்விமனு கோரப்படல்

புத்தளம் நகர சபையினால் நிர்மாணிக்கப்படவுள்ள நவீன வசதிகளுடனான கழிவறையை (Convenience Center) நிர்மாணிப்பதற்கு புத்தளம் நகரசபையின் குத்தகைக் குழுவின் தலைவரினால் புத்தளம் நகரசபை அதிகார எல்லைக்குள் பொருத்தமான, தகுதி வாய்ந்த கேள்விமனுதாரர்களிடமிருந்து கேள்விமனு கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 01 | கேள்விமனு அழைப்பின் இலக்கம் மற்றும் பொருட்களின் விபரம் | UCP/CF/CC/09/11/23 நவீன வசதிகளுடனான கழிவறையின் (Convenience Center) நிர்மாணத்திட்டம் - புத்தளம் நகரசபை |
| 02 | கேள்விமனு பெற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | 2023.11.23 ஆந் திகதி மு.ப.10.00 மணிக்கு |
| 03 | கேள்விமனு அழைப்புக்களின் பட்டியல் பெற்றுக் கொள்ள வேண்டிய இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் | புத்தளம் நகர சபை, புத்தளம். தொ.இல. – 032 2265275 |
| 04 | மீள் செலுத்தப்படாத கட்டணம் / விண்ணப்பக் கட்டணம் | ரூபா.5500.00 |
| 05 | கேள்விமனு பாதுகாப்பின் பெறுமதி | ரூபா. 200,000.00 |
| 06 | சீடா தரம் | C6 |
| 07 | நிர்மாணிக்கப்படவுள்ள காலம் | 100 நாட்கள் |
| 08 | நிதி வழங்கும் முறை | நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு |
| 09 | கேள்விமனுக்களை பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக கையளிக்க வேண்டும் | செயலாளர், புத்தளம் நகரசபை, புத்தளம். |
| 10 | செலவு மதிப்பீடு ரூபா | 20 மில்லியன் ரூபா |
| 11 | முன் கூட்டிய கேள்விமனுக்கூட்டம் நடைபெற உள்ள திகதி மற்றும் நேரம் | 2023.11.16 ஆந் திகதி மு.ப.10.00 ற்கு |

01) கேள்விமனுதாரர்கள், கேள்விமனு விண்ணப்பப்படிவங்களை 5500.00 ரூபாவை செலுத்தி, இறுதி திகதியான 2023.11.23 ஆந் திகதிக்கு முந்தைய நாள் வரை அலுவலக நேரத்தில் (மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப.3.00 மணி வரை) புத்தளம் நகரசபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

02) சரியான முறையில் நிரப்பப்பட்டுள்ள கேள்விமனுக்களை மேற்குறிப்பிட்ட அட்டவணையில் 9 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவு தபாலில் அல்லது செயலாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் போடவேண்டும். கேள்விமனுக்களை மேற்குறிப்பிட்ட அட்டவணையில் 02 வது பகுதியில் உள்ளவாறு குறித்த, தினத்தில் குறித்த நேரத்தில் கேள்விமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமுள்ளவர்களின் முன்னிலையில் கேள்விமனுத்திறப்பு மேற்கொள்ளப்படும். தாமதமாக கிடைக்கப்படும் கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**குத்தகைக் குழு,**
**புத்தளம் நகரசபை.**

## எகலியகொடை பிரதேச சபை
### 2024 ஆம் ஆண்டிற்கான வழங்கற்காரர்களை பதிவு செய்தல்

எகலியகொடை பிரதேச சபைக்காக 2024 ஆம் ஆண்டிற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதல் தொடர்பாக பதிவு மேற்கொள்வதற்கு விருப்பமுள்ள பதியப்பட்ட வழங்கற்காரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படும். (விண்ணப்பப்படிவத்தின் மாதிரி தரப்பட்டுள்ளது)

அ) பொருட்கள்

1) அலுவலக காகிதாகிகள் (கணினி காகிதாகிகள் உட்பட)
2) அலுவலக உபகரணங்கள்
 1. மர உபகரணங்கள் மற்றும் மரத் தளபாடங்கள்
 2. கணினிகள், பெக்ஸ் மற்றும் போட்டோகொப்பி உபகரணங்கள்
 3. குளிரூட்டிகள்
 4. தீயணைப்பு உபகரணங்கள்
3) கணினி மென்பொருட்கள் மற்றும் ஏனைய கணினி உதிரிப்பாகங்கள்
4) இணைய பக்கங்கள் நிர்மாணம், கணினி வலையமைப்பு
5) சீறுடைகளுக்கான துணி வகைகள்
6) மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (பற்றறிகள், டயர், டியுப் உட்பட)
7) சுகாதார நடவடிக்கைகளுக்கு தேவையான
 1. கிருமிநாசினிகள் மற்றும் சலவைப் பொருட்கள்
 2. விளக்குமாறு, தும்புத்தடி, ரேக்கை, வாளி, போன்ற உபகரணங்கள்
8) வீதி மின்விளக்கு உபகரணங்கள்
9) விளையாட்டு உபகரணங்கள்
10) கம் பூட்ஸ், லெதர் பைகள், மழை மேலுறைகள்
11) நிர்மாணப் பொருட்கள்
 1. கல், மணல், மண் போன்றவை
 2. முன்கட்டுமான கொன்கிறீட் உற்பத்திகள் (வடிகால் குழாய்கள், கொன்கிறீட் பெட்டி கற்கள்)
 3. அனைத்து ஹாட்வெயார் பொருட்கள்

ஆ) சேவைகள்

1. அனைத்து அச்சு சேவைகள் (புத்தகம் கட்டுதல் உட்பட)
2. எழுது கருவி, கணினி, பெக்ஸ், போட்டோகொப்பி இயந்திரங்கள் பழுதுபார்த்தல் மற்றும் சேவைகள் ஆற்றல்
3. 1. ஆனைத்து வாகனங்களையும் சர்விஸ் செய்தல்
 2. வாகனங்கள் பழுதுபார்தல்
4. வாகனங்கள் வாடகைக்கு விடல் (முச்சக்கரவண்டி, வேன், டிபர், டிறக்டர், பெகோ போன்றவை)
5. குளிரூட்டிகள் பழுதுபார்த்தல்கள் மற்றும் சர்விஸ் செய்தல்
6. பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடல்

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**2024 ஆம் ஆண்டிற்கான வழங்கற்காரர்களை பதிவு செய்தல் தொடர்பான விண்ணப்பப்படிவம்**

1) வியாபாரத்தின் பெயர் விலாசம் : ..........
2) பதிவிலக்கம் மற்றும் திகதி : ..........
3) பதிவு எதிர்பார்க்கும் விடயம் : ..........
4) தொலைபேசி பெக்ஸ் இலக்கம் : ..........
5) வங்கி பெயர் பதிவிலக்கம் : ..........
6) இந்த நிறுவனத்திற்கு வழங்க முடிந்த கடன் தொகை : ..........
 கால எல்லை : .......... தொகை : ..........
7) 2023 ஆண்டிற்காக பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கிய நிறுவனங்களின் பட்டியல் :
 ..........
 ..........
 ..........
 ..........
8) பதிவுக் கட்டணம் செலுத்துவது காசு மூலமா காசோலை மூலமா (காசோலை மூலம் என்றால் காசோலை இலக்கம் மற்றும் திகதி குறிப்பிடவும்)

.......... ..........
திகதி கையொப்பம் (முத்திரை உடன்)

01) மேலே மாதிரிக்கு அமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் ஒன்றை 2023.12.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதத்தில் பதிவுத் தபாலில் அல்லது கையில் கொண்டுவந்து ஒப்படைக்க முடியும்.

02) பதிவு ஒரு பொருளுக்காக ரூபா. 3000.00 அடிப்படை கட்டணம் காசேலை மூலம் அல்லது வந்து காசு மூலம் செலுத்த முடியும். காசோலை அனுப்பும் போது "தலைவர், எகலியகொடை பிரதேச சபை" என்று எழுதி காசோலை அனுப்ப வேண்டும்.

03) தபால் மூலம் அனுப்பப்படும் அனைத்து விண்ணப்பங்களும் அனுப்பப்படும் உறையின் மேல் இடது மூலையில் "வழங்கற்காரர்களை பதிவு செய்தல்- 2024" என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

04) கோரப்படும் போது விலைகள் முன்வைக்காது பொருட்கள் ஆடர் செய்த பின் குறித்த முறையில் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்கு தவறும் வழங்கற்காரர்கள் பதிவு ஏட்டில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

05) பதியப்பட்ட வழங்கற்காரர்கள் யாரிடமிருந்தும் தேவையான அளவுகளில் கேள்விமனுக்கள் கோரப்படும் போது தேவைக்கு ஏற்ப வேறு வெளி வழங்கற்காரர் ஒருவரிடமிருந்து கேள்விமனு கோருவதற்கும் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்வதற்கும் உரிமை எகலியகொட பிரதேச சபைக்கு உண்டு.

எகலியகொட பிரதேச சபையில் பதிவதற்கு எதிர்பார்க்கும் வழங்கற்காரர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள்

1. கூட்டுத்தாபனம் என்றால் கூட்டுத்தாபனம் என்று சட்டமாக்கப்பட்டுள்ளது என்ற சான்றிதழ்
2. தனி வியாபாரம் என்றால் பதிவுச் சான்றிதழ்
3. கம்பனி என்றால் கம்பனி சட்டத்திற்கு அமைய பதிவுச் சான்றிதழ்
4. இதற்கு முன் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கிய அரச நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள், உறுதிப்படுத்துவதற்கு உரிய ஆவணங்கள் முன்வைக்கப்படல் வேண்டும்
5. வேறு விசேட தகுதிகள் இருப்பின் குறிப்பிடுக.

**செயலாளர் மற்றும் அதிகாரங்கள் செயற்பாடுகள் செயல்படுத்துகின்ற அதிகாரி**
**எகலியகொட பிரதேச சபை**
**தொ.இல.: 036-2258012 / 14**

## வத்தளை மாபோல நகர சபை

# பெறுகை அறிவித்தல்

வத்தளை மாபோல நகர சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் கடை அறையை வியாபாரத்திற்காக குத்தகைக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 2023.11.10 முதல் 2023.12.01 மு.ப.10.00 வரை என்னால் ஏற்கப்படும். கேள்விகள் திறத்தல் 2023.12.01 முதல் மு.ப. 10.00 இற்கு நகரசபை கூட்ட மண்டபத்தில் நடைபெறும்.

கேள்வி விண்ணப்பங்களை கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் மீளளிக்கப்படாத கேள்விப் பிணைத்தொகை மற்றும் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணத்துடன் அரச வரித்தொகையை செலுத்திய பின்னர் 2023.11.30 பி.ப.3.00 வரை நகரசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் "நகரசபை" யின் செயலாளர் மற்றும் சபையின் அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி, வத்தளை மாபோல நகரசபை, வத்தளை" எனக் குறிப்பிட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென இரு பிரதிகளுடன் பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து குறித்த தினம் குறித்த நேரத்திற்கு முன்பு இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

கேள்வி பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் சமர்ப்பிக்கப்படும் கேள்வியை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

எந்த கேள்வியையும் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை வத்தளை மாபோல நகர சபைக்கு உரியது.

**தொடர்புகள் : தொ.பே.இல - 011 - 2932710**

**பீ.ஏ.எஸ்.எஸ். சந்தருவன்**
**நகர சபையின் செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம்,**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**

| தொடர் இல | கடை அறை அமைந்துள்ள இடம் | மாதாந்த குறைந்த கேள்வி | கேள்வி வைப்புத் தொகை மீளளிக்கப் படும் ரூ. | கேள்விப் படிவக் கட்டணம் மீளளிக்கப் படாத ரூ. | காலம் |
|---|---|---|---|---|---|
| | ஹெந்தளை வர்த்தக கட்டிடத்தொகுதி | | | | |
| 01 | மாட்டிறைச்சி கடை அறை இல - 01 | 60,000.00 | 54,000.00 | 5,000.00 | 2024.01.01 – 2026.12.31 |
| 02 | மீன் கடை அறை இல - 02 | 20,000.00 | 18,000.00 | 5,000.00 | 2024.01.01 – 2026.12.31 |
| 03 | கோழியிறைச்சி கடை அறை இல - 03 | 44,000.00 | 39,600.00 | 5,000.00 | 2024.01.01 – 2026.12.31 |
| 04 | பன்றியிறைச்சி கூடம் | 10,250.00 | 9,225.00 | 5,000.00 | 2024.01.01 – 2026.12.31 |
| | மாபோல வர்த்தக கட்டிடத்தொகுதி | | | | |
| 05 | மாட்டிறைச்சி கடை அறை இல - 01 | 70,500.00 | 63,450.00 | 5,000.00 | 2024.01.01 – 2026.12.31 |
| 06 | மாட்டிறைச்சி கடை அறை இல - 02 | 74,000.00 | 66,600.00 | 5,000.00 | 2024.01.01 – 2026.12.31 |
| 07 | மீன் கடை அறை இல - 04 | 37,100.00 | 33,390.00 | 5,000.00 | 2024.01.01 – 2026.12.31 |
| 08 | மரக்கறி கடை அறை இல - 05 | 13,000.00 | 11,700.00 | 5,000.00 | 2024.01.01 – 2026.12.31 |
| | வத்தளை வர்த்தக கட்டிடத்தொகுதி | | | | |
| 09 | மாட்டிறைச்சி கடை அறை இல - 01 | 120,000.00 | 108,000.00 | 5,000.00 | 2024.01.01 – 2026.12.31 |
| 10 | கோழியிறைச்சி கடை அறை இல - 02 | 14,400.00 | 12,960.00 | 5,000.00 | 2024.01.01 – 2026.12.31 |
| | ❇ இல 01 முதல் 10 வரையான கடை அறைகளுக்கான மாதாந்த வாடகை தொகையில் 10% வருடாந்தம் அதிகரிக்கப்படும்<br>❇ இல.04 மற்றும் இல 07 இல் குறிப்பிடப்படும் கடை அறைகளுக்கு அரச புதிய மதிப்பீடு கிடைத்த பின்னர் அந்த அரச மதிப்பீட்டு வாடகை தொகை செலுத்துவதற்கு உட்படும் | | | | |
| | ஹெந்தளை வர்த்தக கட்டிடத்தொகுதி | | | | |
| 11 | மலசலகூட அமைப்பு | 2,000.00 | 1,800.00 | 1,000.00 | 2024.01.01 – 2024.12.31 |
| 12 | இல 41 A கடை அறை | 3,200.00 | 2,880.00 | 5,000.00 | 2024.01.01 – 2038.12.31 (அதாவது 2024.01.01 முதல் 15 வருடங்களுக்கு ) |
| 13 | இல 49 கடை அறை | 2,500.00 | 2,250.00 | 5,000.00 | 2024.01.01 – 2038.12.31 (அதாவது 2024.01.01 முதல் 15 வருடங்களுக்கு ) |
| 14 | இல 54 கடை அறை | 2000.00 | 1,800.00 | 5,000.00 | 2024.01.01 – 2038.12.31 (அதாவது 2024.01.01 முதல் 15 வருடங்களுக்கு ) |
| | மாபோல வர்த்தக கட்டிடத்தொகுதி | | | | |
| 15 | இல 06 கடை அறை | 8,900.00 | 8,010.00 | 5,000.00 | 2024.01.01 – 2038.12.31 (அதாவது 2024.01.01 முதல் 15 வருடங்களுக்கு ) |
| 16 | இல 11 கடை அறை | 10,200.00 | 9,180.00 | 5,000.00 | 2024.02.01 – 2039.01.31 (அதாவது 2024.02.01 முதல் 15 வருடங்களுக்கு ) |
| 17 | இல 12 கடை அறை | 10,200.00 | 9,180.00 | 5,000.00 | 2024.02.01 – 2039.01.31 (அதாவது 2024.02.01 முதல் 15 வருடங்களுக்கு ) |
| 18 | இல 15 கடை அறை | 10,500.00 | 9,450.00 | 5,000.00 | 2024.02.01 – 2039.01.31 (அதாவது 2024.02.01 முதல் 15 வருடங்களுக்கு ) |
| 19 | இல 17 கடை அறை | 7,600.00 | 6,840.00 | 5,000.00 | 2024.02.01 – 2039.01.31 (அதாவது 2024.02.01 முதல் 15 வருடங்களுக்கு ) |
| 20 | இல 25 கடை அறை | 9,400.00 | 8,460.00 | 5,000.00 | 2024.02.01 – 2039.01.31 (அதாவது 2024.02.01 முதல் 15 வருடங்களுக்கு ) |
| 21 | இல 26 கடை அறை | 9,400.00 | 8,460.00 | 5,000.00 | 2024.02.01 – 2039.01.31 (அதாவது 2024.02.01 முதல் 15 வருடங்களுக்கு ) |
| 22 | இல **675/B/02** கடை அறை | 12,200.00 | 10,980.00 | 5,000.00 | 2024.02.01 – 2039.01.31 (அதாவது 2024.02.01 முதல் 15 வருடங்களுக்கு ) |
| 23 | இல **675/B/03** கடை அறை | 12,200.00 | 10,980.00 | 5,000.00 | 2024.02.01 – 2039.01.31 (அதாவது 2024.02.01 முதல் 15 வருடங்களுக்கு ) |
| 24 | இல **675/B/04** கடை அறை | 12,200.00 | 10,980.00 | 5,000.00 | 2024.02.01 – 2039.01.31 (அதாவது 2024.02.01 முதல் 15 வருடங்களுக்கு ) |
| 25 | இல **675/B/05** கடை அறை | 21,900.00 | 19,710.00 | 5,000.00 | 2024.02.01 – 2039.01.31 (அதாவது 2024.02.01 முதல் 15 வருடங்களுக்கு ) |
| 26 | எவரிவத்த தபாலகம் கீழ் மாடியை குத்தகைக்கு விடல் | 8,500.00 | 7,650.00 | 5,000.00 | 03 வருடங்களுக்கு ஒருமுறை புதிய மதிப்பீட்டின் படி ஒப்பந்த காலத்தை நீடிக்கும் அடிப்படையில் |
| | இல 26 இல் குறிப்பிடப்படும் சொத்துக்களுக்கு மீளளிக்கப்படாத முற்பணமாக ரூ.750,000/- தொகையை நகர சபைக்கு வைப்புச் செய்தல் வேண்டும். | | | | |
| 27 | எவரிவத்த தபாலகம் கீழ் மாடியை குத்தகைக்கு விடல் | 20,000.00 | 18,000.00 | 5,000.00 | 2024.01.01 – 2038.12.31 (அதாவது 2024.01.01 முதல் 15 வருடங்களுக்கு ) |
| | இல 27 இல் குறிப்பிடப்படும் சொத்துக்களுக்கு அரச புதிய மதிப்பீடு கிடைத்த பின்னர் அவ் அரச மதிப்பீட்டு வாடகைத் தொகையை செயற்படுத்துவதற்கு உட்படுத்தப்படும | | | | |

**விடயம்**
**வத்தளை மாபோல நகர சபையில்**
**2023.11.02**

**பீ.ஏ.எஸ்.எஸ். சந்தருவன்**
**நகர சபையின் செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம்,**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**
**வத்தளை மாபோல நகர சபை**

---

**புத்தசாசன, சமய, மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு**
**பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்**

# விலைமனுக்கோரல்

1. **மறைந்த சுணில் அசங்க மாக்கேவிட்ட பரம்பரைக்கு சொந்தமான மாதம்பே, புதிய நகரம், உரலியாகார கம, ஜயா மாவத்தையில் அமைந்துள்ள கட்டிடத்துடன் கூடிய 20 பேர்ச் நிலம்.**
2. **எல்பட் பீரிஸ் விக்ரமசிங்ஹ பரம்பரைக்கு சொந்தமான பலாதொட்ட களுத்துறை தரிசு நிலம் விலேகொட விலேகொட, களுத்தறை வடக்கு எனும் முகவரியிலுள்ள 05 ஏக்கர் 03 ரூட் 12.25 பேர்ச்சஸிலான விசாலமான பயன்படுத்தப்படாத வயல் காணி விற்பனைக்கு**

மேற்கூறிய காணிகளை விற்பனை செய்வதற்கு விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன.

**பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம், வங்கிக் கணக்கு இலக்கம் மற்றும் கிளை** உட்பட விண்ணப்பத்தினை தயாரித்து மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூ.5,000** மற்றும் மீளளிக்கப்படும் கட்டணமாக ஐம்பதாயிரம் ரூபாவை **(ரூ.50,000/-)** பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் காசாளரிடம் பணமாக செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் அல்லது **பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பொது அறங்காவலர், இலங்கை வங்கியின் டொரிங்டன் கிளையில், கணக்கு இலக்கம் 2323296** க்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றினை **2023.11.23 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு முன்னர் **"சுணில் அசங்க மாக்கேவிட்ட மற்றும் எல்பட் பீரிஸ் விக்ரமசிங்ஹ பரம்பரை சொத்து"** என அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரலை கிழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள மனுக்கள் சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடல் வேண்டும். **அன்றைய தினம் பி.ப.2.00** மணிக்கு மனுக்கள் திறக்கப்படுவதுடன் விண்ணப்பதாரர் அல்லது விண்ணப்பதாரரிடமிருந்து அங்கீகாரக் கடிதத்தைத் பெற்றுக்கொண்ட பிரதிநிதிகள் அச்சந்தர்ப்பத்தில் பங்கேற்கலாம். இது தொடர்பான மேலதிக தகவல்களை **கணக்காளரிடம் 011-2581827** பெற்றுக்கொள்ளலாம்

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் மற்றும் இறுதி தீர்மானம் எடுக்கும் முழுமையான உரிமை பொது நம்பிக்கை பொறுப்பு திணைக்களத்தின் கொள்முதல் கொண்டுள்ளது.

இந்த நிலத்தை வாங்குவதற்கான வாய்ப்பு உங்களுக்கு வழங்கப்பட்டால், உங்களால் விண்ணப்பிக்கப்படும் மதிப்பு மொத்தமாக செலுத்தப்பட வேண்டும் மற்றும் சட்டத் தேவைகளை பூர்த்தி செய்த பின்னர் சொத்து மாற்றப்படும்.

**இலங்கை பொது நம்பிக்கை பொறுப்பு திணைக்களம்,**
**பொது நம்பிக்கை பொறுப்பு திணைக்களம்,**
**இலக்கம் 2, புலர்ஸ் ஒழுங்கை, கொழும்பு 07.**

SELACINE

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

**நிதி அமைச்சு**

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

# பெறுகை அறிவித்தல்

## உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகம், நவம் மாவத்தை அலுவலகம் மற்றும் ஜாவத்தை நகர அலுவலகம் மற்றும் பாலதக்ஷ கட்டடம் போன்ற அலுவலகங்களின் கட்டிடப் பராமரிப்பு சேவைகளை கொண்டு நடாத்துவதற்காக தொழில்நுட்பவியலாளர்களை வழங்குதல் - 2024

